பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 16 வியாழக்கிழமை (29.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 154

# கடத்தல், கொள்ளை, கொலைகளைத் தடுக்க பொலிஸ் -இராணுவம் கூட்டாகக் களத்தில்!

## தேவை ஏற்படின் திடீர்சோதனைகள் நடத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஏப். 29

யாழ். குடாநாட்டில் கடத்தல், கப்பம் கோரல், கொலை போன்ற குற்றச் செயல்களை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸாருடன் இணைந்து இராணுவமும் துரிதமாகச் செயற்படும். இதன் முதற் கட்டமாக யாழ். மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஆள்கடத்தல் பீதியை முற்றாக நீக்கத் தேவை ஏற்படும் வேளைகளில் இராணுவம் திடீர் சோதனைகளை மேற்கொள்ளும்.

குடாநாட்டில் கடத்தல், கப்பம்கோரல், கொலை ஆகிய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் எமக்கு அவசியம். மக்களின் நன்மைக்காக நாம் இராணுவக் காவலரண்களை அகற்றியிருந்தோம். இப்போது ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலையில் திடீர்ச்சோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மக்களின் நன்மைக்காகவே நாம் இதைச் செய்கின்றோம். இதனை யாரும் தப்பான கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டாம்.

இவ்வாறு தெரிவித்தார் 51ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சரத் விஜயசிங்க.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் அமைந்துள்ள 51ஆவது படையணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே கட்டளைத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் யாழ். நகரப் படைத் தளபதி மேஜர் நிஷங்க 512ஆவது பிரிகேட்டின் தளபதி கேணல் அஜித் பல்லவல ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கட்டளை அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு -

யாழ். மக்களின் இயல்பு வாழ்வைக் கருத்தில் கொண்டு நாம் பல்வேறு இடங்களிலும் (24ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள்

வன்னியில் கடந்த வருடம் நடைபெற்ற போரின் போது மக்களால் கைவிடப்பட்டு இப்போது மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் ஆயிரம் சைக்கிள்கள் மே மாதம் 6ஆம் திகதி தொடக்கம் உரிமையாளர்களுக்குக் கையளிக்கப்படவுள்ளன. அவற்றின் விவரப் பட்டியலை கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். அந்தப் பட்டியலை 4ஆம் பக்கத்தில் பாருங்கள்.

## யாழ். கோட்டைப் பகுதிக்குள் மக்கள் செல்லத் தடையில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.கோட்டைப்பகுதிக்குள் பொது மக்கள் சென்று பார்வையிடுவதற்கு எந்த விதமான தடையும் இல்லை. மக்கள் அங்கு சுதந்திரமாகச் சென்று வரலாம் என 51 ஆவது படையணியின் கட்டளைஅதிகாரி பிரிகேடியர் சரத் விஜயசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், யாழ். கோட்டைப்பகுதி பொது மக்களின் பாவனைக்காக இராணுவத்தால் திறந்துவிடப்பட்டிருக்கின்றது. அங்கு செல்வதற்கு பொதுமக்களுக்கு எவ்வித தடையுமில்லை. காலை முதல் மாலைவரை (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் யுத்தக் குற்றம் குறித்து விவரம் திரட்டும் ஆஸி. சட்டத்தரணிகள்

கொழும்பு,ஏப்.29

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசுத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியில் ஆஸ்திரேலிய நாட்டு இளம் சட்டத்தரணிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

சர்வதேச யூரிகள் ஆணைக்குழுவின் ஆஸ்திரேலியாவுக்கான கிளையுடன் இணைந்து அந்நாட்டு இளம்சட்டத்தரணிகள் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அரசியல் தீர்வு குறித்து இந்தியத் தரப்புடன் பீரிஸ் பேச்சு

கொழும்பு,ஏப்.29

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண்கின்றமை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் பூட்டானின் தலைநகர் திம்புவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பேச்சுக்களை நடத்தியுள்ளார் என இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பூட்டான் சென்றிருக்கும் இரு அமைச்சர்களும் இலங்கையின் சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றமை (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாயார் விவகாரம் குறித்து இந்திய அரசு பதிலளிக்க வேண்டும்

### சென்னை உயர் நீதிமன்று உத்தரவு

சென்னை,ஏப்.29

சென்னையில் சிகிச்சை பெற வந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பியது குறித்து மத்திய அரசை உடனடியாக பதில் அளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் சிகிச்சைக்காக மலேஷியாவில் இருந்து அண்மையில் சென்னை வந்தார். அவர் விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டார்.

இதை எதிர்த்து சட்டத்தரணி கருப்பன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் பொது நலன் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். அதில், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக கடந்த 16ஆம் திகதி மலேஷியாவில் இருந்து சென்னை வந்த பார்வதி அம்மாளை குடியுரிமை அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

விஸா உள்ளிட்ட உரிய அனுமதியுடன் வந்த பார்வதி அம்மாளை, இந்தியாவுக்குள் அனுமதிக்காதது சர்வதேச மனித உரிமை மீறல். இதனால் பார்வதி அம்மாளை தனி விமானம் மூலம் மீண்டும் சென்னை அழைத்து வர மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு எதிராக சார்க் நாடுகள் போராட வேண்டும்

### பூட்டானில் நேற்று ஜனாதிபதி பேச்சு

கொழும்பு,ஏப்.29

மேற்கு நாடுகளிலிருந்து வரும் அழுத்தங்களுக்கு எதிராக தெற்காசிய நாடுகள் கடுமையான முறையில் போராட வேண்டும் - என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளின் தீர்வுத் திட்டங்கள் பலவந்தமாகத் திணிக்கப்படுவதை சார்க் நாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் அவர் கூறினார்.

பூட்டானின் தலைநகர் திம்புவில் நேற்று நடைபெற்ற 16 ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவற்றைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தெற்காசிய வலய நாடுகள் வெளிச் சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது, ஸ்திரமான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். (24ஆம் பக்கம் பார்க்க)



## இராணுவ உதவிகள் தொடரும்; இலங்கைக்கு பாகிஸ்தான் உறுதி



கொழும்பு,ஏப்ரல்29

இலங்கைக்குத் தேவையான இராணுவ உதவிகளைப் பாகிஸ்தான் தொடர்ச்சியாக வழங்கும் என்றும் - இலங்கையின் விமானப்படைக்குத் தேவையான பயிற்சிகளும், உதிரிப்பாகங்களும் வழங்கப்படும் என்றும், அந்த நாட்டுப் பிரதமர் உறுதி அளித்திருக்கிறார்.

'சார்க்' உச்சி மாநாடு இடம்பெறும் பூட்டானில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தவேளை, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு மீண்டும் அழைப்பு விடுத்துள்ள அவர், மிகக் கடினமான தருணத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்பியமைக்காக நன்றி தெரிவித்துள்ளதுடன், அங்கு இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவத்திற்கு கவலையும் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பாகிஸ்தான் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையுடன் பாரம்பரியமாக, நெருக்கமான நட்புறவுடன் இருந்துவரும் உறவை பாகிஸ்தான் பெரிதும் மதிக்கின்றது.

மிகக் கடினமான தருணங்களில் இரு நாடுகளும் பரஸ்பரம் மற்றைய நாட்டிற்கு உதவியாக நின்றுள்ளன.

பரஸ்பர அக்கறையுடைய விடயங்களில் இரு நாடுகளுக்கும் பொதுவான கருத்துள்ளது.

நாம் எமது நிலையை பிராந்திய, சர்வதேச மன்றுகளில் மேலும் நெருக்கமாக ஒருங்கிணைக்கவேண்டும். (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வருக்குப் பாராட்டுக்கள்

எமது யாழ்.மாநகரசபை மேயர்

**யோகேஸ்வரி பற்குணராஜா**



அவர்கள் எந்தவித பக்கச்சார்பாகவும் செயற்படாது நடந்து கொண்டதற்கு அனேகமான மக்களின் பணிவான வேண்டுதலுக்கு இணங்கி அலசி ஆராய்ந்து பெரிய ஹோட்டல் நிர்மாணிக்கும் விடயத்தில் சரியாகச் செயல்பட்டதற்கு லாலாசோப் ஸ்தாபனத்தினரின் மனமுவந்த பாராட்டுக்கள். எமது யாழ்.குடாநாட்டிற்கு வருங்காலத்தில் நிச்சயமாக இத்தகைய ஹோட்டல்கள் அதிமுக்கியமாகத்தேவை ஏற்படும் பட்சத்தில் பொருத்தமான, பெறுமதியான இடங்களில் அமைவது மிகவும் முக்கியமானது. சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டால் மிகவும் நல்லது.

**லாலாசோப் தொழிற்சாலை, அச்சுவேலி.**



## Barnabas இன் மலிவு விற்பனை

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

5 வருட உத்தரவாதம்

★ 40 % Special Offer, 40% கழிவுடன்...
★14" Wega Sony, 21" Wega Sony, 29" Wega Sony மற்றும் G 21 T.V.கள்
★DVD Player, Amp, Box, Dish Antenna, Home தியேட்டர் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மிகக்குறைந்த விலையில்




**பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்**
360/1, பிரதான விதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728, 0777443668

**மதன் எலக்ரோனிக்ஸ்**
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
0217901574, 0777448668.


## 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

செந்தில்குமார் அனுராதா தம்பதியினரின் செல்வப்புதல்வி

**செல்வி எஸ்.கபிஸ்னா** தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று 29.04.2010 வியாழக்கிழமை 4 மணியளவில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அப்பப்பா சரவணமுத்து, அப்பம்மா சறோஜினிதேவி, அம்மப்பா ஆறுமுகம், அம்மம்மா அன்னலட்சுமி,மாமா சுபாஸ்கரன், பெரியப்பா அருளானந்தம், பெரியம்மா அனுசூயா, அக்கா நிதி, வித்தியா ஜேர்மன் மாமா, அத்தை, சுவிஸ் மாமா , அத்தை, மச்சான்மார், மச்சாள்,லண்டன் சித்தா, சித்தி இத்தாலி, இந்தியா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார் நற்பண்புடன் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றார்கள்.




தகவல்: எஸ்.செந்தில்குமார்
உரிமையாளர் (கபிஸ்னா பேக்ஹவுஸ்)
அச்சுவேலி.
துரையப்பா அவெனியூ
பத்தமேனி, அச்சுவேலி.

## தவறிவிட்டது

பலாங்கொடையைச் சேர்ந்த விஜயன்னன் விஜயகாந் என்பவருடைய அடையாள அட்டை (920747079 V) நாச்சிமார் கோயில், கலட்டிச்சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தொ.பே: 0772718362, 0777946620
92, ஐயனார் கோயில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

## மினி பஸ்ஸில் பெண்ணின் சங்கிலி அபேஸ்!

ஆனைக்கோட்டை, ஏப். 29

மானிப்பாயிலிருந்து யாழ்.மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துதிரும்பிய வயோதிபப்பெண்ணின் தங்கச்சங்கிலி தனியார் மினி பஸ்ஸில் வைத்து அபகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மாதகல் நோக்கிச் சென்ற மினிபஸ்ஸில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

மானிப்பாயைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதிபப் பெண் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் (2½) சங்கிலி பஸ்ஸில் பயணித்த வேளை திருட்டுப்போய் விட்டது. சங்கிலியைக் காணாத பிரஸ்தாப மூதாட்டி சாரதியிடம் முறையிட்டார். அதை அடுத்து மினி பஸ்ஸை நிறுத்தி தேடியபோது எவரும்அகப்படவில்லை.

குடாநாட்டில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் மக்கள் அவதானமாகச்செயற்படுவதுடன் தங்கள் பொருள்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். (ஒ-10-20)

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 29

தெல்லிப்பழை அருள்மிகு காசிவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 8 ஆம் திகதி தீர்த் தோற்சவமும் நடைபெறும். (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### புராண வித்தக மாமணி செல்லையா செகராசசேகரம்



செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், அணிஞ்சியடி, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட புராண வித்தக மாமணி செல்லையா செகராசசேகரம் ( ஆயுள்வேத சித்த வைத்தியரும், புன்னையடி வைரவர் கோவில் பூசகரும்) நேற்று (28.04.2010) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், தெய்வானை, தேவநாயகி, செல்வகுலசிங்கம் (தம்பி), செந்தில்நாதன் (முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், மருதங்கேணி), மகேஸ்வரி, செல்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக ஞானசாரியார் வீதி, வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அணிஞ்சியடி, கரவெட்டி. தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கனகபூரணம் சுப்பிரமணியம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகபூரணம் சுப்பிரமணியம் 25.04.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கருணாமூர்த்தி, மனோரஞ்சிதம், சிவானந்ததேவி, கெங்காதேவி, சாந்தபவான், மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலக்சுமி, நித்தியானந்தம், பரமராஜா, சியாமளா, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருளானந்தம் கனகம்மாவின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக்கிழமை சுதுமலை மத்தி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப2 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மத்தி, மானிப்பாய்.
தொ.பே. 021 4591531,
0779866572 (97703)

தகவல்:
சு.பரமராஜா (மருமகன்).
சு.கருணாமூர்த்தி (மகன்).

### திருமதி இராஜேந்திரன் புஸ்பராணி



யாழ்ப்பாணம், பிறவுண் றோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேந்திரன் புஸ்பராணி நேற்று (28.04.2010) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - சிவபுண்ணியவதி தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற இராஜேந்திரனின் (யாழ். மாநகரசபை) அன்பு மனைவியும் யாழ். ரமணன் (சட்டத்தரணியும், இசையமைப்பாளரும்), அருந்ததி (கனடா), சிவகணேஷ் (நோர்வே) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஆனந்தன், சத்தியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரஞ்சனி, ஜெபஜீவி, சிறீகாந்தா, நித்தியானந்தராஜா ஆகியோரின் மாமியும், நிருத்திகன், ரிஷிகன், அரவிந்தன், நேகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று மாலை (28.04.2010) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

242, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (97705)

தகவல்: யாழ். ரமணன்
குடும்பத்தினர்.

### திருமதி சாந்தகுமார் வாசுகி



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமார் வாசுகி நேற்று (28.04.2010) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தகுமாரின் அன்பு மனைவியும் அமரர் அபிநயனின் அன்புத் தாயும், தேவராசா பரமேஸ்வரி தம்பதியினரின் மூத்த மகளும் நிருசினி, ஜெகதீபன் (சுவிஸ்), நிஷாந்தினி, ஜெகதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ருசானி, ருஜீபன், சுபித்தா ஆகியோரின் பெரிய தாயும் சிவபாலசுந்தரம் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீகுமார், விஜயகுமார் (பொலிஸ் உத்தியோகத்தர், திருகோணமலை), வசந்தகுமார், சந்திரகுமார்,உதயகுமார், தர்மிலா, திருஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.
தொ.பே: 021 321 9432 (97395)

தகவல்: தேவராசா
குடும்பத்தினர்.

## கொழும்பு பல்கலைக்கழக டிப்ளோமா

கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பகுதி நேரமாக பயிலக்கூடிய இக்கற்கைநெறிக்கான காலம் ஓர் ஆண்டு ஆகும். பட்டதாரி மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார்துறை ஊழியர்கள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். பூர்த்தி செய்வோர் பல்கலைக் கழகத்தின் தகவல்தொழில் நுட்பமாணி பட்டக்கற்கை நெறியையும் தொடர முடியும்.

A/L, O/L பரீட்சைக்குத் தோற்றத் தவறியோரும் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அடிப்படைக்கணனிக் கற்கை நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் மேற்படி கற்கை நெறியைத் தொடர முடியும். மேலதிக விபரங்களையும் ரூபா 100,000 பெறுமதியான புலமைப்பரிசில் சம்பந்தமான தகவல்களையும் இல. 324 பலாலி வீதி, பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ் தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## 35 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 19 ★ 09 ★ 1931



உதிர்வு 26 ★ 03 ★ 2010

### திருமதி கந்தையா கனகம்மா

கடந்த 26.03.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி கந்தையா கனகம்மா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (28.04.2010) புதன் கிழமை நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகளும், மதியபோசனமும் இன்று (29.04.2010) வியாழக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை. (97389) குடும்பத்தினர்.

## வில்லூன்றியில் நேற்று தீர்த்தச் சங்கற்பம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் நேற்றுப் புதன்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெற்றன.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் காலை வேளையில் விசேட பூஜைகள் மற்றும் அபிஷேகமும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது. பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்வதற்கும் நூற்றுக் கணக்கானோர் திரண்டுவந்தனர். (ஒ-14)

## திறப்பு விழா

வலி.வடக்கு, ஏப். 29

'சென்ரல் இன்வெஸ்ட்மென்ட்' நிறுவனத்தின் 10 ஆவது கிளை நாளை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலந்து கொள்வதுடன்மற்றும்யாழ்.குடாநாட்டின் முக்கிய [illegible] கலந்துகொள்வுள்ளனர். (6-86)


### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CENTURY, FUJI CENTRAL வகை சினிமா புரொஜக்டர்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள், LENSES, ரெக்டிபயர், றபர் [illegible]
தொடர்பு: 0776173835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வட புலத்தில் வன்முறைகள் நீடிப்பது நம்பிக்கையீனத்தையே உருவாக்கும்

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாகியிருக்கின்றது யாழ்.குடாநாட்டு மக்களின் நிலைமை.

யுத்தத்தின் சத்தம் ஓய்ந்தாலும், அதையொட்டிய அடக்கு முறைகள், கெடுபிடிகள் இன்னும் முற்றாகத் தளரவில்லை.

யுத்தத்தின் பேரழிவுகளிலிருந்து - போரின் பேரவலங்களிலிருந்து - யாழ்.குடாநாட்டு மக்கள் உட்பட ஈழத் தமிழர் தாயகத்தின் அனைத்து மக்களும் இன்னும் மீளவில்லை. நெருக்குவாரங்கள், அழுத்தங்கள், தொந்தரவுகள் இன்னும் குறைந்துவிடவில்லை. சுருங்கச் சொல்வதானால் இயல்பு நிலைமை இன்னுமே தோற்றவில்லை.

அதற்கிடையில் 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய மாதிரி' யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் அச்சவுணர்வு மீண்டும் உச்சத்தைத் தொடும் வகையில் நிலைமை மாறிவிட்டிருக்கின்றது.

ஆள்கடத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகம், கப்பம் கோருவது, அதற்கான படுகொலைகள் என்று திடீரெனத் தலைதூக்கியிருக்கும் மோசமான கிரிமினல் சம்பவங்கள் - வன்முறைகள் - தங்களின் சொந்த நிர்வாகக் கட்டமைப்பு இல்லாத நிலையில் தாயகத்தில் தங்களுக்கு இருப்பியல் பாதுகாப்புக் கூடக் கிடையாது என்ற எண்ணவோட்டத்தையே தமிழர்கள் மத்தியில் மீளவும் ஏற்படுத்தி, உறுதிப்படுத்தி நிற்கின்றன.

ஒருபுறம் வன்முறைகள், குற்றச்செயல்கள் மோசமாக அதிகரித்துள்ளன. மறுபுறம் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கான விளைமையமாகக் குடாநாடு மாற்றப்பட்டிருக்கின்றது.

கட்டுரையாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகின்றமை போல இதுநாள் வரை பண்பாட்டின் பெருநிலமாக - நற்பழக்க வழக்கங்கள், மாண்புமிக்க மனிதநேயப் பண்பியல்புகள் போன்றவற்றின் குறியீட்டு மையமாக - விளங்கிய குடாநாடு இன்று குற்றச் செயல்கள் நிறைந்த குட்டிச் சுவராகிப் போயிருக்கின்றது. இதற்கு 'ஏ- 9'வீதித் திறப்போடு சகல வழிகளிலும் கிடைத்த ஒரு திறந்து விடப்பட்ட சுதந்திரத் தன்மைப் போக்கோடு யாழ்ப்பாணம் திடீரென உப்பிப் பெருத்தமையே காரணம் என்று அவர் குறிப்பிடுகின்றமையும் கவனிக்கத்தக்கது.

'யாழ்.குடாநாட்டில் உள்ள எல்லாமே மேய்ச்சலுக்காகத் திறந்துவிடப்பட்ட வெளியாக மாறியிருக்கையில் யார் வந்து என்ன செய்தாலும் பெரிதாக வெளியே தெரியப்போவதில்லை. இது, குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. எனவே, தம்முடைய கைவரிசையை எல்லா இடங்களிலும் அவர்கள் காட்ட முற்படுகின்றார்கள்.' - என்று கூறப்படுவதிலும் தப்பில்லை.

ஆனாலும் இன்னும் ஒரு விடயமும் இதில் கவனிக்கப்பட வேண்டும்.

குற்றச் செயல்கள் மலிந்து, அடாவடித்தனங்களும், அத்துமீறல்களும் எல்லை மீறும் ஒரு பிரதேசத்துக்கு சுற்றுலாவுக்கோ, இடங்களைப் பார்வையிடுவதற்கோ பிற இடத்துப் பயணிகள் வரமாட்டார்கள். அச்சத்தின் காரணமாகப் பின் வாங்குவார்கள்.

ஆனால் யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை இவ்விடயம் தலைகீழாக நடைபெறுகிறது. ஒருபுறம் குடாநாட்டு மக்கள் வன்முறைகள், கிரிமினல் குற்றச் சம்பவங்கள், அடாவடித்தனங்கள் போன்றவற்றைக் கண்டு அச்சப்பட்டு பீதியில் உறைய, மறுபுறம் தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகளோ அவற்றைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் - கவனத்தில் கூட எடுக்காமல் - சர்வ சாதாரணமாக குடாநாட்டுக்குப் பெரும் எண்ணிக்கையில் தினசரி வந்து போகின்றார்கள். மிகப் பாதுகாப்பாக வந்து போகின்றார்கள். யாழ்.குடாநாட்டையும் குடாநாட்டு மக்களையும் 'வேடிக்கை' பார்க்க வரும் தென்னிலங்கைப் பயணிகள் எண்ணிக்கை - 'படையெடுப்பு' - குறைவதாகவே இல்லை.

இந்த வன்முறைகள், கிரிமினல் நடவடிக்கைகள் குறித்து அலட்டிக் கொள்ளாமல் - அச்சப்படாமல் - அவர்கள் தமது யாழ். 'விசிட்'டை சர்வசாதாரணமாக முன்னெடுக்கின்றார்கள்.

நடக்கும் விபரீதங்கள் குறித்துப் பயம், பீதி எல்லாம் குடாநாட்டு வாசிகளுக்கே தவிர, அங்கு தினசரி பல்லாயிரக் கணக்கில் 'விசிட்' செய்யும் - அல்லது வியாபாரத்துக்காகப் படையெடுத்திருக்கும் - தென்னிலங்கையருக்கு இல்லை என்ற எண்ணம் அவர்களுக்கு உறுதியாக உண்டு. அதனால் இந்த விபரீதச் சம்பவங்கள் குறித்து அவர்கள் சிரத்தைப் படுவதே இல்லை.

இதற்குள் ஒரு பூதாகார விடயம் பொதிந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தங்களுக்கு எதிராக இத்தகைய வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படமாட்டா என்ற உறுதி நிலைமை தென்னிலங்கையிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வருகை தருவோருக்குத் தைரியமாக மனதில் விதைக்கப்பட்டிருக்க -

மறுபுறத்தில் குடாநாட்டு வாசிகளுக்கோ தமது அன்றாட இருப்பியலே சந்தேகத்துக்குரியதாகிவிட்டது, வன்முறைக் குற்றங்கள், கிரிமினல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட குழுக்களால் தங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன என்று அஞ்சி நடுங்கும் சூழ்நிலை வந்திருக்கின்றது.

இத்தகைய இருதுருவ நிலைப்பாட்டைப் பரிசீலனைக்கு எடுத்துக் கணிப்போரே, இப்படி யாழ். குடாநாட்டு மக்களைப் பீதிக்குள் ஆழ்த்தும் தரப்புகளின் சூத்திரதாரி யார் என்பதை இலகுவாக உத்தேசித்துக் கொள்வார்கள்.

தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன் ஆகியோர் கோரியுள்ளமை போல இத்தகைய மோசமான குற்றங்களின் சூத்திரதாரிகள் தாமதிக்கப்படாமல், விரைந்து கைது செய்யப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்படவேண்டும்.

அப்போதுதான் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு இந்த ஆட்சிக் கட்டமைப்பின் மீது கொஞ்ச, நஞ்ச நம்பிக்கையாவது பிறக்கும். செய்வார்களா........?

# மின் கட்டணத்தை விரைவாகச் செலுத்த மக்கள் வங்கிக் கிளைகளில் கரும பீடங்கள்

## இன்று வைபவ ரீதியாகத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தும் நடைமுறையை விரிவுபடுத்தும் நோக்கில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட கருமபீடங்கள் இன்று வியாழக்கிழமை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளன.

சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலேயே இந்த விசேட கரும பீடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த விசேட கருமபீடங்கள் மூலம் மின் கட்டணமாக செலுத்தும் தொகை 'ஒன்லைன் மூலமாக உடனடியாகவே மின் பாவனையாளர்களின் மின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகளினால் திறந்து வைக்கப்படவுள்ள இந்த புதிய கரும பீடங்கள் மூலம் மின் பாவனையாளர் தமது கணக்கில் வரவு வைப்பதற்கு ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த நடைமுறை இலங்கை மின்சார சபை வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் காரியாலயத்திலும் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் யாழ்.பிரதம தபாலகத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை மின்சார சபையின் அனுசரணையுடன் பரந்து நிறுவப்படும் இந்தக் கருமபீடங்கள் அவசியம் ஏற்படும் பட்சத்தில் மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-14)

## வடமராட்சியில் பல இடங்களில் தொலைபேசிச் சேவைகள் விஸ்தரிப்பு

வடமராட்சி,ஏப்.29

வடமராட்சிப் பிரதேசத்தில் சிறிலங்கா ரெலிக்கொம்மின் கேபிள் தொலைபேசி இணைப்புச் சேவைகள் விஸ்தரிக்கப்படுகின்றன.

இதுவரை காலமும் இப்பிரதேசத்தில் கேபிள் இணைப்புக்கள் மேற்கொள்ளப்படாத பல இடங்களுக்கு கற்தூண்கள் நடப்பட்டு கேபிள் வயர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், தொலைபேசி இணைப்புக்கான லூப் வசதி இல்லாத, புதிதாக கேபிள் லைன் வயர்கள் இணைக்கப்பட்ட பல இடங்களில் லூப் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பாவனையாளர்களுக்கான சேவை மிகவும் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் இப்பிரதேசத்தில் சுமார் இரண்டாயிரம் பேருக்கே கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. தற்போது புதிதாக 500 இணைப்புக்கள் மேலும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் புதிய இணைப்புக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் நிறுவனத் தொலைபேசி சேவைகளும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. டயலொக், மொபிரெல், ஹட்ச் ஆகிய நிறுவனங்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை, ஆத்தியடிச்சந்தி, புலோலி, நெல்லியடி ஆகிய இடங்களில் தத்தமது தொலைபேசிச் சேவைகளின் விஸ்தரிப்புக்காக தொலைத் தொடர்புக் கோபுரங்கள் பலவற்றை அமைத்துள்ளன. (4-236)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரு மீள் எழுச்சித் திட்டக் கிராமங்கள்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள் எழுச்சித்திட்ட மையக் கிராமங்களாகச் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி, ஊரெழு கிழக்கு ஆகியவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்களில் பங்கேற்பிலான கிராமியக் கணிப்பீடு, பங்கேற்பிலான தேவை இனங்காணல், அறிக்கைகள் தயாரித்தல் என்பன தற்போது நடைபெற்று வருகின்றன.

சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமத்தில் கடந்த 27ஆம் 28ஆம் திகதிகளில் இவை நடைபெற்றன. ஊரெழு கிழக்கு கிராம அபிவிருத்தி அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெற உள்ளன.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகம், பிரதேச சபை, விவசாயத் திணைக்களம், ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் கடற்றொழில் பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோர் பங்கெடுத்துவருகின்றனர். (50-121)

## கைதடிக்கும் கோப்பாய்க்கும் இடையே பாலம் அமைக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பமாகின

நாவற்குழி, ஏப்.29

கைதடிக்கும் கோப்பாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் பாலம் அமைக்கும் வேலைகள் மீண்டும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பாலத்திற்கான கொங்கிறீற் வேலைகள் பெருமளவுக்கு நிறைவு பெற்றுள்ளன. பழைய பாலத்தின் காலாவதியான கொங்கிறீற் கட்டுமானங்களை உடைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பால வேலைகள் கடந்தகால அசாதாரண சூழ்நிலையால் இவ்வீதி தடைப்பட்டதால் நிறுத்தப்பட்டன. தற்போது மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (50-121)

## கல்வி வலயப் பணியாளர்களுக்கும் விரைவில் சுழற்சி முறையில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ். குடாநாட்டில் உள்ள கல்வி வலய அலுவலகங்களில் கடமை புரியும் பணியாளர்களும் சுழற்சி முறையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

கல்வி வலய அலுவலகம் ஒன்றில் தொடர்ந்து 5 வருடங்கள் பணியாற்றும் பணியாளர்களே இவ்வாறு இடமாற்றம் பெறவுள்ளனர் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இடமாற்றத்துக்கான பட்டியல்கள் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. பெரும்பாலும் குறித்த இடமாற்றங்கள் மே மாதத்தில் இருந்து அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. (4-224)

### கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

## ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற ஓய்வுபெற்ற வைத்தியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,29

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்கு இளைப்பாறிய வைத்திய உத்தியோகத்தர்கள், பதிவு வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் மீள்நியனம் பெறும் உத்தியோகத்தர்களுக்கு இளைப்பாறும் போது அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளம் மற்றும் விசேட படிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்பும் வைத்தியர்கள், அடுத்தமாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் தமது விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை 'செயலாளர்' சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (50-14)

## விழிப்புலனற்றோருக்கான கிரிக்கெட்: மட்டு. - யாழ்.அணிகள் மோதல்!

யாழ்ப்பாணம், ஏப்.29

மட்டக்களப்பு விழிப்புலனற்றோர் சங்கத்தின் விளையாட்டுக்கழக அணி ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இந்த விளையாட்டுக்கழக அணி யாழ். விழிப்புலனற்றோர் சங்க விளையாட்டு கழக அணியுடன் கிரிக்கெட் போட்டி ஒன்றில் மோதவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான இந்தக் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள் விரைவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (4-224)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 17 | 30.04.2010 வெள்ளிக்கிழமை |
| திதி | : துதியை பி.ப. 05.05 வரை |
| நட்சத்திரம் | : அனுஷம் பி.இ. 05.13 வரை |
| சுபநேரம் | : 05.58 -07.28வரை |
| ராகுகாலம் | : 10.28-11.58 வரை |

## அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளுக்கு விரைவில் மேலதிக தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.29

அரியாலை, கொழும்புத்துறை போன்ற பகுதிகளுக்கு மேலதிக தொலைபேசி இணைப்புகளை யாழ். 'ரெலிக்கொம்' நிறுவனம் வழங்கவுள்ளது.

மாம்பழம் சந்தியில் இதற்காக புதிய பரிவர்த்தனை நிலையம் ஒன்றை விரைவில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக மேற்படி பகுதிகளுக்கு மேலதிகமாகத் தொலைபேசி இணைப்புக்களை வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீட்கப்பட்ட 1,000 மோ.சைக்கிள்கள் வியாழன் கையளிப்பு

கிளிநொச்சி,ஏப்.29

வன்னியில்- கடந்த யுத்தத்தின்போது மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் மக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் மீட்கப் பட்டவற்றுள் 1,000 மோட்டார் சைக்கிள்களை முதற் கட்டமாக எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை கைய ளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

எனவே கீழே குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் உரிமையாளர்கள் இன்றும் நாளை வெள்ளிக் கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் கிளிநொச்சி திரு நகரில் அமைந்துள்ள வாகனங்கள் பராமரிப்பு நிலையத் துக்கு வாகனப் பதிவுப் புத்தகம், வருமான வரிப் புத்தகம், காப்புறுதிப் பத்திர்ம், பொலிஸ் முறைப்பாட்டுப் பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பனவற்றுடனும் அவற் றின் இரண்டு போட்டோப் பிரதிகளுடனும் சமுகமளிக் குமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை இங்கு தரப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் பட்டியலை கிளிநொச்சி,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகங்களி லும் (கச்சேரி) பார்வையிட முடியும் எனவும் அவர் அறி வித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்களின் விவரப் பட்டியல் வரு மாறு:-

| தொடர் இலக்கம் | பதிவு இலக்கம் | வகை |
|---|---|---|
| 1 | SRI 102-2390 | HONDA |
| 2 | JV-6964 | HEERO HONDA |
| 3 | GW-5536 | BOXER |
| 4 | HZ-2260 | HONDA MD90 |
| 5 | MV-2249 | SUPER CUP |
| 6 | 5020594 | HONDA |
| 7 | 14-4796 | HONDA MD90 |
| 8 | MM-4191 | HEERO HONDA |
| 9 | GS-6487 | M80 MAIOR |
| 10 | 500-4035 | HONDA |
| 11 | HH-2501 | HEERO HONDA |
| 12 | 139-639 | YAMAHA |
| 13 | SRI 13-3999 | HONDA MD90 |
| 14 | HA-6422 | HONDA MD90 |
| 15 | H0-9530 | HEERO HONDA |
| 16 | 14-4946 | HONDA MD90 |
| 17 | GV-4313 | HEERO HONDA |
| 18 | 1118487 | HONDA MD90 |
| 19 | GU5737 | M80MAIOR |
| 20 | 120-6824 | MATE |
| 21 | 500-8302 | HEERO HONDA |
| 22 | G5-6524 | HEERO HONDA |
| 23 | GK-1637 | HEERO HONDA |
| 24 | 12-4805 | HONDA |
| 25 | JG-8958 | HONDA MD90 |
| 26 | GI-6229 | MATE |
| 27 | 302-4414 | BYK |
| 28 | 2-8250 | - |
| 29 | JR-7454 | HEERO HONDA |
| 30 | H91510 | HEERO HONDA |
| 31 | 12-4560 | YAMAHA |
| 32 | 11W4309 | YAMAHA |
| 33 | 500-4997 | YAMAHA |
| 34 | MD-7756 | HEERO HONDA |
| 35 | MG-7519 | TVS |
| 36 | HI4896 | CT100 |
| 37 | 136-9639 | HONDA |
| 38 | NP3394 | HONDA |
| 39 | 191-2423 | HONDA |
| 40 | 146-2228 | YAMAHA |
| 41 | 117-1230 | HEERO HONDA |
| 42 | 182-3158 | HEERO HONDA |
| 43 | 123731 | - |
| 44 | 14-28073 | HEERO HONDA |
| 45 | C-186 | BOXER |
| 46 | 1453478 | YAMAHA |
| 47 | MC-3069 | YAMAHA |
| 48 | HM-0985 | HONDA MD90 |
| 49 | CAI-7223 | HONDA MD90 |
| 50 | SRI13-8528 | YAMAHA |
| 51 | M9-5569 | TVS |
| 52 | MP2454 | DAIDO |
| 53 | SRI135770 | MATE |
| 54 | SRI0-7857 | HONDA |
| 55 | HP-9864 | HEERO HONDA |
| 56 | ME-3051 | TVS |
| 57 | HA-7526 | DAIDO |
| 58 | HR-4946 | HONDA |
| 59 | 123-5140 | YAMAHA |
| 60 | GA-8987 | MATE |
| 61 | 137-4406 | MATE |
| 62 | SRI-5868 | YAMAHA |
| 63 | C14-2469 | HONDA |
| 64 | DN-0615 | HEERO HONDA |
| 65 | C14-6092 | HONDA MD90 |
| 66 | G2-0896 | HEERO HONDA |
| 67 | 157410 | YAMAHA |
| 68 | SRI301 B584 | SUPER CUP |
| 69 | JD20413 | HEERO HONDA |
| 70 | MN9353 | HEERO HONDA |
| 71 | GF4549 | HONDA |
| 72 | SRI 13-0378 | - |
| 73 | 90-6184 | HONDA |
| 74 | 13-9425 | MATE |
| 75 | SRI13-2591 | HEERO HONDA |
| 76 | SRI132173 | MATE |
| 77 | 41-6939 | TVS |
| 78 | GN-9853 | HONDA |
| 79 | 84SRI6547 | SUPER CUP |
| 80 | 201-0589 | YAMAHA |
| 81 | HE-7285 | HONDA |
| 82 | HK-4113 | HONDA |
| 83 | SRI12-2965 | HONDA |
| 84 | C148884 | HONDA |
| 85 | JY-8592 | HONDA |
| 86 | HE-7323 | HONDA |
| 87 | 500-3205 | MATE |
| 88 | C13284 | YAMAHA |
| 89 | CC-3527 | HONDA |
| 90 | 12-3236 | YAMAHA |
| 91 | HJ-0685 | HEERO HONDA |
| 92 | 127-15 | HEERO HONDA |
| 93 | 14-5278 | HONDA MD 90 |
| 94 | 12-2556 | - |
| 95 | 15-9057 | YAMAHA |
| 96 | 1314179 | YAMAHA |
| 97 | 147-2200 | YAMAHA |
| 98 | WS-6177 | HONDA |
| 99 | 14-5114 | HEERO HONDA |
| 100 | YNNP0368 | HEERO HONDA |
| 101 | 13-1273 | - |
| 102 | HZ-2955 | HONDA |
| 103 | HN22570 | HEERO HONDA |
| 104 | MG-6647 | FREEDON |
| 105 | 158-6012 | YAMAHA |
| 106 | 13-7413 | YAMAHA |
| 107 | 109SRI3231 | YAMAHA |
| 108 | 500-3205 | YAMAHA |
| 109 | HG7373 | HONDA MD90 |
| 110 | 1127585 | DAIDO |
| 111 | 1909126 | HONDA MD90 |
| 112 | 12-1273 | HONDA |
| 113 | MD3101 | HONDA |
| 114 | JQ-3600 | TVS |
| 115 | WA-3500 | HONDA MD90 |
| 116 | 14-4830 | HONDA |
| 117 | 34-9449 | YAMAHA |
| 118 | 14-6924 | HONDA MD90 |
| 119 | 147-2910 | HONDA MD90 |
| 120 | 148-6090 | HONDA MD90 |
| 121 | JJJ4065 | HEERO HONDA |
| 122 | HA1504 | BAJAJ BOXER |
| 123 | HUI6683 | HONDA MD90 |
| 124 | GS647 | TVS |
| 125 | HJ2900 | BAJAJ BOXER |
| 126 | GC5776 | SUPER CUP |
| 127 | HV5847 | TVS |
| 128 | ME-8074 | SUPER CUP |
| 129 | 14774481 | HEERO HONDA |
| 130 | 144-9872 | HEERO HONDA |
| 131 | VP1260 | HEERO HONDA |
| 132 | GP1314 | TVS |
| 133 | 1-1094 | YAMAHA |
| 134 | 1011294 | YAMAHA |
| 135 | HB9698 | HONDA MD90 |
| 136 | GP2049 | HONDA MD90 |
| 137 | HS8128 | FREEDON |
| 138 | HO5286 | HEERO HONDA |
| 139 | JG0362 | HONDA |
| 140 | JI0447 | BAJAJ BOXER |
| 141 | JT9542 | HEERO HONDA |
| 142 | HV2187 | HEERO HONDA |
| 143 | MW1791 | HONDA |
| 144 | MW6874 | HONDA |
| 145 | 1172187 | TVS |
| 146 | DW6363 | TVS |
| 147 | HZ-3569 | TVS |
| 148 | JP2139 | HEERO HONDA |
| 149 | JK0703 | HEERO HONDA |
| 150 | HO2346 | HEERO HONDA |
| 151 | 500-1000 | TVS |
| 152 | HM7414 | HONDA MD 90 |
| 153 | HD4134 | HONDA MD 90 |
| 154 | JI5187 | HEERO HONDA |
| 155 | MS1032 | TVS |
| 156 | MQ6489 | DAIDO |
| 157 | JZ0749 | CD DANN |
| 158 | 64366 | CT100 |
| 159 | 1405154 | HEERO HONDA |
| 160 | HO8433 | CT100 |
| 161 | 6635 | HONDA |
| 162 | JT6809 | CD 100 |
| 163 | HZ6306 | HEERO HONDA |
| 164 | MO5202 | HEERO HONDA |
| 165 | MO5601 | HEERO HONDA |
| 166 | 14-6071 | HONDA |
| 167 | 11A0101 | TVS |
| 168 | HS339 | BAJAJ BOXER |
| 169 | C140273 | TVS |
| 170 | HD2232 | HONDA MD 90 |
| 171 | C148009 | SUPER CUP |
| 172 | HG54260 | HEERO HONDA |
| 173 | ER9076 | HEERO HONDA |
| 174 | CT42127 | TVS |
| 175 | C132124 | - |
| 176 | FE10005 | TVS |
| 177 | JZ6687 | TVS |
| 178 | WE8075 | - |
| 179 | JV644605 | - |
| 180 | GV4438 | HEERO HONDA |
| 181 | HS3323 | PESIC |
| 182 | C301 | - |
| 183 | 03K09C11830 | - |
| 184 | 500-9073 | - |
| 185 | HE7372 | - |
| 186 | 151-9269 | - |
| 187 | MC 0224 | - |
| 188 | C139779 | - |
| 189 | WS-6172 | - |
| 190 | C13-1273 | - |
| 191 | MT1020 | TVS |
| 192 | GF9049 | HONDA MD 90 |
| 193 | HB9698 | HONDA MD 90 |
| 194 | 101-9872 | DAIDO |
| 195 | HK0101 | HEERO HONDA |
| 196 | MM4101 | HEERO HONDA |
| 197 | 61-6231 | YAMAHA |
| 198 | TC-4941 | HONDA |
| 199 | IX4868 | TVS |
| 200 | GO-6066 | HEERO HONDA |
| 201 | 1410744 | HEERO HONDA |
| 202 | HI6416 | HEERO HONDA |
| 203 | GA2411 | MATE |
| 204 | HM9326 | DAIDO |
| 205 | GN6631 | HONDA |
| 206 | HE7358 | HONDA |
| 207 | HA5949 | HONDA |
| 208 | 135268 | DAIDO |
| 209 | HA7553 | DAIDO |
| 210 | 1529509 | HONDA |
| 211 | HW4480 | HEERO HONDA |
| 212 | 500-6491 | DAIDO |
| 213 | 4017521 | DAIDO |
| 214 | MX242 | HEERO HONDA |
| 215 | 201-5293 | HONDA |
| 216 | MN2931 | HONDA MD 90 |
| 217 | 156-8836 | HONDA |
| 218 | JH5157 | HONDA |
| 219 | GB5010 | HEERO HONDA |
| 220 | GU5487 | HONDA MD 90 |
| 221 | 58-0887 | HONDA MD 90 |
| 222 | 12-5256 | HONDA |
| 223 | 14-3807 | HONDA |
| 224 | 148-0952 | YAMAHA |
| 225 | 28-782 | HONDA MD 90 |
| 226 | 144-2090 | HONDA MD 90 |
| 227 | 13-7440 | HONDA |
| 228 | 146-9091 | HONDA |
| 229 | JA9236 | HEERO HONDA |
| 230 | 14-7144 | YAMAHA |
| 231 | HI5659 | YAMAHA |
| 232 | MB4606 | YAMAHA |
| 233 | 301-6621 | BAJAJ |
| 234 | OY8574 | HONDA MD 90 |
| 235 | HM-7454 | HEERO HONDA |
| 236 | GT4831 | HEERO HONDA |
| 237 | GM7693 | HEERO HONDA |
| 238 | 95-6887 | HONDA MD 90 |
| 239 | MS-5055 | HONDA |
| 240 | GR-2484 | HONDA |
| 241 | JG-1020 | HONDA |
| 242 | 12-4876 | HONDA |
| 243 | GA-6120 | HONDA MD 90 |
| 244 | JG-4042 | HONDA MD 90 |
| 245 | 2-2074 | YAMAHA |
| 246 | 144-3815 | HONDA |
| 247 | 126-9421 | YAMAHA |
| 248 | MR-4820 | BAJAJ |
| 249 | NP-2314 | HONDA |
| 250 | 500-9120 | YAMAHA |
| 251 | 13-3587 | HONDA |
| 252 | HZ7118 | TVS |
| 253 | TL4975 | JAILIN. |
| 254 | 132-3705 | HONDA |
| 255 | 301-3032 | HONDA |

மிகுதி நாளைய உதயனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரைப் பௌர்ணமி விரத தினமான நேற்றுப் புதன்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக் கேணியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் விநாயகர் வீதிவலம் வருவதை முதலாவது படத்திலும் பொதுமக்கள் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதை இரண்டாவது படத்திலும் பக்தர்கள் புனித நீராடுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன், தமிழினியன், நந்தன், உமா)

# சர்வதேச நகரங்களில் வங்கிகள் மூடப்படும்போது யாழ்ப்பாணத்தில் புதிதாக வங்கிக்கிளைகள் திறக்கப்படுகின்றன

### வடபிராந்திய பதில் உதவிப் பொது முகாமையாளர் உரை

அச்சுவேலி, ஏப். 29'

''சர்வதேச ரீதியில் பிரபலமான நகரங்களில் செயற்பட்டு வந்த வங்கிகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மூடப்படுகின்ற சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் வங்கிகளின் கிளைகள் புதிது புதிதாகத் திறக்கப்படுகின்றன. ஒரே நாளில் இரண்டு வங்கிகளின் கிளைகள் கூடத்திறக்கப்பட்டுள்ளன. இது யாழ்ப்பாண மக்கள் வங்கிச் செயற்பாடுகள் மீது கொண்டுள்ள நம்பிக்கைத் தன்மையை தெளிவுபடுத்திக் காட்டுகின்றது''.

இவ்வாறு வடபிராந்திய பதில் உதவிப் பொதுமுகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சுயதொழில் முயற்சிப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மரம் அரியும் இயந்திரங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை வழங்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பதில் உதவிப் பொது முகாமையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு -

யாழ்ப்பாண மக்கள், வங்கிச் செயற்பாடுகள் மீது கொண்ட நம்பிக்கையும் சேமிப்புப் பழக்கமும் உலகறிந்த உண்மை. யாழ்ப்பாண மக்களின் சேமிப்புப் பழக்கம்தான் பலத்த நெருக்கடி நிலையில் கூட மன உறுதியுடன் இருப்பதற்கு வழிவகுத்தது.

இலங்கை வங்கி மக்கள் வாழ்க்கையின் அனைத்து மட்டத்திலும் வாழ்வாதார உதவிகளை வழங்கி, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் உறுதுணையாக இருந்து வருகின்றது. இந்த வகையில் இலங்கை வங்கியுடன் மக்கள் தமது தொடர்புகளை மிக நெருக்கமான நிலையில் பேணி வருகின்றனர். இலங்கை வங்கியும் மக்களுக்கு இயன்ற மட்டும் சேவையாற்றி வருகின்றது.

உலக நாடுகளில் மிகவும் பிரபலமான நகரங்களில் செயற்பட்ட வங்கிகள் பல மூடப்படும் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் வங்கிகளின் கிளைகள் புதிதாகத் திறக்கப்படுகின்றன. ஒரே தினத்தில் இரண்டு வங்கிகளின் கிளைகளும் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் யாழ்ப்பாண மக்களின் சேமிப்பு முறை வங்கிகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையுடன் கூடிய தொடர்பு நிலை என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் திறக்கப்பட்ட வங்கிகளில் முகாமையாளர்களாகக் கடமை புரிபவர்கள் இலங்கை வங்கியில் கடமைபுரிந்து ஓய்வு பெற்றிருந்த அதிகாரிகள்தான்.

இலங்கை வங்கியின் அதிகாரிகளின் சிறந்த முகாமைத்துவத் திறனையும் மக்களுடன் தொடர்புகொண்டு திறம் படச் செயற்படுகின்ற இயல்பையும் உணர்ந்து கொண்ட தனியார் வங்கிகள் அதனை உரிய முறையில் பயன்படுத்தி தமது செயற்பாடுகளை அண்மைக் காலத்தில் விஸ்தரித்து வருகின்றன எனத் தெரிவித்தார். நிகழ்வில் இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் உட்பட பலர் உரையாற்றினார். (4-11)

# சர்வதேச தரங்கொண்ட 'அனிமேஷன்' கற்கை நெறியை முதற்தடவையாக குடாநாட்டு மக்களுக்கு வழங்கவுள்ளோம்

### 'மக்நெற்' அக்கடமிப் பணிப்பாளர் சபை உறுப்பினர் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.29

சர்வதேச தரத்திலான 'அனிமேஷன்' கற்கைநெறி முதற்தடவையாக யாழ். மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் மே 16 இல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையை எடுத்துள்ளோம் என யாழ். மக்நெற் அக்கடமியின் பணிப்பாளர் சபை உறுப்பினரான எஸ். சுகுணன் தெரிவித்தார்.

இந்தியா பெங்களூர் ஸ்லாற் அக்கடமியின் யாழ்.மக்நெற் அக்கடமியுடன் இணைந்து முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் அனிமேஷன் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனை ஒட்டிய அறிமுக நிகழ்வும் கருத்தமர்வும் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட எஸ்.அருணன் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:




18 மாதங்கள் கொண்ட பயிற்சி நெறியும் அதற்குக் குறைவான கால அளவு கொண்ட பயிற்சி நெறியும் என இரு பிரிவுகளாகப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் இந்தத் துறையின் மூலம் யாழ்ப்பாண மக்கள் அதிக நன்மையடையவிருக்கின்றனர். நாம் நடத்துகிற விளக்கவுரை மற்றும் பயிற்சிப்பட்டறை நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் உட்பட அதிக எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இலகு தவணை அடிப்படையில் வழங்கப்படும் இந்தக் கற்கை நெறியை பாடசாலை மாணவர்களும் தொடரக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அனிமேஷன் கற்கை நெறியை பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து பட்டப்படிப்பாக்குவது பற்றியும் சிந்தித்து வருகிறோம்.

வேறு நாடுகளுக்குச் சென்று இந்தக் கற்கை நெறியை இதுவரையும் பயின்று வந்த யாழ். மக்களுக்கு தற்போது அவர்கள் அருகிலேயே வந்து சேவை செய்ய முன்வந்துள்ளோம் -என்றார்

'மக்நெற்' அக்கடமியின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் கொமர்ஷல் வங்கியின் முன்னாள் யாழ். கிளை முகாமையாளருமான எஸ்.ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

'ஸ்லாற்' அக்கடமியின் தலைவர் செட்டியார் வேலாயுதம் பிரதம விருந்தினராக இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். 'ஸ்லாற்' அக்கடமிப் பணிப்பாளர்சபை உறுப்பினர் திருமதி வினாமோகன், சந்தைபடுத்தல் முகாமையாளர் எஸ்.ராஜேஸ், இருபரிமாண அனிமேஷன் பயிற்று விற்பனர் மித்துருபவன் ஆகியோரும்,

'மக்நெற்' அக்கடமியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான திரு திருமதி சுகுணன், மற்றும் நிலைய முகாமையாளர் பொ.கமலநாதன் உள்ளிட்டோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் பாடசாலை மாணவர்கள், தகவல் தொடர்பாடல் ஆர்வலர்கள், அனிமேசன் துறைசார்ந்தோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (04-14)

# வலி. கிழக்கில் சுமாரான மழை; நிலத்தைப் பண்படுத்தும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஏப். 29

வலி. கிழக்குப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த சுமாரான மழையை அடுத்து விவசாயிகள் தமது விவ்சாய நிலங்களைப் பண்படுத்தி வருகின்றனர்.

கடந்த இருநாள்களுக்கு முன்னர் இப் பகுதியில் சுமாரான மழை பெய்தது. இந்த மழையை அடுத்து விவ்சாயிகள் தமது விவசாய நிலங்களை உழுதும் பசளையிட்டும் வருகின்றனர்.

சிறுபோக மரங்களின் செய்கையை ஆரம்பிப்பதற்கு வசதியாக கோடை காலத்திலும் இப்பகுதியில் நல்ல மழை பெய்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

(04-224)

## ஆலயங்களில்

# கைவரிசையைக் காட்டும் திருடர்களை மடக்குவதற்கு விசேட விழிப்புக் குழு!

யாழ்ப்பாணம், ஏப்.29

ஆலயங்களில் நடைபெற்றுவரும் வருடாந்த மகோற்சவ திருவிழாக்களின் போது திருடர்களின் கைவரிசையை முறியடிப்பதற்கு விசேட விழிப்புக்குழுக்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

ஆலயங்களில் இடம்பெறும் இரவு நேரத் திருவிழாக்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இவர்களின் சாதுரியமான திருட்டு முயற்சிகளை முறியடிப்பதற்கு இளைஞர்கள் சிலர் மக்களுடன் மக்களாக நின்று இந்த விழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் அடுத்த மே மாதத்தில் குடாநாட்டில் உள்ள முக்கிய ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் திருவிழாக் காலங்களிலும் திருடர்கள் தமது கில்லாடித்தனத்தைக் காட்டுவது வழமை. எனவே ஆலய நிர்வாகங்கள் பக்தர்களின் உடைமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஆலய சுற்றாடல் பகுதிகளில் இத்தகைய விழிப்புக்குழுக்களை அமைப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (04-224)

# புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம்.

யாழ்ப்பாணம், ஏப். 29

உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தை யாழ்ப்பாணத்திலும் அட்டனிலும் நடத்துவதற்கு புதிய ஜனநாயகக் கட்சி முடிவுசெய்துள்ளது.

வரும் மே முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மணிக் கூட்டுக் கோபுரம் அருகில் உள்ள றிம்மர் மண்டபத்தில் புரட்சிகரக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியின் வடபிரதேசச் செயலர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளர் கா.செந்திவேல், அரசியற்குழு உறுப்பினர் சோ.தேவராஜா, தேசிய கலை இலக்கியப் பேரவையின் க.தணிகாசலம், ஓய்வு பெற்ற பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வீ.கிருஷ்ணசாமி, நவலங்கா தொழிற் சங்கத்தின் மு.தியாகராஜா மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

இதேவேளை மலையகம் அட்டனில் சக்தி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு மேதினக் கூட்டம் நடைபெறவுள்ளது. கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தொழிற்சங்க வாலிபர் அணிகளின் பிரதிநிதிகள் உரையாற்றவுள்ளனர். (ஓ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி, சுபீட்சைத்தை துரிதமாகப்பெற புதிய திட்டங்கள் வகுப்பு

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

மக்கள் எதிர்பார்த்துள்ள பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபீட்சைத்தை ஏனைய சகல அமைச்சுகளின் உதவியுடன் துரிதமாக பெற்றுக்கொடுக்கப் அர்ப்பணிப்புடன் செயற்படப் போகிறார் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பெறுபேற்றுக்கொண்ட போதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு - பொருளாதார அபிவிருத்தியும் சுபீட்சமும் நாடு முழுவதிலும் உள்ள கிராமங்கள் வரை சென்றடையும் வகையில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்படும்.

துரித அபிவிருத்தி நடவடிக்கைகளில் சுற்றுலாத்துறை, விவசாயம், நிர்மாணத்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு போன்ற துறைகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும்.

கலாநிதி பி.பீ. ஜயசுந்தர தனது அமைச்சின் செயலாளர்களாகவும் மூன்று திறமையான பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையாலும் புதிய அமைச்சின் கீழ் மக்களின் எதிர் பார்ப்புகளை ஈடுசெய்யும் வகையில் விரிவான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் - என்றார். (சி)

# ஓராண்டு நினைவஞ்சலி

## ஜெகப்பிரதாபன் வித்தியா



தோற்றம் 22.02.1976 மறைவு 13.05.2009

திதி: 02.05.2010

நினைவுகளிறுக்க
இழப்பின் துயரோடலையும் கொடுமையை
புரியாத இடைவெளிகளை நினைத்தபடி
வாழ நேர்கிறது ஒரு வாழ்க்கையை

ஓர் ஆண்டுகளில்
எமது மழலைகள் விழி அருகால்
இன்னும் காயாதிருக்கும் கண்ணீர்த்திவலைகளை
நித்தமும் கண்டுவாழும் கொடுமையின் கூரியவாளை
எங்கு கொண்டு சென்று புதைப்பது?

எத்தனை அழகானது
நீ எனக்கிருந்த வாழ்க்கை
மின்மினிப் பூச்சிகளின் ஒளிகளில்
சுற்றிக்கொண்டிருந்தது அது

நினைவிறுக்க அந்நினைவுகளின்
பசுமைகளை மட்டும் காணத்தோன்றுகிறது
என்றும் உன்நினைவுகளுடன்!

(97392)

அன்னாரின் இல்லத்தில் எதிர்வரும் (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முதிரைக்கட்டை ஒழுங்கை,
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதரர்.

# கதை சொல்லும் நிகழ்வு

வடமராட்சி, ஏப்.29

மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் விவேகானந்தா சொன்ன கதைகள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர் எம்.கே.கனகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா, விவேகானந்தர் கூறிய கதைகளை மாணவர்களுக்கு எடுத்துச்சொல்வார்.

(04-236)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1185 நிலம்

27-04-2010



மிதுனம் 23 28 39 42

ஜக்பொட் பரிசு ரூபா. 5,033,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 199,999 | 20/- | 3,999,980/- |
| 2 இலக்கங்கள் | 18,423 | 40/- | 736,920/- |
| 1 இல. + லக்கினம் | 18,195 | 60/- | 1,091,700/- |
| 2 இல. + லக்கினம் | 1,643 | 200/- | 328,600/- |
| 3 இலக்கங்கள் | 496 | 1000/- | 496,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,033,550/- | - |
| மொத்தம் | | | 7,713,200/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 238,810 | | 8,213,200/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,480,675/-

ஆலிந்தயே வாசனாவ

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து
• ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 401189775-5-30 |
| அம்பாறை | 401185793-4-24 |
| கேகாலை | 401183622-4-34 |
| கொழும்பு | 401182054-1-06 |
| குருநாகல் | 401178756-6-16 |




# ஈராண்டு நினைவஞ்சலி

அமரர்

# கந்தையா மகாதேவன்

நிஜமாய் 13.03.1943

நிழலாய் 21.04.2008

திதி: அபரபக்க சித்திரைப் பிரதமை

அப்பா!
எமைவிட்டு நீங்கள் பிரிந்து ஈராண்டு ஆனபின்பும்
எம் இதயம் கனக்கிறது கண்ணீருடன் கூடிய கவலைதனால்
காலம் முன்னேறி நகர்ந்தாலும் உங்கள் பிரிவுத்துயர் நீங்காது
வாழ்வு உள்ளவரை என்றும் திரும்பாது உங்களுடன் கூடிய வாழ்க்கையது
மனம் நிறைந்த சந்தோசம் நீங்கள் உள்ளவரை நாமுணர்ந்தோம்
மன்றாடி நாம் கேட்டும் இறைவன் தரவில்லை எமக்கதை இன்று
நிலையில்லா இவ்வுலகில் நிலையானது வாழ்வு என்றெண்ணி
திரும்பிப் பார்க்கிறோம் நம் பழைய நினைவுகளை
உணர்கிறோம் உங்கள் பாசத்தை; கேட்கிறோம் உங்கள் குரலை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

84/6, தபாற்கந்தோர்லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளை
சந்தோசத் தருணங்களாய் சுமந்து வாழும்:
மனைவி, பிள்ளைகள்.

(97397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவல்கள் வட்டம்

## ஏப்ரிலில் வயலது

பச்சை மரம்
பட்டுருகிப் பட்டைகளை
பட்டாடைகளாய்
கழற்றுகிறது
பசிய வயலொன்று
வானம் பார்த்து
தலை நோகத்
தலை சாய்ந்தே
நெட்டென நிமிர்ந்து
கிடக்கிறதே நிறம்மாறி...
சுட்டெரிக்கும் சூரியனின்
சாகசத்தின் தொடர்கதையாய்
நீள்கிறதே
நீரின்றிய நிலம்....!

பொன்.சுகந்தன்.

## தப்பித்தல் தீர்வாகுமா?

மனித வாழ்வில் நெருக்கீடுகள் தவிர்க்க முடியாதவை. இன்பம் உண்டு என்றால், துன்பமும் உண்டு என்பது வாழ்வின் அனுபவங்கள் கற்றுத்தரும் பாடமாகும். துன்பத்தை அனுபவித்தவர்களுக்குத்தான் இன்பத்தின் சுவை புரியும். துன்பங்களை எல்லாம் நெருக்கீடுகள் என எண்ணி தவறான வழிகளில் இன்பத்தைத் தேட முனைவதில் நெருக்கீடுகள் தொடர் கதை ஆகிவிடுகின்றன.

உதாரணம்:

எதிர்பாராத இழப்பு, காதல் தோல்வி, வறுமை, 'பிரிவு, போன்ற அற்ப விடயங்களுக்காக, சொற்ப நேர இன்பத்திற்காக மதுவை நாடுபவர்களின் வாழ்வு நிரந்தர துன்பத்திற்கு அத்திபாரம் ஆகின்றது. குடும்பத்தில் ஏற்படுகின்ற சுமை, சச்சரவுகளில் இருந்து விடுபடவும், வேறு வழிகளில் ஒதுங்கி வாழ முனைவதிலும், வேறு வாழ்வுக்குத் தன்னை ஈடுபடுத்த முனைவதிலும் முன்னைய துன்ப நிகழ்வுகள், நினைவுகள் வாழ்வில் மறக்கப்படுவதில்லை. நெருக்கீடுகள் புதிய நெருக்கீடுகளுக்கு வழி சமைப்பதாகவே அமையும்.

ஒளிதல், ஒதுங்குதல்,போதை, தற்கொலை, யாவும் நெருக்கீடுகளில் இருந்து தப்பிக்க முனையும் முயற்சிகளே, தவிர தீர்வினைத் தர முடியாது. இதனால் இன்றைய மனிதரது வாழ்வு அழிவுக்கு காரணமாகிறது என்பதை உணரக் கூடியதாய் உள்ளது.

ஒருவரின் செய்கை தவறானால் அதனைத் தீர்க்கவும், ஏற்கவும் வழி காட்டவும் வேண்டிய பொறுப்பு ஏனைய உறுப்பினர்களின் கடமை ஆகும். இதுவே நெருக்கீடுகளைத் தவிர்க்க வழியுமாகும். தவறுகள் உணரப்படவும், திருத்தி வாழவும் சந்தர்ப்பம் அளிக்காததாலும் குடும்ப அமைதி சீர்குலைவுக்குக் காரணமாகும்.

நெருக்கீட்டுக்குள்ளாகும் உறுப்பினர்கள் குடும்ப மட்டில் ஏனையவர்களின் விமர்சனப் பேச்சும், சீண்டுதல், பிரிவுக்கு உற்சாகமூட்டுவதும், போதைக்கு வழிகாட்டுவோரும், சமூகத்தைச் சீரழித்து நெருக்கீடுகளைத் தொடர வைத்து தம்மை கதாநாயகர் ஆக்கிக் கொள்ள முனைவோரும் சமூகத்தில் கோடாரிக் காம்புகளே! இவர்கள் மட்டிலும் விழிப்புடன் இருக்க வேண்டியது மிக முக்கிய தேவையாகும்.

மனித வாழ்வின் நெருக்கீடுகள் புதிய முயற்சிக்கும், முன்னேற்றத் திற்குமாகச் சிந்தித்து முயன்றால் முன்னேறலாம். தன்நம்பிக்கையும், விடாமுயற்சியும், சவால்களை வென்று சாதனை படைப்போம் என்ற சூழலையும், ஒற்றுமையையும் ஒருவருக்கொருவர் துன்பத்தில் துணைக் கரங்களாக இணையும்போது சோகமும் இன்பமாக மாறும். நெருக்கீடுகளும் பனி போல அகலும் வாழ்வின் யுகமும் அர்த்தமுள்ளதாய் மாறி மகிழ்ச்சி பெருகும்.

எஸ்.டர்சிகா,
நல்லூர்.

## அமைப்புகளும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளும்

| | |
|---|---|
| ★ GATT அமைப்பும் சர்வதேச ஒப்பந்தங்களும் | - 1947 ஆம் ஆண்டு |
| ★ இலங்கை - பாகிஸ்தான் சுதந்திரவர்த்தக ஒப்பந்தம் | - 2005 ஆம் ஆண்டு |
| ★ இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் | - 2000 ஆம் ஆண்டு |
| ★ பொதுநலவாய சுதந்திர நாடுகள் | - 1991 ஆம் ஆண்டு |
| ★ ஆபிரிக்க ஐக்கியத்திற்கான அமைப்பு | - 2002 ஆம் ஆண்டு |
| ★ பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான ஸ்தாபனம் | - 1948 ஆம் ஆண்டு |
| ★ ஐரோப்பிய சமூகம் | - 1949 ஆம் ஆண்டு |
| ★ அணிசேரா இயக்கம் | - 1961 ஆம் ஆண்டு |
| ★ சர்வதேச இஸ்லாமிய மாநாட்டு நாடுகள் | - 1969 ஆம் ஆண்டு |
| ★ தெற்காசிய ஒப்பந்த அமைப்பு | - 1954 ஆம் ஆண்டு |
| ★ வட அமெரிக்க சுதந்திர ஒப்பந்தம் | - 1989 ஆம் ஆண்டு |
| ★ பிம்ஸ் டெக் நாடுகளின் அமைப்பு | - 1997 ஆம் ஆண்டு |
| ★ போவா போரம் | - 2001 ஆம் ஆண்டு |
| ★ சங்காய் கூட்டுறவு அமைப்பு | - 2001 ஆம் ஆண்டு |
| ★ ஒபெக் அமைப்பு | - 1960 ஆம் ஆண்டு |
| ★ சார்க் அமைப்பு | - 1985 ஆம் ஆண்டு |
| ★ பொது நலவாயம் | - 1944 ஆம் ஆண்டு |
| ★ நேட்டோ | - 1949 ஆம் ஆண்டு |
| ★ கொழும்புத் திட்டம் | - 1950 ஆம் ஆண்டு |
| ★ G5 நாடுகளின் அமைப்பு | - 2009 ஆம் ஆண்டு |

சு.நிர்மலன்,
வர்த்தகப்பிரிவு -2010, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## வரலாற்றில் புகழ் பெற்றவர்கள்

1) வில்லியம் சேக்ஷ்பியர் - உலகப்புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியர்.
2) வஸ்கொடகாமா - ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கான கடல் வழியைக் கண்டுபிடித்த போர் வீரர்.
3) சார்ள்ஸ் டாவின் -பரிணாம வளர்ச்சித் தத்துவத்தினை வெளியிட்ட விஞ்ஞானி.
4) பிக்காசோ - ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த இவர் நவீன ஓவியங்களின் தந்தையாவார்.
5) ரூஸோ - பிரான்சியப் புரட்சிக்கு முன்பு அந் நாட்டில் வாழ்ந்த பெரும் அரசியல் சிந்தனையாளன்.
6) லெனின் - கார்ள்மாக்ஸின் பொதுவுடமைத் தத்துவத்தின் அடிப்படையில் சோவியத் ரஸ்யாவில் பெரும் புரட்சியை நடத்தி ரஷ்யாவை பொதுவுடமை நாடாக்கியவர்.

செ.சிந்தூரியா, 83,மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.

## கேள்விக்கென்ன பதில்?- 68இன் சரியான விடை

பேராதனை, 1942ஆம் ஆண்டு

## கேள்விக்கென்ன பதில்?- 68 இல் பரிசு பெறுபவர்

செல்வநாயகம் ரவிசாந்
குறிஞ்சிக்குமரன் வீதி, வீரமனை, குப்பிளான்.

## கேள்விக்கு என்ன பதில்?-70

பெற்றோல் உற்பத்தியில் உலகில் முன்னணி வகிக்கும் நாடு எது?

(சரியான விடையை 07.05.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-...........................................
முகவரி:-...........................................
:-...........................................
........................ ...................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வரலாற்றில் இந்த வாரம்

**ஏப்ரல் 23**




உலகையே இன்று உலுப்பிக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. வைரசைக் கண்டறிந்த செய்தி 1984ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி வெளியிடப் பட்டது.

**ஏப்ரல் 24**

சீன அரசாங்கம் தன்னுடைய முதலாவது சொந்தத் தயாரிப்பில் உருவான 'டொங் பாங் கொங் - 01' எனும் செய்மதியை 1970ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி விண்ணுக்குச் செலுத்தியது.



**ஏப்ரல் 25**



'மனிதர்களைச் சிரச்சேதம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் 'கியுல்லோரைன்' என்னும் கூர்மையான வெட்டும் பொருள் கொண்ட கருவி 1792ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி முதல் முதலாக பிரான்சில் பரிஸ் [illegible]

**ஏப்ரல் 26**

மிகப்பெரிய நிலக்கீழ் அணு வெடிப்புச் சோதனையை நெவேடா என்னும் இடத்தில் 1968ஆம் ஆண்டு ஏப்ரல் 26ஆம் திகதி அமெரிக்கா நிகழ்த்தியது.



**ஏப்ரல் 27**



உலகைச் சுற்றி வந்தவரும் புகழ்பெற்ற கடற் பிரயாணியுமான பேடினன்ற் மகெலன் 1521ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தீவில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

**ஏப்ரல் 28**

முதலாவது உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டியில் இறுதிப் போட்டி 'வெம்ப்லி' மைதானத்தில் 1923ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்றது.



**ஏப்ரல் 29**



ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 28ஆம் திகதி ஜப்பான் நாட்டின் தேசிய தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்துடன் 1901ஆம் ஆண்டு இதே தினத்தில்தான் ஜப்பானிய சக்கரவர்த்தியாக விளங்கிய ஹிரோஹிட்டோ பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் கைவிடப்பட்ட சைக்கிள்களை உரியவர்களிடம் கையளிக்கும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி,ஏப்.29

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது புதுக்குடியிருப்பு, அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் பொதுமக்களால் கைவிடப்பட்டு மீட்கப்பட்ட 17 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள், ஒரு இலட்சம் சைக்கிள்களை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக 5 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களையும் 7 ஆயிரம் சைக்கிள்களையும் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும்படி [illegible] ஆளுநர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதிக்குப் பணித்துள்ளார்.

ஏனைய 12 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களையும் 97 ஆயிரம் சைக்கிள்களையும் இரண்டாம் கட்டமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது.
(6-302)


## மின் பாவனையாளர்களின் கவனத்திற்கு

யாழ்.மாவட்ட மின் பாவனையாளர்களின் நன்மை கருதி மின் கட்டணங்களை செலுத்துவதற்காக பின்வரும் மக்கள் வங்கிக் கிளைகளில் Online மூலம் இயங்கும் விசேட கரும பீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி சுன்னாகம்
மக்கள் வங்கி நெல்லியடி
மக்கள் வங்கி சாவகச்சேரி

மேற்படி கருமபீடங்களில் மின் கட்டணங்களாக செலுத்தும் தொகை உடனடியாகவே அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படும். இந்தக் கருமபீடங்கள் இன்று (29.04.2010)இல் சம்பிரதாய பூர்வமாக இலங்கை மின்சாரசபை உயர் அதிகாரிகளாலும் மக்கள் வங்கி உயர்அதிகாரிகளாலும் திறந்து வைக்கப்படும்.

*பிரதிப்பொது முகாமையாளர் (வடமாகாணம்)*
*இலங்கை மின்சாரசபை,*
*யாழ்ப்பாணம்.* (சி/567044)


## சங்காபிஷேகம்

கோப்பாய்,ஏப்.29

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலில் வருடாந்த சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் சுவாமி வீதிவலம் வரும் நிகழ்வு மாலையில் இடம்பெறும். (04-72)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றுக்கு சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் கோ. வைத்தியநாதபிள்ளை உட்பட ஐந்து பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிச் சேவைகள் துணைக்குழுவின் செயலாளரினால் உடனடியாகச் செயற்படும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
(04-207)

## பால் மா வழங்கல்

நவாலி,ஏப்.29

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் சிறந்த முறையில் இயங்கிவரும் முதியோர் சங்கங்களுக்கு அங்கர் பால்மா பெட்டிகள் பிரதேச செயலகத்தில் வைத்து சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசாவினால் வழங்கப்பட்டுள்ளது.
(04-100)


## நாடகப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.29

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சைவ சமய நாடகப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.
(04-207)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 09 ★ 04 ★ 1929



உதிர்வு 16 ★ 03 ★ 2010

### அமரர் தம்பு பரமசாமி

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எம்மை பார்புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ! என்றும்
நாம் மறவோம் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தியறிந்து ஓடோடிவந்து உதவிகள் புரிந்து அஞ்சலிகள், ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (29.04.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.54, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,யாழ்ப்பாணம் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில் 12 ★ 01 ★ 1978



விண்ணில் 30 ★ 03 ★ 2010

### அமரர் சந்திரவதனன் சாந்தகுமார்

(பொறிவலர், இ.போ.ச. பருத்தித்துறை)

கடந்த 30.03.2010இல் அகாலமரணமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த பருத்தித்துறை பேருந்துச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (29.04.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கல்வத்தை, இரும்பு மதவடி,
வதிரி, கரவெட்டி. (92233) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 ★ 06 ★ 1934



மறைவு 09 ★ 05 ★ 2009

### அமரர் சுப்பிரமணியம் பூலோகசேகரம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்)

கண்ணை இமை காப்பதுபோல எம்மைக் காத்து வளர்த்துவிட்ட!
எங்கள் இனிய தந்தையே! உங்களது அயராத உழைப்பாலும் முயற்சியினாலும்
கல்விக் கடலினிலே கலங்கரை விளக்காய் நின்று எம்மை
கரைசேர்த்து விட்டீர்களே! ஆண்டுகள் பல சென்றாலும்
எம் நெஞ்சை விட்டகலாது உங்கள் நினைவுகள்
நீங்கள் எம்மை விட்டுச் செல்லவில்லை - இன்றும் எம்
உள்ளக் கோயிலுள் உறைந்திருக்கிறீர்கள்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி மத்தி,
வசாவிளான். குடும்பத்தினர். (97358)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 ★ 06 ★ 1987



அரன் அடியில் 29 ★ 04 ★ 2009

### நவரத்தினசாமி ரவேந்திரன்

(பழைய மாணவன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வெற்றிலைக்கேணி, முள்ளியான்)

குணக்குன்றே நீ எங்களை விட்டுப்
பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உன்
நினைவலைகள் எங்களை விட்டு அகலாது.
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விநாயகர்புரம்,
வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

ஆறாத் துயரின் மத்தியில்:
குடும்பத்தினர். (97387)


## மஹஜன சம்பத / மஹாஜன சம்பத / Mahajana Sampatha 27.04.2010

அதிஷ்டலாப முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2233

வெற்றி எழுத்து: G வெற்றி எண்கள்: 5 1 8 2 5 8

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | G | 5 | 1 | 8 | 2 | 5 | 8 | ரூபா 20,779,337/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 1 | 8 | 2 | 5 | 8 | ரூபா 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 1 | 8 | 2 | 5 | 8 | ரூபா 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 8 | 2 | 5 | 8 | ரூபா 10,000/= | பரிசுகள் 117 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 5 | 8 | ரூபா 1,000/= | பரிசுகள் 1182 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 8 | ரூபா 100/= | பரிசுகள் 11945 |
| 6 பரிசுகள் | | | | | | | 8 | ரூபா 20/= | பரிசுகள் 118205 |
| 7 பரிசுகள் | | 5 | 1 | 8 | 2 | 5 | | ரூபா 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | | 5 | 1 | 8 | 2 | | | ரூபா 1,000/= | பரிசுகள் 117 |
| 9 பரிசுகள் | | 5 | 1 | 8 | | | | ரூபா 100/= | பரிசுகள் 1191 |
| 10 பரிசுகள் | | 5 | 1 | | | | | ரூபா 50/= | பரிசுகள் 11845 |
| 11 பரிசுகள் | G | | | | | | | ரூபா 20/= | பரிசுகள் 47375 |

Rs. 13,086,450.00

Rs. 20,779,337.00

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவரை வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்






வலி.கிழக்கில் புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தனித்துவம் மிக்கதாக விளங்குவன புத்தூர் நிலாவரை வற்றா நீர் நிலையம். நவசைலேஸ்வரமும் (சிவன் கோயில்) புத்தூர் - சுன்னாகம் வீதியில். இராச வீதி வந்தணையும் சந்தியின் வடக்குப் புறத்தில் அழகுற அமைந்துள்ளன.

நவசைலேஸ்வரத்தையும் நிலாவரை வற்றா நீர் நிலையையும் தொடர்புபடுத்தி கர்ண பரம் பரைக்கதைகள் பல உள்ளன. இதில் ஒன்றுதான் இலங்கை வேந்தன் சிவபக்தன் இராவணனை இராமபிரான் அழித்த பின்னர் வடதிசை நோக்கிச் செல்லும் வழியில் சிவபூசை செய்வதற்கு ஸ்தாபிதம் செய்த சிவலிங்கம் தான் நவசைலேஸ்வரர் ஆலயம் என்றும் அதனோடு இராமரால் நிர்மாணிக்கப்பட்ட தீர்த்தம் தான் நிலாவரை வற்றா நீர் நிலை என்றும் கூறப்படுவது உண்டு. நிலாவரைக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் பின்னர் நோக்கலாம்.

நிலாவரை வற்றாநீர் நிலையின் மேற்குப் புறத்தில் 30 மீற்றர் தூரத்துக்குள்ளே நவசைலேஸ்வரம் அமைந்துள்ளது. ஆலய வாசலில் ஆலயத்துக்குரிய தீர்த்தக்குளம் என்ற வகையில் ஆலயத்தில் இருந்து வந்து இறங்குவதற்கு ஏற்ற வகையில் படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இன்று தென்னிலங்கையில் இருந்து யாழ்.குடாநாடு நோக்கி பெருமெடுப்பில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நாள் தோறும் ஆயிரக்கணக்கில் தரிசனம் செய்யும் இடங்களில் நிலாவரையும் ஒன்று.

நீர் நிலையுடன் அண்டியுள்ள பெருவிருட்சங்களின் நிழலில் ஆற அமர அமர்ந்து உண்டுகளித்து மகிழும் சுற்றுலாமையமாக நிலாவரை சுற்றாடல் அமைந்துள்ளன. நிலாவரை சூழலில் முழுநாளும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டமும் புகைப்படக் கருவிகள் மற்றும் வீடியோ படப்பிடிப்புக்களின் அமர்க்களமும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

நவசைலேஸ்வரம் போத்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டு ஆலயத்தின் மூல மூர்த்தியாகிய சிவலிங்கமும் வேறு பொருள்களும் ஆலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றுக்குள்ளே வீசப்பட்டு மறைக்கப்பட்டிருந்தன.


1948ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பாராத வகையில் இறையருள் கூட்ட ஆலயத்தின் அருகில் உள்கிணற்றில் இருந்து சிவலிங்கம் மீட்டெடுக்கப்பட்டு ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்யப்பட்டு பரம்பரை பூசகர்களான வேலுப்பிள்ளை சுப்பையா அவரின் மனையாள் சிவக்கொழுந்து ஆகியோரால் பூசைவழிபாடு செய்யப்பட்டதாகவும் தற்பொழுதும் மடாலயமாக உள்ள ஆலயத்தில் சிவராத்திரி விழா, திருவாதிரை உட்பட விசேட காலங்களில் பூசைகள், அன்னதானம் என்பனவற்றோடு தினசரிப் பூசை நடைபெற்று வருவதாக வேலுப்பிள்ளை சுப்பையரின் பேரனும் தற்பொழுது ஆலய பரிபாலனசபையின் தலைவருமான வேலுப்பிள்ளை அருணாசலம் தெரிவித்தார். தற்பொழுது ஆலயத்தின் பரிபாலனத்துக்குரிய நிதி உதவிகள் கனடாவில் வாழும் புலம்பெயர்ந்த உறவுகள் மூலம் கிடைப்பதாகவும் எதிர்காலத்தில் ஆலயத்துக்கான சுற்றுமதிலையும் மகேஸ்வர பூசைக்கான ஒரு மண்டபத்தையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாக அருணாசலம் தெரிவித்தார்.

போத்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்ட ஆலயத்தின் அடித்தளம் தற்போதைய ஆலயச் சூழலில் காணப்படுகின்றது. நல்லூர் இராச தானிக்கால ஆலயங்கள் பற்றிக் கூறும் ஸ்ரீ தக்ஷிண கைலாய புராண நவசைப்படலத்தில் புத்தூரில் இருந்த சிவன்கோயில் பற்றியும் அதன் கேணிபற்றியும் நந்தவனம் பற்றியும் குறித்த ஆலயத்தை வழிபட்ட அடியார் பெற்ற நன்மைகள், பேறுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன்கோயில் நவசைலேஸ்வரம் சிவன்கோயில் தான் என்றும் கூறப்படும் அதேநேரம், அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிவன்கோயில் புத்தூர் சிவன் கோயிலைக் குறிப்பதாகவும் கூறப்படுவதும் உண்டு.

நவசைலேஸ்வரத்தின் நித்திய பூசையை தற்பொழுது அச்செழு சிவஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள் மேற்கொண்டு வருகின்றார். நவசைலேஸ்வரம் ஈழத்தில் உள்ள ஐந்து பிரதான சிவன் கோயில்களுடன் (ஈஸ்வரங்கள்) சேர்ந்து ஆறாவது பிரதான ஆலயமாகக் கூறப்படுவதும் உண்டு.

(தொடரும்)



# புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம்



கிராமங்களின் வளர்ச்சியில் சனசமூக நிலையும் உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் தனிமனிதர்கள் எந்தவகையில் உதவமுடியும்; குறித்த கிராமத்தின் சமூக கட்டுமானங்களை, மற்றும் குடும்பங்களை, குடும்ப உறுப்பினர்களை எத்தகைய மாற்றத்துக்குள்ளாக்கமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக முன்னுதாரணமாக கொள்ளத்தக்க வகையில் விளங்கும் கிராமங்களில் ஒன்று புத்தூர் மேற்கு கலை மதிக்கிராமம்.

1975ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் புத்தூர் மேற்கு வேம்பிராய் என்ற பெயருடன் மிகமிக பின்தங்கிய கிராமமாக நிலமானிய சமூக கட்டுமானங்களை உள்ளடக்கியதாக இருந்த கிராமம் 1975இற்குப் பின்னர் சகல சமூக கட்டுமானங்களிலும் தனித்துவமான தோற்றத்துடன் வளர்ந்து முன்னேறி வருகின்றது. இந்த முன்னேற்றத்துக்கு அடித்தளமாக அமைந்தது 1975.05.25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'கலைமதி' சனசமூக நிலையத்தின் தோற்றமாகும்.

புத்தூர் மேற்கு கலைமதிக்கிராமம் புத்தூர் சிவன் கோயிலுக்கு மேற்குப்புறத்தில் புத்தூர் - சுன்னாகம் பிரதான வீதியை வடக்கு எல்லையாகவும் சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தை தெற்கு எல்லையாகவும்; கமநல சேவை நிலையத்துக்கு முன்னால் தெற்கு நோக்கிச் செல்லும் விவசாய வீதியை மேற்கு எல்லையாகவும் கொண்ட பரந்த நிலப்பரப்பாகும். செம்மண்ணும் சுண்கல்பாரும் சிறந்த நீர் வளமும் கொண்ட பிரதேசமாகும்.

425 குடும்பங்களையும் 3800இற்கு குறையாத மக்கள் தொகையையும் கொண்டு விளங்கும் இந்தக் கிராமம் 1975இற்கு முந்திய காலப்பகுதியில் திறந்தவெளிக் குடியிருப்புக்கள் 90இற்கு மேற்பட்ட வீதத்தினர் மதுப்பழக்கம்; குடியிருக்கும் நிலம் கூட சொந்தமில்லாத நிலை; நாளந்தக் கூலித்தொழில்; பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை மிகமிகக்குறைவு; சென்றாலும் ஆரம்பக்கல்வியுடன் இடைவிலகல், கிராமத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்பதற்கு யாரும் இல்லாதநிலை ஏற்றாலும் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்தக் கூடிய நிலையில்லை; நிரந்தர வருமானம் இல்லாமல் மிகக்குறைந்த வாழ்க்கைத்தரம் கொண்டதாக இருந்தது. நாளாந்தம் அடிதடிசண்டை, சச்சரவுகளுக்கும் உள்ளாகியதாக சாதி, சமூக கட்டுமானங்களால் ஒடுக்கப்பட்ட கிராமமாக விளங்கியது.

கலைமதி சனசமூகநிலையத்தின் தோற்றத்தை அடுத்து ஒழுங்கமைக்கப்பட்ட கிராம கட்டமைப்பும் குடியிருப்பு நிலங்களை சொந்தமாக்கி; கூலித்தொழில் செய்வதோடு விவசாயமுயற்சி, சிறுகைத் தொழில் முயற்சியில் ஆர்வம் கொள்ளச் செய்தது கலைமதி சனசமூக நிலையத்தின் நிர்வாகம்.

கிராமத்தில் உள்ள எல்லோராலும் "தலைவர் செல்வம்" என அன்புடன் அழைக்கப்படும் கே.கதிர்காமநாதன் கலைமதி சனசமூகநிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக சனசமூக நிலையத்துக்கு மட்டுமல்ல கிராமத்துக்கும் தலைவராக இருந்து உயர்ந்த நிலையில் வழிகாட்டியமையே இன்று கலைமதிக் கிராமம் சராசரி நிலைக்கு முன்னேறி வருவதோடு ஏனைய கிராமங்களுக்கு சமமான நிலையில் வளர்ந்து வருவதற்கும் காரணமாகியது என்லாம்.

(தொடரும்)



தொகுப்பு : ஞான ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

பணப்பற்றாக்குறையை தீர்க்க சிலரிடம் உதவி கேட்கலாமா அல்லது வேண்டாமா என யோசிப்பீர்கள். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். உறவினர்களின் மனக்குறைகளைக் கேட்டறிவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

### இடபம்

புதிய அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். உறவுப் பெண்கள் சிலர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுக்கலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

### மிதுனம்

வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒருவர் மூலம் சில வேலைகளை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றவர்கள் மூலம் முடிக்கலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைக்க முற்படுவீர்கள்.

### கடகம்

நினைத்ததெல்லாம் நினைத்தபடி நடக்கும் நாள். பல நாள்களாக விட்டுப் போன நட்பு ஒன்றை புதுப்பிப்பீர்கள். குடும்பத்தினர் சிலர் மீது கடும் கோபம் கொண்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். சில விடயங்களில் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடந்து கொள்வீர்கள். அலைச்சல் உண்டு.

### சிங்கம்

சோர்வு, சோம்பலால் வழக்கமாகச் செய்யும் பணிகளைச் செய்யாமல் தவிர்ப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரைத் , தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் இல்லாமல் அதிருப்தி அடையலாம். தின்பண்டங்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணம் செலவாகும்.

### கன்னி,

வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். சிலர் உங்களிடம் இரக்கத்துடன், பரிவுடன் நடந்து கொள்ளலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் உண்டாகும்.

### துலாம்

செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய சில வேலைகளை சக ஊழியர்களை நம்ப ஒப்படைப்பீர்கள். உறவினர்கள் சிலரின் கோரிக்கைகளை . நிறைவேற்றி வைப்பீர்கள். பால்ய நண்பர் ஒருவருடன் எதிர்பாராமல் தொலைபேசியில் பேசலாம்.
கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### விருச்சிகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.
வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். மாற்று மத நண்பர்களுக்கு வாக்குறுதி எதுவும் கொடுக்க வேண்டாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.
மலைபோல் வந்த பிரச்சினை பனி போல விலகி விடும் நாள்.

### தனுசு

பணவரவு வந்தாலும், அதில் ஒரு பகுதியை யாருக்காவது கடனாகக் கொடுக்கலாம். தெய்வ வழிபாடுகளுக்காக குறிப்பட்ட அளவு செலவு செய்வீர்கள். தொழில் ரீதியான உங்களின் செயற்பாடுகளை சக ஊழியர்கள் பாராட்டுவர்.
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.
ஆறுதலான அனுபவம் பெறலாம்.

### மகரம்

மனதில் புதிய எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றும்.
உறவுகளால் தொல்லைகளுக்கு ஆள்படலாம். கணிசமான பணத்தைச் செலவிட்டும், சில விடயங்களில் திருப்தி இல்லாமல் போகலாம்.
உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து சோர்வு ஆட்கொள்ளும்.
நண்பர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

### கும்பம்

அடுக்கடுக்காக பல வேலைகள் குவிவதால், எரிச்சல், கோபம் அடையலாம். உடல் நலமில்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிலர் உங்களை எங்காவது வரச்சொல்லிவிட்டு, அவர்கள் நீண்ட நேரம் கழித்து வரலாம். அலைக்கழிப்பு நேரும்.

### மீனம்

சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். நண்பர்கள் சிலரிடம் மனம் விட்டு பேசி உங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்துவீர்கள். தொழில் விடயங்களில் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள்.
வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.


பூவுலகில் மலர்வு 21.08.1939

விண்ணுலகில் இணைவு 21.04.2008

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் டாக்டர்

## வயிரமுத்து பூபாலசுந்தரம்

**திதி: பிரதமை (29.04.2010)**

உங்களை நாமிழந்து, ஆண்டிரண்டு ஆயிற்றே;
ஆழிப் பேரலையின், அனர்த்தத்திற்கு ஒப்பாக
கூற்றுவனும் உமைக் கவர்ந்த, செய்கையதெம் மனங்களையே
மரக்க வைத்த பேரதிர்ச்சி, இன்றுவரை தெளியவில்லை
பாசவலை வாழ்வமைத்தெம்மை, வாழ்வினிலே உயரவைத்தீர்,
உம் இழப்பால் உற்றதுயர், இன்று வரை ஆறவில்லை,
என் செய்வோம்; விதிவலிது, என்றெம்மைத் தேற்றியே நாம்,
எஞ்ஞான்றும் உம் நினைவொடு, இறுதிவரை வாழவுள்ளோம்.

உங்களது ஆத்மா ஆண்டவனின் பாதங்களில்
சாந்திபெற அருள வேண்டி அரன் பாதம் பணிகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

என்றென்றும் உம் நினைவுகளுடன் வாழும்:

**குடும்பத்தினர்.**

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(சி/567028)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Offline இலும் Gmail ஐ பயன்படுத்தலாம்.

## ஆங்கில - தமிழ் தகவல் தொழில்நுட்ப கலைச்சொல் அகரமுதலி

### B

| | |
|---|---|
| Babble | - பிதற்று |
| Bachman Diagram | - பக்மின் வரைபடம் |
| Back Panel | - பின்புறப்பலகம் |
| Back Plane | - பின்தளம் |
| Bach Space | - பின்வெளி |
| Bach tracking | - பின்னிருந்து தேர்வு |
| Back end Processor | - பின்புற முறைவழியம் |
| Background Color | - பின்னணி வண்ணம் |
| Background Job | - பின்னணிப்பணி |
| Background Noise | - பின்னணி இரைச்சல் |
| Background Printing | - பின்னணி அச்சுப்பதிவு |
| Background Processing | - பின்னணி முறைவழிப்படுத்தல் |
| Background Programe | - பின்னணிச்செய்நிரல் |
| Backing Up | - காப்பெடுத்தல் |
| Backspace Key | - பின்வெளிச்சாவி |
| Backup | - காப்பு |
| Backup storage | - காப்புத்தேக்ககம் |
| Backward Chaining | - பின்நோக்குத் தொடரிணைப்பு |
| Boll Printer | - உருள்முக அச்சுப்பொறி |
| Band Printer | - பட்டைய அச்சுப்பொறி |
| Bar chat | - பட்டை வரைபடம் |
| Bar code Reader | - பட்டைக்குறிமுறை வாசிப்பான் |
| Bar code Scanner | - பட்டைக்குறிமுறை வருடி |
| Bareboard | - வெற்றுப்பலகை |
| Base Notations | - தளக்குறிமானம் |
| Base Number | - தள இலக்கம் |
| Basic Linkage | - அடிப்படை இணைப்பு |
| Basic Language | - அடிப்படை மொழி |
| Base Line Document | - ஒப்பநோக்கு ஆவணம். |
| Baseband Transmission | - தாள்அலைச் செலுத்தம் |
| Baseband Coaxial Cable | - தள அலை ஓரச்சுவடம் |
| Batch file | - தொகுதித் தொகுப்பு |
| Batch Job | - தொகுதி வேலை |
| Bias | - சாய்வு |
| Bipolar | - இருதுருவி |
| Bistable | - இரு நிலை |
| Bit | - துகள் |
| Blind Search | - கண் மூடித்தேடல் |
| Blow | - ஊது |
| Boolean algebra | - அட்சர கணிதம் |
| Boot | - தொடங்குதல் |
| Boot Virus | - தொடக்கக் கெடுநிரல் |
| Break | - முறிப்பு |
| Bus Network | - பாட்டை வலையமைப்பு |
| Bus System | - பாட்டை முறைமை / அமைப்பு |

## பயனுள்ள சில குறுக்கு விசைகள்...

| | |
|---|---|
| windows key + M | - இயங்கிக் கொண்டிருக்கும் செய் நிரலை (Active Window) Minimize செய்வதற்கு |
| windows key +Shift + M | - Minimize செய்யப்பட்ட Window வை Maximize செய்வதற்கு |
| Alt+Space+N | - Active Window களை ஒவ்வொன்றாக Minimize செய்வதற்கு |

பொதுவாக வலைத்தள இடைமுகங் கொண்ட (Webbased e-mail) இலவச மின்னஞ்சல்களைப் பயன்படுத்தும்போது பல நன்மைகள் இருந்தாலும் கூட, இவற்றை இணைய இணைப்பில் இருக்கின்றபோது மட்டுமே பயன்படுத்தமுடியும் என்பது ஒரு தீமையான விடயமாகக் காணப்படுகின்றது.

அதாவது வலைத்தள இடைமுகங் கொண்ட இலவச மின்னஞ்சல்களைப் பயன்படுத்தும் போது ஒன்லைனில் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொற்களை வழங்கி "லொக்கின்" செய்தால் மட்டுமே உள்ளே சென்று எமது முகவரிக்குக் கிடைக்கப்பெற்ற கடிதங்களை வாசிக்கக் கூடியதாக இருக்கும்,

அதுபோலவே ஒரு மின்னஞ்சலைத் தயாரித்து அனுப்புவதென்றாலும் கூட "லொக்கின்" செய்தல் அவசியம்.

ஆனால் இப்போது ஜீமெயில் அந்தக் கட்டாயத்தை இல்லாமல் செய்திருக்கின்றது.

அதாவது -


உங்கள் ஜீமெயில் முகவரிக்கு வருகின்ற மின்னஞ்சல்களை உங்கள் கணனியில் நிறுவப்பட்டிருக்கும் Outlook Express / MS Outlook / Mozilla Thunderbird போன்ற ஏதாவதொரு E-mail Client ஐப் பயன்படுத்தி இணைய இணைப்பில் இருக்கின்ற வேளைகளில் மின்னஞ்சலைப் பதிவிறக்கம் செய்துவிட்டு, இணைய இணைப்பு இல்லாமலேயே பயன்படுத்தக்கூடிய வசதியை வழங்குகின்றது.

அத்துடன் இணைய இணைப்பு இல்லாமலேயே புதிய மின்னஞ்சல்களை உருவாக்கவும் முடியும். அவற்றை அனுப்புவதற்கு மட்டும் இணைய இணைப்பு இருந்தால் போதுமானதாகும்.

இதனைப் பின்வருமாறு உங்கள் கணனியில் செயற்படுத்திக்கொள் ளலாம்.


உங்கள் கணனியில் நிறுவப்பட்டிருக்கும் Outlook Express ஐ இயக்குங்கள். நீங்கள் இப்போது தான் முதன்முதலாக Outlook Express ஐ இயக்குகிறீர்களாயின் ஒரு wizard தோன்றும். அதனை cancel செய்துவிட்டு program window வின் menu bar இல் காணப்படும் Tools என்பதனைத் தெரிவுசெய்து, அந்த List இல் இருந்து Accounts என்பதனைத் தெரிவு செய்யுங்கள், அதன்போது கீழே காட்டப்பட்டுள்ள திரை தோன் றும்.

அத்திரையில் Add என்பதனை கிளிக்





செய்து, mail என்பதனைத்தெரிவு செய்யுங்கள். இப்போது உங்கள் மின்னஞ்சல் கணக்கு விவரங்களைப்பதிவு செய்வதற்கான wizard தோன்றும்.

முதலில் உங்கள் வெளிச்செல்லும் மின்னஞ்சலில் உங்கள் பெயர் எவ்வாறு இடம்பெற வேண்டுமோ அந்த விவரத்தை நிரப்புங்கள், தொடர்ந்து நீங்கள் Offline இல் பயன்படுத்தவிருக்கும் மின்னஞ்சல் முகவரியை type செய்யுங்கள்.





தொடர்ந்து மின்னஞ்சலுக்கான "சேவர்"




விவரங்களை வழங்குவதற்காக "My incoming server is' என்ற பகுதியில் POP3 என்பதனைத் தெரிவு செய்துவிட்டு, Incoming Server ஐ pop.gmail.com என்பதாகவும் Outgoing server ஐ smtp.gmail.com என்பதாகவும் வரையறை செய்யுங்கள். தொடர்ந்து உங்களுடைய முழு மின்னஞ்சல் முகவரியையும், அதற்கான கடவுச்சொல்லையும் வழங்கி Wizard ஐ நிறைவு செய்யுங்கள்.

மீண்டும் menu bar இல் காணப்படும் Tools





ஐத் தெரிவுசெய்து, அந்த List இல் இருந்து Accounts ஐத் தெரிவு செய்யுங்கள்,

இப்போது நீங்கள் வரையறை செய்த உங்கள் மின்னஞ்சலுக்கான Account Name பட்டியலில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அதிலிருக்கும் உங்கள் ஜீமெயில் கணக்கினைத்தெரிவுசெய்து, Properties என்பதனைக் கிளிக் செய்யுங்கள்.

இப்போது குறிப்பிட்ட கணக்குக்குரிய Properties dialog box தோன்றும். அந்த dialog box இல் கீழே காட்டப்பட்டவாறு Server Port Numbers ஐ மாற்றி Apply செய்யுங்கள்.

தொடர்ந்து இணைய இணைப்பு இயங்கு




நிலையில் இருக்கின்ற வேளைகளில் மட்டும் Outlook Express ஐ இயக்கினால் போதும் உங்கள் ஜீமெயிலுக்கு வருகின்ற சகல கடிதங்களும் பதிவிறக்கம் செய்யப்பட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்படிப்புகள், புலமைப்பரிசில் திட்டம்; உயர்கல்வி அமைச்சின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

ஜப்பானிய பட்டப்படிப்பு, தொழில் நுட்பக்கல்லூரிப் புலமைப் பரிசில் திட்டம், கியூபன் பட்டப்படிப்பு புலமைப் பரிசில் திட்டம் என்பனவற்றைப் பெறுவதற்கான விவரங்களை உயர்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டப்படிப்பு மற்றும் புலமைப் பரிசில்களுக்கான விவரங்கள் அனைத்து வலயக் கல்விப் பணிமனைகளுக்கும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இதே வேளை இந்தப் புலமைப்பரிசில் தொடர்பான விவரங்களை www.mohe.gov.lk என்னும் முகவரியில் பார்வையிட முடியுமெனவும் யாழ்.மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது. (ஒ-10)

## மேதின நிகழ்வு

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் தொழிலாளர் தின நிகழ்வு எதிர்வரும் மே தினத்தன்று காலை 9மணிக்கு நல்லூர், நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உப தலைவரும், யாழ்.மாவட்டக் கிளைத் தலைவருமான கணேசன் கம்ஸநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-10)

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



அன்பின் உருவாய்
அன்னை வடிவாய்
பண்பின் நிறைகுடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மையும் எம் குடும்பத்தையும்
அன்பு பொழிந்து அறவழி காட்டி
இருள் அகற்றி ஒளி தந்து
இமைப் பொழுதும்
இறைவை மறவாதிருந்து
இன்று சிவன் பாதத்தில்
வீற்றிருக்கின்ற அன்னையே
தொடர்ந்தும் எம் வாழ்விலும்
நினைவிலும் நல்வழி காட்டுங்கள்....

**திருமதி பரமேஸ்வரி சிவானந்தன் (ஆசிரியை)**

மண்ணில் 26.03.1935

விண்ணில் 31.03.2010

எமது அன்னை நோயுற்ற போதும், சிவபதம் அடைந்த போதும் நேரிலும், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி மூலமும் துயர்பகிர்ந்த, மற்றும் பல்வகை உதவிகள் புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை (30.04.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணியளவில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோழியவத்தை,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தொ.பே.இல:
021 226 3147

குடும்பத்தினர். (97376)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடி 18 ★ 09 ★ 1950



ஆண்டவன் அடி 11 ★ 05 ★ 2009

**அமரர் கனகசபாபதிப்பிள்ளை (கவிஞர்) நகுலாம்பாள்**

திதி: துதியை (30.04.2010)

நிறைவான தோர் மனசும்
நெருங்கிய தோள் அணைப்பும்
குறை காணா மலர் சிரிப்பும்
கொடுப்பதிலோ தனி சிறப்பும்
உரை யாவும் பணிவன்பும்
உறவுகள் மேல் கொண்ட பிணைப்புமென
முறை தவறாதும் வாழ்ந்த "வண்ணம்"
முள்ளி வாய்க்கால் தனில் மறைந்ததுவோ!.


எமது குல விளக்கு நகுலாம்பாள் (வண்ணம்) அவர்களின் முதலாம் ஆண்டு திதி நாளை (30.04.2010) வெள்ளிக்கிழமை A.G.A லேனில் உள்ள செல்வசபாபதிப்பிள்ளை அவர்களின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் மதியம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

A.G.A லேன்,
வல்வெட்டித்துறை.

(97221)

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16.05.1947
மறைவு: 21.04.2008

திதி: அபரபக்க பிரதமை

**திருமதி ஸ்ரீ நகுலமீரா சிதம்பரநாதன்**

கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் இரண்டு
கண்முன்னே நீங்கவில்லை உறவாட- எம்மோடு
உன்னை எண்ணாத நாளில்லை இதயத்தில்
- எப்போதும்
உன் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா!
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள்
என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே
சென்றாய்?
எம்முயிர் உள்ளவரை உன் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடைய
இறைவனடி வேண்டுகின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(97486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்களின் கடந்த ஐம்பது ஆண்டு கால சட்ட விடயங்களில் தமிழ்த் தலைவர்களுடனும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டு செயலாற்றிய சட்ட விற்பன்னர் ஸி.வி.விவேகானந்தன்.

ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவை நோக்கி அவர் எழுப்பும் கேள்விக் கணைகளில் அர்த்தம் நிறைந்த பல விடயங்கள் பொதிந்துள்ளன. தொடர்ந்து பிரசுரமாகும் இக்கட்டுரையின் ஐந்தாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

# பாரத தேசத்துக்கு ஒரு பகிரங்க மடல்....!

பகுதி - 5

சிரேஷ்ட சட்டத்தரணி
ஸி.வி.விவேகானந்தன்

டில்லிப் பேரரசே!

இலங்கைத் தரப்பான அவர்களுக்கு பயம் ஒன்று. உங்களுக்கு பயம் இரண்டு.

ஒரு துரும்பு அதிகாரத்தையாவது தமிழர்களுக்கு கொடுத்தால் இலங்கையில் தங்களுடைய இருப்பைக் கெடுத்துவிடுவார்கள், ஒரு காலகட்டத்தில் இந்தியாவுடன் சேர்ந்து விடுவார்கள், இந்தியா இலங்கையை ஏப்பம் விட்டு விடும் என்ற பயம் சிங்கள மக்களுக்கு நிறைய உண்டு.

டில்லிப் பேரரசே! நீங்கள் மறந்திருப்பீர்கள். ஒரு நிகழ்வை உங்களுக்கு ஞாபகப் படுத்துகின்றேன்.

1940 ஆம் ஆண்டு இந்திய காங்கிரஸ் ரம்காரில் மாநாடு


ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

நடத்தியது. அம்மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஒரு குழுவை அனுப்பியது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அக்குழுவிற்குத் தலைமை தாங்கினார். அவர் மகாத்மா காந்தியிடம் கேட்டார். ''சுதந்திரம் அடையவிருக்கும் இந்தியாவிடமிருந்து இலங்கை எதனை எதிர்பார்க்க முடியும்? இலங்கையில் பலர் இலங்கை ஒரு சுதந்திர நாடாக இருப்பதிலும் பார்க்க பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பில் இருப்பது நல்லது என்று எண்ணுகின்றனர். இந்தியா இலங்கையை தனது நன்மைக்காக உபயோகப்படுத்தி இலங்கையை அமிழ்த்திவிடும்.'' என ஜெயவர்த்தனா காந்தியடிகளிடம் கூறினார். அதற்கு காந்தி அடிகள் சிரித்து கொண்டே பதில் கூறினார்.'' சுதந்திர இந்தியாவிடமிருந்து இலங்கை பயப்படுத்துவதற்கு ஒன்றுமில்லை'' "We asked him what Ceylon could expect from a free India. Many in Lanka prefer to remain as a dominion in the British Empire than to be free and run the risk of being exploited by India which could easily swamp Lanka. Gandiji laughed and said 'Ceylon has nothing to fear from a free India."

1940 ஆம் ஆண்டே இலங்கைக்கு இந்தியா மீது ஐயம் இருந்தது. இலங்கையை இந்தியா தனது ஒரு பாகமாக இணைத்துக்கொள்ளுமோ என்ற பயம் இருந்தது. அதனால்தான் இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் இங்கிலாந்துடன் தற்காப்பு ஒப்பந்தங்களை செய்து கொண்டது. இன்று சீனா பக்கம் சாய்ந்து விடுவேன் என அடிக்கடி பயமுறுத்திக் கொண்டு நிற்கின்றது.

டில்லிப் பேரரசே! இந்தியாவிற்கு இரண்டு விதத்தில் பயம். ஒன்று கூடிய அதிகாரங்களை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கினால், தமிழ்நாடு வருங்காலத்தில் தனிநாடாகப் போகக் கூடிய சாத்தியக் கூறு உண்டு என்ற பயம். தமிழருக்குக் கூடிய அதிகாரங்களை வழங்கும்படி இலங்கை அரசை வற்புறுத்தினால், இலங்கை பாகிஸ்தான், சீனா பக்கம் சாய்ந்தால், பத்து வருடங்களுக்குள் வல்லரசு ஆவதின் கனவு என்னவாகும். இந்தியாவின் பாதுகாப்பு என்னவாகும்? என்பது மற்றப் பயம். இந்தியக் குடியரசே! பரிதாபம். ஆப்பு இழுத்த குரங்கின் கதி உனக்கு. திரிசங்கு சொர்க்க நிலை எங்களுக்கு.

டில்லிப் பேரரசே! ஒன்றைமட்டும் நன்றாக அறிந்து கொள்வாயாக. சிங்களவர்கள் இலங்கையை மட்டும்தான் தங்களுடைய நாடு என்று நம்புகின்றார்கள். வேறு நாடு தங்களுக்குக் கிடையாது எனத் தீர்க்கமாக நம்புகிறார்கள். அவ்வெண்ணத்தில் எக்காலத்திலும் தளம்பல் இல்லை. உங்கள் நாட்டிலிருந்து பேரலைகள் வீசலாம். வேறு நாடுகளிலிருந்தும் வீசலாம். அவற்றினால் ஏற்படும் அவலங்கள், தாக்கங்கள் தற்காலிகமானவையே. அவற்றிற்கு ஏற்ற சாணக்கிய நகர்வுகளை முன்னெடுத்துத் தற்காத்து கொள்வார்கள் சிங்களத் தலைவர்கள். அவற்றுள் அமிழ்ந்து விடமாட்டார்கள். இன்னுமொரு விசேடம் அவர்களிடம் உண்டு. அதிகாரத்தை எவருடனும் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். தங்களுக்குள்ளும் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். இது அவர்களுடைய பலவீனம்.

15 ஆம் நூற்றாண்டளவில் புவனேகபாகு, மாயாதுன்ன உடன்பிறந்த சகோதரர்கள். புவனேகபாகு கோட்டே இராச்சியத்தின் அரசன். மாயாதுன்ன அண்ணனிடம் பங்கு கேட்டான். மூண்டது யுத்தம். தொடர்ந்து கொண்டே இருந்தது. லோறன்ஸ் டி அல்மேரா, போர்த்துக்கேய அரசனின் மகன். காற்றோடு காற்றாகக் கொழும்பை அடைந்தவன். தனது தம்பி, மாயாதுன்னவிற்கு கோட்டை இராச்சியத்தின் எப்பகுதியும் போய் சேரக்கூடாது என்பதற்காக கோட்டை ராஜ்யத்தை போர்த்துக்கேய அரசனுக்கு தாரைவார்த்துக் கொடுத்தவன் புவனேகபாகு.

தம்பியுடன் அதிகார பகிர்வு இல்லையென்றால் மாற்றானுடன் அதிகாரப் பகிர்வு எப்படி சாத்தியமாகும்?

போத்துக்கேயரை துரத்துவதற்காக ஒல்லாந்தரைக் கொண்டுவந்தனர். ஒல்லாந்தரை அகற்றுவதற்காக ஆங்கிலேயரை வரவழைத்தனர். இது அதிகாரப் பகிர்வால் ஏற்பட்ட விளைவு.

டில்லிப் பேரரசே! ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கழுத்தை நீங்கள் நெரித்து உடன்படிக்கைக்கு அவரது கையெழுத்தை பெற்றுக் கொண்டீர்கள். பிரபாகரன் தமிழர்கள் சார்பில் தானே கையெழுத்துப் போடவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். உடன் படிக்கையின் உள்ளடக்கத்தை செயற்படுத்துவதை 'அண்ரறைற்' செய்வது யார் என்ற கேள்வி எழுந்தது. டில்லிப் பேரரசே! இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியே உடன்படிக்கைக்கு கையெழுத்திட்டார். இலங்கைத் தமிழரின் சார்பில், அவர்களது உரிமைப் பட்டியலிற்கு இந்திய பிரதமரே கையெழுத்திட்டார். இந்தியா, அவற்றை செயற்படுத்துவதாக 'அண்ரறைற்' செய்தது.

அத்தோடு காதோடு காது வைத்து வேறு ஒரு விடயமும் பூர்த்தி செய்யப்பட்டது. அந்த விடயம் என்ன? அதுதான் இந்தோ - சிறிலங்கா உடன்படிக்கையின் உயிர். இருதயத்துடிப்பு அங்குதான் உண்டு. அதற்காகவே, இந்தியப் பிரதமர் கையெழுத்திட்டார். அதற்காகவேதான் இந்தியா 'அண்ரறைற்' செய்தது? இதற்கு மாறாகச் சொல்லப்பட்ட காரணங்கள் யாவும் போலியே. புனைகதையே. இது கலியுகம். யாரைத்தான் நம்புவது?

### கடிதங்கள்

இந்திய பிரதமருக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்குமிடையில் கடிதங்கள் பரிமாறப்பட்டன. அக்கடிதங்கள் உடன்படிக்கையின் பாகமாகவும் பகுதியாகவும் கணிக்கப்பட்டன. கடிதங்களின் உள்ளடக்கங்கள் இரு தலைவர்களுக்குமிடையில் ஏற்பட்ட இணக்கங்கள் என வர்ணிக்கப்படுகின்றன. காணப்பட்ட இணக்கங்கள் பலவும் செயற்படுத்தப்படவே இல்லை.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பப்பட்ட 29.07.1987 ஆம் திகதி கொண்ட கடிதமே முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

அவ்விணக்கப்பாட்டின் சிலவற்றை இங்கு ஞாபகமூட்டுகின்றேன்.

1. ''இந்தியாவின் நல உரிமைகளுக்கு பாதகமாக திருகோணமலைத் துறைமுகம் மற்றும் இலங்கையின் துறைமுகங்கள் யாவும் இராணுவப் பாவனைக்கும் வேறு எந்த நாடும் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்படாது''

"Trincomalee or any other Ports in Sri Lanka will not be made available for military use by any country in a manner prejudicial to India's interests"

2.''திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் திருத்துதல், செயற்படுத்தல் ஆகியன யாவும் இந்தியாவும் இலங்கையும் இணைந்து கூட்டுமுயற்சியாக செயற்பட வேண்டும்''

"The work of restoring and operating the Trincomalee oil tank farm will be undertaken as a joint venture between India and Sri Lanka.

3. ''வெளிநாட்டு வானொலி அமைப்புக்களுடன் இலங்கை ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு, பாதுகாப்புச் செய்யப்பட வேண்டும். அவர்களால் இலங்கையில் உருவாக்கப்பட்டவை பொது மக்களின் பாவனைக்கான ஒலிபரப்பாக இருக்க வேண்டுமேயன்றி, இராணுவ, பாதுகாப்பு விடயங்களுக்கு உபயோகிக்கவேபடக்கூடாது''


மகாத்மா காந்தி

"Sri Lanka's agreements with foreign Broadcasting organisations will be reviewed to ensure that any facilities set up by them in Sri Lanka are used solely as Public Broadcasting facilities and not for any military or Intelligence purposes."

### இந்தியாவின் பாதுகாப்பு

மேலே கூறிய மூன்று விடயங்களும் இந்தியாவின் பாதுகாப்புக்குரிய முக்கிய விடயங்கள். இந்தியாவின் பாதுகாப்பே இந்தியாவின்


ராஜீவ் காந்தி

கரிசனையாகும். இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் - பாதுகாப்பு யாவும் பின்தள்ளப்பட்டவையே. இந்தியாவின் பாதுகாப்பிற்காக பலி கொடுக்கப்பட்டவையே.

இவ்வாறு செய்வது டில்லிப் பேரரசுக்கு இது முதல் முறையல்ல.சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலமும் அவ்வாறே நடந்தது. பெரும் தலைவர் தொண்டமானைக் கூட கலந்தாலோசிக்காமல் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். என்றாலும், அவரின் எதிர்ப்பை இந்தியா கண்டுகொள்ளவில்லை.

தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் இந்திய வம்சாவழியினராக இருந்தாலும் அவர்களில் மூன்று, நான்கு தலைமுறையினர் இந்தியாவைக் கண்டறியார். அவர்கள் எல்லோரும் பிறப்பால் இலங்கைப் பிரஜைகளே.

1798 ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய தொழிலாளிகள் ஆயிரக்கணக்கில் கொண்டுவரப்பட்டனர். கோப்பிச் செய்கை 1824 ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. கோப்பி செய்கைக்காகவும் இந்தியத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். கோப்பிச் செய்கை அழிய தேயிலைத் தோட்டங்கள் 1845 ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டன. தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கை மிகவும்

(14 ஆம் பக்க்ம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத தேசத்துக்கு....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடினமாக இருந்ததினால் தொழிலாளிகள் வருகை குறைந்தது. அப்போது கங்காணிமுறை உருவாக்கப்பட்டது. கங்காணிகள் முன் நின்று இந்தியத் தொழிலாளிகளை இலங்கைக்குக் கொண்டு வந்தனர். தலைமன்னாரில் மண்டபங்கள் திறக்கப்பட்டன. அம்மண்டபங்களுக்கு 1845 தொடக்கம் 1849 வரையும் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையை இங்கு தருகின்றேன்.

1845 - 73,401
1846 - 42,317
1847 - 46,140
1848 - 32,175
1849 - 29,430

இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கு பல இடங்கள் திறக்கப்பட்டன. கொண்டு வரப்பட்டவர்களில் திரும்பிச் சென்றவர்களும் உண்டு. எது, ள்வ்வாறாக இருந்தாலும் பல இலட்சம் இந்தியத் தொழிலாளர்கள் - குறிப்பாகத் தமிழர்கள் - தேயிலை தோட்டங்களிலும் இறப்பர் தோட்டங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்களின் வழித்தோன்றல்கள் இந்திய மண்ணை மிதித்திருக்கமாட்டார்கள்.

இலங்கையில் முன்பு அரிசிக் கூப்பன்கள் கொடுக்கப்பட்டன. நாடற்றோருக்கு ஒரு வகைக் கூப்பன். இலங்கைப் பிரஜைகளுக்கு ஒரு வகைக் கூப்பன்.

1972 ஆம் ஆண்டில் தங்கவேலு என்பவர் என்னிடம் வந்தார். அவர் தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் மகன். கண்டி மாவட்டத்திலுள்ள யறோ தோட்டம். தங்கவேலு 1946 ஆம் ஆண்டு தோட்டத்தில் பிறந்து உள்ளார். அவரது தந்தையார் அதே தோட்டத்தில் 1901 ஆம் ஆண்டு பிறந்துள்ளார். இலங்கைப் பிரஜா உரிமை சட்டத்தின் பிரகாரம் தங்கவேலுவும் அவரது மூத்த சகோதர, சகோதரிகள் நால்வரும் பிறப்பால் இலங்கைப் பிரஜைகளாவர்.

தங்கவேலு வழக்காட விரும்பவில்லை. உணவுத் திணைக்களத்தில் கதைத்து இலங்கைப் பிரஜைக்கான கூப்பனைப் பெற்றுத்தரும்படி கேட்டுக்கொண்டார். உணவுத்திணைக்களம் விண்ணப்பத்தை ஏற்க மறுத்து விட்டது. திணைக்களத்தின் பிரதம அலுவலகர் (CHIEF CLERK) தமிழர். மிக மூர்க்கத்தனமாக நடந்து கொண்டார். தங்கவேலு பயம் கொண்டு பின் வாங்கத் தொடங்கினார். நான் அவ்விடயத்தை அத்தோடு விடவில்லை. இலங்கைப் பிரஜை என்பதில் ஐயம் ஏற்பட்டால் அமைச்சருக்கு விண்ணப்பிக்கலாம். பிரஜாவுரிமைச் சட்டம் 6 ஆம் பிரிவு அவ்வாறு கூறுகின்றது. ஒருவர் பிறப்பால் இலங்கைப் பிரஜையென அமைச்சர் சான்றிதழ் கொடுக்கலாம்.

சகல ஆவணங்களையும் அமைச்சுக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பினேன். 6 ஆவது பிரிவின் பிரகாரம் தங்கவேலு பிறப்பால் இலங்கைப் பிரஜை என அமைச்சரின் சான்றிதழ் கிடைக்கப்பெற்றது.

தங்கவேலுவை 'பலவந்தமாக' உணவுத் திணைக்களத்திற்குக் கூட்டிச்சென்றேன். சான்றிதழ் காண்பிக்கப்பட்டது. சான்றிதழ் வீசப்பட்டது. கறுவாத்தோட்டப் பொலிஸ் வரை போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பாவம். தங்கவேலு ஓடியே விட்டார். பல வருடங்களுக்குத் தங்கவேலுவைக் காணவில்லை. பல வருடங்களின் பின் தற்செயலாக தங்கவேலுவை வழியில் கண்டேன். ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை குடியுரிமை பெற்றுக்கொண்டேன் என்றார்.

இந்தியக் குடியரசே! பிறப்பால் ஒரு இலங்கைக் குடிமகன், ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை குடியுரிமை பெற்ற கொடூரத்தைப் பார்த்தீர்களா? ஒருவருக்கு இலங்கை குடியுரிமை வழங்கும்பொழுது, இந்தியா மூன்று பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கவேண்டுமல்லவா.

உண்மை என்னவென்றால், தேயிலை கொய்த மக்கள், றப்பர் எடுத்த மக்கள் எல்லோரும் பிறப்பால் இலங்கை பிரஜைகளே. இலங்கை பிரஜா உரிமை சட்டத்தின் (Ceylon Citizenship Act) பிரகாரம் அவர்கள் எல்லோரும் பிறப்பால் இலங்கைப் பிரஜைகளே (Citizen by Descent). குடியுரிமையை நிரூபிப்பதற்கு அவர்களிடம் ஆவணங்கள் இருக்கவில்லை. போதிய அறிவு, அனுபவமிருக்கவில்லை. அதனால், லட்ச லட்சம் தோட்டத் தொழிலாளிகள், பிறப்பால் இலங்கைப் பிரஜைகள், உங்கள் ஒப்பந்தத்தால் இந்தியா சென்றனர். ஒட்டுமொத்த இந்திய நன்மைக்காக தோட்டத்தொழிலாளிகள் பலி கொடுக்கப்பட்டனர்.

அவ்வாறே கச்சதீவு ஒப்பந்தம். தமிழக மீனவர்கள் பலி கொடுக்கப்பட்டனர்.

13 ஆவது திருத்தத்தாலும்,மாகாண சபை சட்டத்தாலும் இலங்கைத் தமிழர் நடுக்கடலில் விடப்பட்டனர். ஏன் டில்லிப் பேரரசு இவ்வாறு நடந்துகொண்டது? இந்தியாவின் இராணுவ

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடமாக தென்னிந்தியா மாறி வருகின்றது. அதன் பாதுகாப்பே இந்தியாவின் தீர்க்கமான முடிவு. சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்குள் வருவதைத் தடுக்கவேண்டிய நிலை இந்தியாவிற்கு உண்டு. அதனால், இலங்கையை தனது கட்டுப்பாட்டிற்குட்பட்ட நாடாக வைத்திருக்க இந்தியா விரும்பியது.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வைக் கூட கொடுக்கும்படி இந்தியா அழுத்தம் கொடுத்தால் இலங்கை, பாகிஸ்தான் பக்கம் சாய்ந்துவிடும் என டில்லிக்குப் பயம். சீனா பக்கம் சென்றுவிடும் என்று இந்தியாவிற்கு கவலை. இந்தியாவின் ஒட்டுமொத்த பாதுகாப்பும் கேள்விக்குறியாகிவிடும் என்று இந்திய பேரரசு எண்ணுகிறது.

அதனால், இலங்கைத் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, சுண்டங்காய் தீர்வொன்றைக் கொடுத்து சமாளிக்க தீர்மானித்தது. அதற்கேற்ப தனது நடவடிக்கைகளை டில்லி பேரரசு நகர்த்தியது. அதுதான் உண்மை. நகர்விற்கேற்ப மேற்கூறிய கடிதங்கள் பரிமாறப்பட்டன. இக்கடிதங்கள் டில்லியின் தேவையை பூர்த்திசெய்துவிட்டன.

அதனால், 28.10.87 இல் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய டில்லி பேரரசு முயற்சிக்கவே இல்லை. அவற்றைப் பற்றிக் கதைத்தாலே இலங்கை, சீனாவிற்கு பச்சைக்கொடி காட்டும் என்ற பயம் இந்தியாவை இறுகப்பிடித்தது. *


## 61 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 - 01 - 1976



உதிர்வு 28 - 02 - 2010

### சின்னராசா ஸ்ரீசங்கர்

திதி: பௌர்ணமி

கனவிலும் நினைவிலும் உன் மலர்ந்த
விழியைத் தேடுகின்றோம் நீ வர மாட்டாயா என்று
உன் அன்பு முகத்தை மீண்டும் ஒரு முறை
நாம் பார்க்க வேண்டுமே
விதியின் சதியிதுவோ? வேதனை தான்
வாழ்வின் முடிவோ? வாழ்ந்தது
போதுமென்று வானகம் சென்றாயோ?
எமக்கென்று இருந்த ஒளியினை
ஆண்டவன் தனக்கென்று எடுத்துக்கொண்டானோ?
நாமோ உன் பிரிவால் தனிமையிலே உருகுகின்றோம்
உன் அன்பையும் பாசத்தையும் ஈடுசெய்ய முடியாது...
உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்

33, செல்லர் வீதி,
நல்லூர்.

உன் பிரிவுத் துயரில் வாழும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 • 03 • 1952



மறைவு 29 • 03 • 2010

### அமரர் நாகமுத்து பரமலிங்கம்

கடந்த 09.03.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.04.2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ 20 ★ 02 ★ 1952



கண் நெகிழ 13 ★ 05 ★ 2006

### அமரர் சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணசாமி

அன்பான எங்கள் அப்பாவே
ஆண்டுகள் நான்கு கடந்துவிட்டாலும்
சொல்லிவிட முடியாத துயரம் அப்பா
உங்களைப் பிரிந்து அனாதையாகினோம் அப்பா
கண்ணீரோடு காத்திருப்போம் காலமெல்லாம்
வரவேண்டும் மீண்டும் எங்கள் அப்பாவாக....

நிரந்தர முகவரி : ஐங்கரம்,
காடிவளை, இளவாலை.
தற்காலிக முகவரி :
லவ் லேன், உடுவில். (97474)

நீங்காத நினைவோடு
மனைவி,
பிள்ளைகள்,
மருமகன்

## நான்காம் ஆண்டு ஞாபக அலைகள்



அன்னை மடியில் 26.01.1981

ஆண்டவன் அடியில் 13.05.2006

### அமரர் இரத்தினம் செந்தூரன்

(உரிமையாளர், ஆஞ்சனேயர் ரேடர்ஸ்)

தாயவள் வயிற்றினிலே பத்துத் திங்கள்
எங்கள் அனைவரின் நெஞ்சினில் நிரந்தரமாய்
குடி கொண்டவனே! எமதன் பிற்கினியவனே!
நாவினிலே உன் நாமம்
நாள் தோறும் குயிலிசையாக
தினம் தினம் உன் நினைவு
ஞாபக நீரோடையாக
பார் போற்ற வாழ்ந்தவனே!
உனை நினைத்து வாடுகிறோ மவனியிலே
உன் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவன் அடி பணியும்
உன் இனிய நெஞ்சங்கள்.

வேலணை வடக்கு,
வேலணை - 5

என்றும் உன் ஞாபகத்துடன் வாழும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.10.1990

வேலணையில் நேற்று விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை கடும் சேதமடைந்ததாகத் தெரிவிப்பு.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்து சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 175 பேர் இன்றுவரை மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

17.10.1990

யாழ்.நகரின் சில பகுதிகளுக்கு இன்று முதல் பரீட்சார்த்தமாக மூன்று மணித்தியாலங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

யாழ்.மாவட்டத்தில் மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அதிகரிப்பதென வடக்கு - கிழக்கு மாகாண சபை முடிவு.

18.10.1990

பலாலி இராணுவ முகாமிலிருந்து நான்கு முனைகளூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்திப் பின்வாங்கச் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

19.10.1990

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் வசாவிளான் சந்திப் பகுதியில் இரண்டாவது நாளாக கடும் மோதல் தொடர்வதாகவும் இரு தரப்புக்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிப்பு.

சிங்களப் படைகளுக்கு எதிரான போரில் விடுதலைப்புலிகள் வெல்ல வேண்டும். புலிகள் வென்றால்தான் ஈழத் தமிழர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவிப்பு.

20.10.1990

வயாவிளானில் சிக்கியுள்ள படையினரைச் சுற்றி புதிய வியூகம் அமைத்து விடுதலைப்புலிகள் கடும் யுத்தம் நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

மயிலிட்டி, தையிட்டிப் பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமானப்படை ஹெலிகொப்டரொன்று விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கடும் சேதமுற்றதாகத் தெரிவிப்பு.

21.10.1990

பலாலி இராணுவ முகாமிலிருந்து காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை முகாமை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தினரின் இரு டாங்கிகள் சேதமுற்றதாகத் தெரிவிப்பு.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே தொடரும் யுத்தம் காரணமாக வலிகாமம் வடக்குப் பகுதியில் பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இடம் பெயர்ந்து செல்வதாகத் தெரிவிப்பு.

22.10.1990

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால், இலங்கையில் தங்கியிருக்கும்போது ஜனாதிபதி மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவார் என எதிர்பார்ப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

23.10.1990

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, காங்கேசன்துறை சிமெந்து ஆலைப் பகுதிவரை முன்னேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே வீமன்காமம், தெல்லிப்பழைப் பகுதியில் நேரடி மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிப்பு.

24.10.1990

வயாவிளான், மாவிட்டபுரம், கட்டுவன் பகுதிகளில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற மோதல்களில் 15 இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் மேலும் பலர் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு.

வடக்கு - கிழக்கு மாகாணசபை, இணைந்த சபையாகவே இருக்கவேண்டும் என்பதில் தமிழ்க்கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையில் அடிப்படையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

25.10.1990

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதாகவும், அரசு, பொதுமக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் விமானக் குண்டு வீச்சு நடத்தி வருவதாகவும் இலங்கை அரசு மீது ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் குற்றச்சாட்டு. இத்தகைய போக்குத் தொடருமானால் இலங்கைக்குத் தாம் வழங்கும் நிதி உதவிகளை நிறுத்தப் போவதாகவும் அவை எச்சரிக்கை.

26.101990

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிப்பு. இது தொடர்பாக இலங்கை அரசுக்கும் ஆஸ்திரேலியப் பிரதமருக்குமிடையில் கடிதத் தொடர்புகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிப்பு.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான நிதி வளத்தைத் திரட்டும் விதத்தில் யுத்த உறுதி நோட்டுக்களைப் பணச் சந்தையில் விற்பனை செய்யும் நடைமுறையை அரசு கையாண்டு வருவதாகத் தெரிவிப்பு.

27.10.1990

பாரிஸ் நகரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்த இலங்கைப் பிரதமர் டி.பி.விஜேதுங்கவுக்கு எதிராக அங்கு வாழும் சிங்களவர் மற்றும் தமிழர்கள் கூடி ஆர்ப்பாட்டம்.

வயாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தில் கன்னியாஸ்திரியர் மடத்தைச் சேர்ந்த துறவிகளும் கன்னியாஸ்திரிகளும் இராணுவத்தினரால் பணயக் கைதிகளாகத் தடுத்துவைப்பு.

28.10.1990

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அறிந்து கொள்வதற்காக நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.

தென்னிலங்கையைச் சேர்ந்த பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது பிந்திய அறிக்கையில் தெரிவிப்பு.

29.10.1990

யாழ்.குடாநாட்டில் நேற்றுப் பரவலாக விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் ஏழு பொதுமக்கள் பலி; 30 பேர் வரை காயம், கட்டடங்கள் தரைமட்டமாகியதாகத் தெரிவிப்பு.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் பலாலிக்கு வந்ததையடுத்தே குடாநாட்டில் நேற்றுப் பரவலாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிப்பு.

30.10.1990

மட்டக்களப்பு கோமாரி மெதடிஸ்த தேவாலயத்தில் அகதிகளாகத்தங்கியிருந்து கடந்தவாரம் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய பொத்துவில் தமிழ் அகதிகள் அச்சம் காரணமாக மீண்டும் அகதிமுகாம்களில் தஞ்சம்.

31.10.1990

மூடப்பட்டிருந்த யாழ். ஆஸ்பத்திரியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிப்பு.

# புலிகளின் கனவுகளை நிறைவேற்றத் துடிப்போரின் ஓர் கட்டமே அமிதாப் வீடுமுன் நடந்த போராட்டம்

## அமைச்சர் சுசில் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 29

இலங்கையில் ஒழிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் கனவுகளையும், ஆசைகளையும் நிறைவேற்றுவதற்குத் துடிக்கும் பலர் பல நாடுகளிலும் இன்னும் செயற்படுகின்றனர் - என்று பெற்றோலியவள அமைச்சர் சுசில் பிரமஜயந்த தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விருது வழங்கும் விழாவை நடத்தும் அந்த அமைப்பின் தலைவரும் நடிகருமான அமிதாப் பச்சனின் வீட்டின் முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தையும் இதன் ஒரு கட்டமாகவே பார்க்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் பெரிய நபர்கள் அல்லர் எனவும், இவ்வாறான ஆர்ப்பாட்டங்களால் இலங்கையில் நடைபெறவுள்ள அந்த நிகழ்விற்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது எனவும் அவர் கூறினார்.

ஆர்ப்பாடம், போராட்டங்களை யாரும் மேற்கொள்ளலாம் எனக் கூறிய அவர், எமக்கும் பல ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதன் மூலம் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி, விடுதலைப் புலிகளின் கனவுகளை நனவாக்கத் துடிக்கும் பலர் இன்னும் செயற்படுவதை உணரமுடிகிறது எனவும் அவர் கூறினார்.

(சி)

# புலிச் சந்தேக நபர்கள் நெதர்லாந்தில் கைது?

கொழும்பு, ஏப். 29

நெதர்லாந்தில் விடுதலைப்புலி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதன் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து பொலிஸார் ஏழு விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சார்பான முறையில் செயற்பட்ட காரணத்தால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நெதர்லாந்து புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விரிவான விசாரணைகளின் பின்னரே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

16 வீடுகளும், வர்த்தக நிலையங்களும் சோதனை இடப்பட்டன என்றும், கணனிகள், இறுவட்டுக்கள், கையடக்கத் தொலைபேசிகள், ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் 40 ஆயிரம் யூரோ பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் நெதர்லாந்தின் பல்வேறு தமிழ் அமைப்புகளின் தலைவர் ஒருவரும் உள்ளடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# அக்கரைப்பற்றுப் பகுதியில் விபத்துகள் இருவர் பரிதாபப் பலி; 6 பேர் காயம்

கொழும்பு, ஏப். 29

மருதமுனையிலிருந்து அக்கரைப்பற்று ஊடாகச் சென்ற ஓட்டோவுடன், பொத்துவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த வான் மோதியதில் இரண்டு பேர் மரணமானார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 4 மணியளவில் கோமாரி பிரதானத்தியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த எஸ்.எம்.முத்தும்மா என்பவரும், ஓட்டோவின் சாரதியான சீனி முகம்மது சாலி என்பவருமே ஸ்தலத்தில் உயிரிழந்தவர்கள் ஆவார். மற்றையவர் மரணித்த பெண்ணின் மகன் முகம்மது சியாத்.

இவர் படுகாயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அக்கரைப்பற்றுக்கும், பொத்துவிலுக்கும் இடையில் தாண்டியடி எனும் இடத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் 5 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கடும் சுழல்காற்று, சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு பகுதிகளில் 70 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளனர்.

அநுராதபுரம்,வெந்தனுவெவ, மாத்தளை வில்கமுவ மற்றும் பொகவந்தலாவை லட்சுமி தோட்டம் ஆகிய பிரதேசங்களில் இடர்நிலை பதிவாகியுள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடுபில தெரிவித்தார்.

பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# வட கிழக்குப் பகுதியில் பணியாற்றும் பொலிஸாருக்கு தமிழ் மொழிப் பயிற்சி

## பொலிஸ் மா அதிபர் தகவல்

கொழும்பு, ஏப். 29

வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் சேவையாற்றும் ஆறாயிரம் பொலிஸாருக்கு தமிழ் மொழிப் பயிற்சிகளை வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும், இதன் மூலம் மக்களுக்குத் தேவையான சேவைகளை சிறந்த முறையில் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனவும் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்தார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது பொலிஸ் அகடமி திறப்பு விழாவில் உரையாற்றியபோதே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு - யாழ்ப்பாணம் வவுனியா மன்னார் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சேவையாற்றும் பொலிஸாருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான பயிற்சி வழங்குவதன் மூலம் பொலிஸாரால் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான சேவைகளை சிறந்த முறியல் வழங்க முடியும்.

மூன்று மாதங்களுக்கு 300 பேர் என்ற அடிப்படையில் ஐந்து வருடத்திற்கு ஆறாயிரம் பேருக்குப் பயிற்சி வழங்கப் படும்.

பொலிஸாரின் தொழில் ரீதியான ஆளுமைகளை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாகும். இந்தப் பொலிஸ் அகடமியை இதற்கு உச்ச அளவில் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

களனி பல்கலைக்கழகத்துடன் இந்த பொலிஸ் அக்கடமியை இணைத்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



2ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த

அமரர்

### சுப்பிரமணியம் இராமலிங்கம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25.03.1933 | 30.03.2010 |

கடந்த 30.03.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று [ 29.04. 2010 ] வியாழக்கிழமை கிளிநொச்சி ஏ-92, திருநகர் வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ-92, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

மனைவி- நாகம்மா
மகள்மார்- தமயந்தி, தயாநிதி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 ★ 11 ★ 1924 | 09 ★ 05 ★ 2009 |



### அமரர் தங்கம்மா சுப்பிரமணியம்

(நெடுந்தீவு மேற்கு)

பாசமாய் வளர்த்துப் பக்குவமாய் அரவணைத்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்து
தந்தையின் வழிகாட்டலில் தத்துவங்கள் போதித்து
தாயும் தந்தையுமாகி கருமங்கள் பல ஆற்றி
பிள்ளைகளின் கல்வியிலும் வாழ்விலும் உயர்வு தந்து
தள்ளாத வயதிலும் தனித்துவமாய் தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டி
எம் உள்ளங்களில் உறைந்துவிட்ட அன்னையின்
ஓராண்டு நினைவில் பிரார்த்திக்கின்றோம்.

இல:12, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (97378) குடும்பத்தினர்.

## எழுத்தறிவூட்டல் வகுப்பு ஆரம்பம்

நவாலி.ஏப்.29

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் எழுத்தறிவூட்டல் வகுப்பு இம் மாதத்திலிருந்து மாலை நேரத்தில் நடைபெற்று வருகின்றது.

இவ்வகுப்பின் பொறுப்பாசிரியராக திருமதி அன்ரன் மரியகொறற்றி நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் உடன் இணைந்து கொள்ளலாமென்று அதிபர் [illegible]கடாட்சம் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் கற்கும் வசதிகளை இழந்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று பலரும் தெரிவிக்கின்றனர். (50-100)

## மே தினப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.29

ஐக்கிய சோசலிச முன்னணி தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்தும் ஐக்கிய மேதினப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 1.45 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

து.குகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஐக்கிய சோசலிச முன்னணியைச் சேர்ந்தவர்களும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர். (6)

## மீளக் குடியமர அனுமதி

யாழ்ப்பாணம்.ஏப்.29

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஏ-9 வீதிக்கு தெற்குப்புறப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்து கொட்டில்களை அமைத்து வருகின்றனர். அப்பகுதியில் இருந்து 30 இற்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயுள்ளதாக அப்பகுதிக்குச் சென்று திரும்பியோர் தெரிவித்தனர். (04-207)


பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.
ரூபா 350 இல் இருந்து



S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)



எழுதுநர்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு அலுவலக எழுதுநர்கள் தேவை. 02.05.2010 ஞாயிறு காலை 9.30 மணிக்கு தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்,
மதுரம் இன்ஸ்ரிரியூட்,
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.


## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம்

( ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.04.1932 | 01.04.2010 |

எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்கள் கடந்த 01.04.2010 அன்று இறைபதம் அடைந்த போது உடன் நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் துயர்பகிர்ந்த உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், மலர் வளையம் சாத்தியும் இறுதி நிகழ்வில் கலந்து இரங்கலுரையாற்றியும் நாம் துயருற்ற வேளையில் தோள் கொடுத்து பல்வேறு வழிகளில் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று( 29.04.2010) வியாழக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும்( 01.05.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.)

36/11, பீ.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (97385) குடும்பத்தினர்.

## முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.29

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 13 மாணவர்களுக்கான இந்து நாகரீகப் பாடத்துக்கான முன்னோடிப் பரீட்சைகள் II எதிர்வரும் 3 ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான வினாத்தாள்களை நாளை வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] அறிவித்துள்ளார். (04-207)


வசீகரத் தோற்றத்திற்கு!
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.




'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
MANUFACTURED BY: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 ★ 10 ★ 1990 | 09 ★ 05 ★ 2009 |



### பரமசாமி சதீஸ்வரன் (சதீஸ்)


திதி: 29.04.2010

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்
மலர்ந்த உன் அன்பு முகம் மண்ணில் மடிந்து போனதுவே!
என்றும் உன் நினைவுகளுடன்
அஞ்சலிகள் உன் ஆத்ம சாந்திக்கு!

நிரந்தர முகவரி: D-4, மருதநகர், கிளிநொச்சி.
தற்காலிக முகவரி: முதலாம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர். (97365)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 ★ 07 ★ 1973 | 10 ★ 05 ★ 2009 |



### சுப்பிரமணியம் உதயதாஸ்

திதி: 29.04.2010

என்றும் அணையாத உதய தீபமே!
விதிவரைந்த பாதைவழி-என் வாழ்க்கை ஓடுதே
எத்தனை எத்தனை எண்ணற்ற கனவுகளை நீ சுமந்தாய்- என்றும்
என் அன்புக்கினியவரே! ஆயிரம் ஆயிரம் ஆசைகள்-உன்
அடிமனதில் ஆணிவேராய் - அத்தனையும் தவிடுபொடியானதே
என் உயிரில் கலந்துவிட்ட உதயனே
என் வாழ்வில் ஒளிகொடுத்த தெய்வமே! உனை எப்படி மறப்போம்?
உன் பிஞ்சுமகன் அப்பாவை எண்ணி நாளும் ஏங்குகின்றான்
அவனை என்ன சொல்லித் தேற்றுவேன்
உன் வதனம் உன் மைந்தனில் கண்டு ஆறுதல் பெறுகிறேன்
ஆனாலும் உற்ற துணையாய் உதவி செய்த கரங்கள்
பக்கத் துணையாய் பணிசெய்த பாங்கான நாள்கள்
எப்படித்தான் மறப்பேன். என் உயிரில் கலந்துவிட்ட உத்தமரே!
நீ அன்புடனே கூறிய ஆறுதல் வார்த்தைகள்
வாஞ்சையுடன் உரைத்துச் சென்ற வாசகங்கள்
அத்தனையும் என் மனதில் நிழற்படமாய்
கண்டவை எல்லாம் கனவாய் போகாதோ
கண்ணாளனே நீ கண்முன்னே வாராயோ
ஐயா! உன் ஆசைமுகம் நாம் இனி காணோமோ?
நீ இன்றி எம் உலகம் இருண்டதையா
ஊரின்றி உறவின்றி அநாதைகளானோம் நாம்
உன் நினைவுகள் மட்டும் எமக்குத் துணையாக
தனித்திருந்து விழித்திருந்து கண்களில் நீர் சுமந்து
நெஞ்சினில் உன்னை சுமந்தபடியே நடைப் பிணமாய் இங்கு நாம்
உன் நினைவுகளை என்றும் உயிரினில் சுமந்தபடி......

இராச வீதி,
நீர்வேலி. (97760) மனைவி, மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் அரசியல் சக்தியை கூறுபோடுவதற்கு முனைந்தவர்களுக்கு பாடம் புகட்டப்பட்டுள்ளது

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்29

''தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற வைத்தது போன்று எமது மக்களின் ஜனநாயக அரசியல் சக்தியையும் சுக்குநூறாக்க அரசு மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டு செயற்பட்டது. இதனை நன்கு உணர்ந்து கொண்ட எமது மக்கள் அச் சதி வலையில் சிக்காமல் தமது அரசியல் சக்தியான தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வடக்கு - கிழக்கில் வெற்றியடையச் செய்துள்ளனர்''.

இவ்வாறு பா. அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி நகரில் பொது அமைப்புகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், ஜீ.யோகேஸ்வரன் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வு களுவாஞ்சிக்குடி அமரர் இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக சேவையாளர் சுப்பிரமணியம், விஜயரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே பா. அரியநேத்திரன் எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்த்துப் போட்டியிட்ட எந்த தமிழ்க் கட்சியும் வெற்றிபெறவில்லை. அவர்களைத் தமிழ் மக்கள் ஓரம் கட்டியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கொள்கைக்கு மாறாக போட்டியிட்ட எந்தத் தமிழ்ப் பிரதி நிதியையும் தமிழ் மக்கள் வெற்றி பெறச் செய்யாமல் புறக்கணித்துள்ளார்கள். அவற்றிலும் மட்டக்களப்பு மக்களே அதிகளவான வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அளித்துள்ளார்கள். அதில் இருந்து எமது மக்கள் என்றும் தமிழ்த் தேசிய கொள்கையில் பற்றுடன் இருக்கின்றார்கள் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. எனவே எமது மக்களின் ஆணைக்கு ஏற்ப நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சோரம் போகாமல் பேரம் பேசி எமது மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெறக்கூடிய கௌரவமான நிம்மதியான வாழ்வைப் பெற உழைப்போம்.

இன்று மக்களிடையே ஓர் அம்சம் காணப்படுகின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியை ஜே.வி.பியை மலையகக் கட்சிகளை அரசு உடைத்து அதில் இருந்து உறுப்பினர்களை அதன் பக்கம் இழுத்து எடுத்தது. அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உடைத்து எடுத்து விடுவார்களோ என்பதுவே அது.

இது ஒரு போதும் நடக்காது நாங்கள் எங்களின் கொள்கையில் உறுதியாகவே இருப்போம். கடந்த 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட 22 உறுப்பினர்களும் இம்முறை நாடாளுமன்றம் கலையும்வரை அரசின் பக்கம் செல்லவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒருவிடயமாகும்.

கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற புதிய நாடாளுமன்ற அமர்வில் புதிய பிரதமர் உரையாற்றுகையில் தற்போது 30 வருட கால ஆயுதகலாசார யுத்தம் இல்லா தொழிக்கப்பட்ட பின்பு சமாதான சூழ்நிலைமையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள அமர்வில் பேசுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் எனத் தெரிவித்தார்.

நான் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன் அரசு யுத்தத்தை முடித்துவிட்டது சரி, சமாதான சூழ்நிலைமையில் தேர்தல் நடைபெற்றது என்கிறீர்கள். இருப்பினும் ஏன் அவசரகாலச்சட்டத்தைத் தொடர்ந்து அமுலில் வைத்திருக்கிறீர்கள் இது உங்களது உள்நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது அல்லவா இந்நிலையில் உங்கள் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா?

மட்டுமாவட்ட மக்களால் இன்று தெரிவு செய்யப்பட்ட நாங்கள் மூவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் எமது சேவைகளை முன்னெடுப்போம் எமது வெற்றியின் பங்குதாரர்களான ஏனைய ஐந்து வேட்பாளர்களின் ஆலோசனைகளையும் ஏற்று எமது கட்சியின் ஆதரவாளர்கள், அபிமானிகள், தொண்டர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துச் செயற்படுவோம்.

அத்தோடு கிராம மட்டத்தில் எமது கட்சியின் நடவடிக்கைக்கான குழுக்களை அமைத்து அதன்ஊடாகவும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இதன்மூலம் எமது அரசியல் சக்தியை நாங்கள் மேலும் வளர்க்கப் பாடுபடுவோம் -என்றார். (ளி)




# மட்டு.சாந்திபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப். 29

மட்டக்களப்பு - தென் எருவில்பற்று பிரதேச செயலகப்பிரிவின் சாந்திபுரம் கிராமத்திற்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படாமையினால் பெரும் சிரமங்களைத் தாம் எதிர்நோக்கி வருகின்றனர் என இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட சாந்திபுரம் கிராமத்தில் மின்சாரவசதிகளின்றி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சார வசதி இல்லாமையினால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மண்ணெண்ணையைக் கொண்டு இயக்கப்படுகின்றன எனவும், அதற்கு பெருந் தொகைப் பணம் செலவிடப்படுகின்றது எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சார வசதிகளின்மையால் தங்களது கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# கிழக்கு மாகாணசபை உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## மு.க. செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, ஏப். 29

கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் ஆலோசித்து வருகின்றது. எனத் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹஸன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் எதிர்க் கட்சித் தலைவராகவிருந்த பஷீர் சேகுதாவூத் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றதையடுத்தே இப் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படும் இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கிழக்கு மாகாணசபையில் உறுப்பினர்களாக இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கைகளை கட்சியின் உயர்பீடம் மேற்கொண்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# சட்டவிரேதமாக மின்சாரம் பாவித்த 18பேர் கல்முனைப் பகுதியில் கைது

அம்பாறை, ஏப் 29

கல்முனைப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பாவித்து வந்த 18பேர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது ஒவ்வொருவரும் தலா 10ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும் என உத்தரவிட்ட நீதிவான் எம்.எம். றிஸ்வி, மின்சாரசபைக்கு ஏற்பட்ட இழப்பை நஷ்டஈடாகச் செலுத்த வேண்டும் எனவும் கட்டளையிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்திருக்கிறது எனவும் இதனால் மின்சார சபைக்கு பாரிய நஷ்டம் ஏற்படுகிறது எனவும் கவலை தெரிவிக்கும் உயர் அதிகாரி ஒருவர், சபையின் அறிவுறுத்தல்களையும், எச்சரிக்கையையும் மீறிச் செயற்படும் பொது மக்கள், எமது சுற்றி வளைப்பின் மூலம் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனக் கூறுகின்றார்.

அக்கறைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, பொத்துவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# தேசிய மட்டப் போட்டிக்கு பெண்கள் கரப்பந்து அணி

மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பு அம்பிளாந்துறை கதிரவன் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட பெண்கள் அணி தேசியமட்ட போட்டியில் பங்கு, கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற சகல போட்டிகளிலும் வெற்றிபெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது. மாகாண மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்றதையடுத்து தேசிய மட்டத்திற்கான போட்டியில் பங்கேற்பதற்கு இந்தக் கரப்பந்து அணிக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர் அதாவுல்லாவுக்கு வரவேற்பு விழா நடத்த ஏற்பாடு

அம்பாறை, ஏப். 29

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சராகப் பதவியேற்றுள்ள தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு விழாவொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது மறுமலர்ச்சி மன்றம் இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது ஜீம் ஆப் பள்ளிவாசல், வர்த்தக சங்கம், இளைஞர் கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புக்களை ஒன்றிணைத்து இவ்வரவேற்பு விழாவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை போன்ற பிரதேசங்களிலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் அமைச்சர் அதாவுல்லாவுக்கு வரவேற்பளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படு கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# மனைவிக்கு தீ மூட்டியவர் விளக்க மறியலில் வைப்பு

## கல்முனை நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு, ஏப். 29

மனைவியின் உடலில் மண்ணெண்ணெய்யை உற்றி பற்றவைத்து படுகொலை செய்ய முயன்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க வேண்டுமென கல்முனை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கல்முனை நீதிவான் எம்.ஏ.ரிஸ்வி சந்தேக நபரான இராஜரட்ணம் புவனரட்ணம் (வயது-30) என்பவரை இரு வாரங்கள் வரை விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இரு குழந்தைகளின் தாயான புவனரட்ணம் வித்தியா (வயது27) உயிருக்கு ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதன வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் கல்முனைப் பொலிஸ் நிலைய சிறுகுற்றப் பிரிவுப் பொலிஸார் சந்தேக நபரை நேற்றுக் கைதுசெய்து உடனடியாகவே நீதிமன்றில் ஆஜராக்கினர்.

பிள்ளைகளை தனியறை ஒன்றுக்குள் கொண்டுசென்று அடைத்த கணவன் தன்னை சமையலறைக்குள் இழுத்துச் சென்று அங்கு குக்கரில் இருந்த மண்ணெண்ணெய்யை உடலில் ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்தார் எனக் குறித்த பெண்ணின் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் எம்.பி காரைதீவு பாடசாலைக்கு நேற்று விஜயம்

மட்டக்களப்பு, ஏப். 29

அம்பாறை மாவட்டத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமூகநேயன் பொ. பியசேன கடந்த திங்கட்கிழமை காரைதீவுக்கு விஜயம் செய்தார்.

மோட்டார் சைக்கிளில் அவர் எளிமையாக விஜயம் செய்தமை பலரையும் ஈர்க்க வைத்தது. ஒரு மோட்டார் சைக்கிளை அவரே செலுத்தி வந்தார். அதில் பின்னால் பொலிஸ் கான்ஸ்டபிள் அமர்ந்திருந்தார். மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் அடுத்த பொலிஸ்காரர் வந்தார். தேர்தலுக்கு முன்பு அவர் மோட்டார் சைக்கிளிலே பயணித்தவர் என்பது தெரிந்ததே.

நாடாளுமன்றம் சென்று சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் முதன் முதலில் நேற்று காரைதீவுக்கு அவர் விஜயம் செய்தார்.

முதலில் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்திற்கும், பின்னர் இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை உள்ளிட்ட பாடசாலைகளுக்கு விஜயம் செய்தார் பின்னர் பாலையடி பாலவிக்னேஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம் செய்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எஸ்.ஆர்', 'தராக்கி' எனப் பல்பரிமாணம் கொண்ட தர்மரத்தினம் சிவராமின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அவரது உற்ற நண்பர்களுள் ஒருவரான இரா. துரைரத்தினம் அவருடனான நினைவுகளை இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி மீட்டுகின்றார்.**

# சுட்டுக் கொல்வார்கள் என்று தெரிந்தும்

# துணிந்து நின்ற ஊடகப் போராளி!

## சிவராமின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று

சிவராம் அடிக்கடி சொல்லும் ஒரு வசனம்:-

''எனது அப்பா 50வயதுடன் போய் சேர்ந்துவிட்டார். நானும் 50வயதுக்கு மேல் இருக்கமாட்டேன்.



போட்டுத்தள்ளிவிடுவார்கள். எப்போது போடுவார்கள் என்றுதான் தெரியவில்லை.''

தன்னை நோக்கித் துப்பாக்கி குண்டுகள் எப்போதும் வரலாம் என தெரிந்து கொண்ட போதும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளாத சிவராமின் போக்கு துணிச்சலா, வீரமா, அல்லது மடமையா என எனக்குத் தெரியவில்லை.

கொஞ்சக்காலத்திற்காவது வெளிநாடு ஒன்றில் தங்கிவிடுமாறு நானும் தவராசாவும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முதல் சிவராமிடம் அவரது வீட்டில் வைத்துச் சொன்னோம்.

'ஆஹா'! என்ற வழமையான அவரின் பலமான சிரிப்புத்தான் முதலில் பதிலாக வந்தது.

எமது அரசியல் தஞ்சக் கோரிக்கைக்கான அனைத்து ஆவணங்களையும், கடிதங்களையும் தயாரித்துத் தூதரகத்திற்கு ஒப்படைப்பதற்கான சகல வேலைகளையும் செய்து தந்த சிவராம் நாங்கள் நாட்டைவிட்டுப் புறப்படத் தயாராக இருந்த வேளையில் ''வெளிநாட்டுக்கு போகிறீர்கள். அங்கு போனபின்தான் ஏன் வந்தோம் என்று கவலைப்படுவீர்கள்.. இங்கிருந்தால் ஒரு மனிசனாக நினைத்தாவது சுடுவார்கள். அங்கு நாயாகக்கூட மதிக்கமாட்டார்கள். வெளிநாட்டில இருக்கிறதை விட இங்கை சூடு வாங்கிச் சாகலாம்'' எனச் சொன்னார்.

ஆபத்து காத்திருக்கிறது எனத் தெரிந்து கொண்டு ஏன் சிவராம் அங்கு இருந்தார் என்று பலரிடம் எழும் கேள்வி என்னிடமும் எழுந்தாலும் அந்த மண்ணில் இருந்து சாகவேண்டும் என்ற அந்த இலட்சியத்தை நிறைவேற்றியிருக்கிறார் என்றுதான் ஆறுதல் அடைந்து கொள்ள முடிகிறது.

சிவராமை முதலில் நான் பத்திரிகையாளராகச் சந்திக்கவில்லை. 1981ஆம் ஆண்டு காலப்பகுதி, நான் பத்திரிகைத் துறையில் காலடி எடுத்து வைத்தகாலம்.

மட்டக்களப்பில் அப்போது பிரபலமாக இருந்த இலக்கிய அமைப்பான வாசகர் வட்டத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவே நான் முதலில் சிவராமை சந்தித்தேன்.

மட்டக்களப்பில் மட்டுமல்ல, வடக்கு,கிழக்கில் இலக்கியப் புரட்சி ஒன்றை ஆரோக்கியமான இலக்கிய விமர்சனங்களைச் செய்யும் அமைப்பான மட்டக்களப்பு வாசகர் வட்டம் மூலம் மறைந்த ஆனந்தனும் சிவராமுமே உருவாக்கினர். ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் புகழ்ச்சிதான் விமர்சனம் என்ற நிலையை மாற்றி சரியான திறனாய்வை முன்வைத்து இலக்கியப் புரட்சி ஒன்றை செய்த அமைப்பாக வாசகர் வட்டத்தை வழிநடத்திய பெருமை சிவராமையும் ஆனந்தனையுமே சாரும்.

மட்டக்களப்பில் மிகப் பிரபல்யம் வாய்ந்த தர்மரத்தினம் வன்னியனார் குடும்பத்தில் பிறந்த சிவராம் சிறுவயதில் மிகுந்த செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர். அவரது பாட்டனார் தர்மரத்தினம் வன்னியனார் செனட்டராக இருந்தவர். ஆரையம்பதியிலிருந்து அக்கரைப்பற்று ஒலுவில் என பல பிரதேசங்களில் அவர்களுக்கு இருந்த காணி- பூமியைக் கணக்குப் பார்த்தால் இன்னும் பத்து தலைமுறைக்குக் காணும் எனச் சொல்வார்கள். ஆனால், அவற்றை எல்லாம் துறந்து ஓர் ஒட்டாண்டியாக வாழ்ந்தவர்தான் சிவராம்.

ஆரம்பகாலத்தில் இலக்கியதுறையிலும் தமிழ் இலக்கணத்தைக் கற்பதிலும் ஆர்வம் காட்டி வந்தார். இதற்காக மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசாவுடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொண்டார். தற்கால இலக்கியங்களை மட்டுமல்ல பழம்தமிழ் இலக்கியங்களை கற்பதில் கூட மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார்.

வடமொழியைச் சேர்க்காது தமிழை எழுத வேண்டும் என்பதில் கண்டிப்பான போக்கைக் கொண்டவர் சிவராம்.

'தமிழ்நெற்'றின் தமிழ்ப் பதிப்பு வந்தகாலத்தில் செய்திகளிலும் கட்டுரைகளிலும் யுத்தம், இராணுவம், ஆஜர் போன்ற பிறமொழிச்சொற்களை நாங்கள் பாவித்தால் நல்ல தமிழ் சொல் இருக்கும் போது ஏன் பிறமொழிச்சொற்களை பாவிக்கிறீர்கள் எனக் கடிந்து கொள்வார்.

வட மொழிச்சொற்களையோ பிற மொழிச்சொற்களையோ தவிர்த்து இலகுதமிழில் செய்திகளை வழங்கியதில் தமிழ் ஊடகங்களுக்கு முன்னோடியாக 'தமிழ்நெற்'றின் தமிழ்பதிப்பு திகழ்ந்ததை அக்காலத்தில் அதைப்பார்த்தவர்கள் புரிந்திருப்பார்கள்.

1983களின் பின் நான் சிவராமை இலக்கியக் கூட்டங்களில் காணவில்லை. அவரது நண்பர் இராசத்தினத்திடம் கேட்ட போது அவர் சொன்னார் ''இனி நீங்கள் சிவராமைச் சந்திக்க முடியாது. எஸ்ஆரைதான் சந்திக்கலாம்'' என்றார். பின்னர் சிவராம் 'புளொட்' இயக்கத்தில் சேர்ந்து விட்டார் எனக் கேள்விப்பட்டேன்.

அப்போது நல்ல இலக்கிய விமர்சகனை இழந்து விட்டோமே என்ற ஆதங்கம் என்மனதில் எழுந்தது.

அதன் பின் சுமார் ஆறு வருடங்கள் கழித்து யாழ்ப்பாணத்தில் சிவராமை சந்தித்தேன். 1989ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ற வேளையில் 'முரசொலி' அலுவலகத்திற்கு வந்த சிவராம் தான் யாழ்ப்பாணத்தில் 'புளொட்' அரசியல் பிரிவின் சார்பில் தலைமை வேட்பாளராக போட்டியிடுகிறார் எனக் கூறினார்.

அப்போது சிவராம்தான் புளொட் இயக்கத்தின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளராக இருந்தார்.

சிவராமின் தந்தை வழி மட்டக்களப்பாக இருந்தாலும் அவரின் தாய் வழியினர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களாவார். அதனால்தானோ என்னவோ தான் தண்டயல் பரம்பரையை சேர்ந்தவன் என்றும் தன்னுடைய இரத்தத்தில் வீரம்நிறைந்த உப்பு ரத்தம் ஓடுகிறது என்றும் பெருமையாகச் சொல்லிக்கொள்வார்.

1989ஆம் ஆண்டு தேர்தலின் பின் சிவராம் புளொட் அரசியல் பிரிவிலிருந்து விலகிவிட்டார் எனக் கேள்விப்பட்டேன். மீண்டும் 1991இல் மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களின் வீட்டில் சிவராமை எதிர்பாராத விதமாகச் சந்தித்தேன். எஸ்ஆராக அல்ல. தராக்கியாக.

ஓர் இலக்கியக் காரனாக, போராளியாக, அரசியல்வாதியாக. நான் சந்தித்த சிவராமை இப்போது ஊடகத்துறை நண்பனாக பார்த்தபோது இரட்டிப்பு மகிழ்ச்சி.

அந்த மகிழ்ச்சியை 'சென்ரல் ஹொட்டலுக்கு' சென்று இருவருமாக கொண்டாடினோம்.

பிற்பட்ட காலத்தில் நாங்கள் அந்த ஹொட்டலுக்கு மத்திய முகாம் என்றே பெயர்வைத்திருந்தோம். மிகமுக்கியமான தீர்மானங்களைக் கூட அந்த மத்தியமுகாமில் வைத்துதான் எடுத்திருந்தோம்.

1993ஆம் ஆண்டில் பி.பி.ஸி ஆனந்தி அக்காவுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்று விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்து விட்டு மட்டக்களப்புக்கு வந்த சிவராமில் ஓர் உற்சாகம் தெரிந்தது.

ஆயுதப்போராட்டத்தின் மூலமே தமிழர்களுக்கான சுதந்திர நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையோடு 'புளொட்' இயக்கத்திற்கு சென்று ஆயுதப்பயிற்சி பெற்ற பின்னர் அந்த இயக்கத்தில் நம்பிக்கை இழந்து அதிலிருந்து விலகி ஊடகவியலாளராக பயணித்துக்கொண்டிருந்த சிவராம் மீண்டும் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவராக காணப்பட்டார்.

அதுவரை காலமும் 'தஐலண்ட்' பத்திரிகையில் எழுதி வந்த சிவராம் பின்னர் அப்பத்திரிகையில் எழுதுவதை நிறுத்தி 'தசண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கும் 'மிட்வீக் மிரருக்கும்' எழுத ஆரம்பித்திருந்தார்.

'தஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய அவரின் கட்டுரைகளுக்கும் பின்னர் 'த சண்டே ரைம்ஸ்,' 'மிட்வீக்மிரர்' பத்திரிகைளில் எழுதிய கட்டுரைகளுக்கும் இடையில் மாறுதல்கள் தெரிந்தன.

அப்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'விடிவானம்' வாரப் பத்திரிகையின் ஆசிரியராக நான் இருந்தேன். சிவராம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்தால் அப்பத்திரிகை அலுவலகத்திலேயே அதிக நேரத்தைக் கழிப்பார். மட்டக்களப்புக்கு வரும் ஒவ்வொரு தடவையும் விடுதலைப் புலிகளின்

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்துக்களின் போர்' நாளை ஆரம்பம்; முதலாவது வெற்றியைப் பெறுபவர்கள் யார்?

யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட்டுக்கு எனத் தனியான மகத்துவம் உண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது. விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கக் காத்திருக்கும் ஏராளமான இளைஞர்களின் தெரிவாகவும் கிரிக்கெட் அமைந்துள்ள நிலையில் பல பாடசாலைகளும் பெருந்துடுப்பாட்டப் போட்டிகளில் கவனம் செலுத்தி வருகின்றன.

சர்வதேச உலகில் ருவெண்ரி - 20 போட்டிகள் ஆதிக்கம் செலுத்தி வரும் இந்த வேளையில் யாழ்ப்பாணத்தின் துடுப்பாட்டப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் 2008 ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் இணைந்து 'இந்துக்களின் போர்' பெருந்துடுப்பாட்டத்தை ஆரம்பித்தன.

மூன்றாவது வருடமாக நடைபெறவுள்ள இந்தப் போட்டி ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதுவரை நடந்த இருபோட்டிகளும் சமனிலையிலேயே முடிவுற்று உள்ளன. இம்முறை நடைபெறும் போட்டியில் தாமே வெற்றி கொண்டு முதலாவது வெற்றி என்ற வரலாற்றுப்பதிவைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையிலேயே இரு கல்லூரிகளும் களமிறங்கவுள்ளன.

இந்த வருடம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு வருடம் என்பதால் முதல் வெற்றியைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொக்குவில் இந்துவின் அணியினர் கே.நிறோஜன் தலைமையில் பல வியூகங்களை வகுத்து உள்ளனர்.

ஆனால் யாழ்.இந்துவின் வீரர்கள் கொக்குவில் இந்துவை வீழ்த்தி முதலாவது வெற்றியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பல வியூகங்களை வகுத்து ஆர். நிறோஜன் தலைமையில் களமிறங்குகின்றனர். இரு அணிகளுமே இவ்வருடம் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி தோல்விகளை சந்தித்துள்ளனர்.

எது எவ்வாறு இருந்த போதிலும் ரசிகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்துக்களின் போரில் வெற்றி பெற்று முதல் வரலாற்று வெற்றியைப் பொறிக்கப் போகும் அணி எது என்பது முதலாம் திகதி மாலை தெரிந்து விடும். (50-6-86)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி



இருப்பவர்கள் இ-வ: பி.ஜயரட்ணராஜா, எஸ்.செந்தூரன் (உப அணித் தலைவர்), வி.கணேசராஜா (அதிபர்), ஆர்.நிரோஜன் (அணித் தலைவர்), எஸ்.நிமலன், எஸ்.உமாதரன்

நிற்பவர்கள் முதல் வரிசையில் இ-வ: எஸ்.அகிலதர்ஷன், கே. அமலன், எஸ்.மயூலக்ஷன், கே.கஜீபராஜ், கே.பிரகாஷ், ஜி.கிருசோபன், கே.டிலக்ஷன், கே.அனோஜன், ஏ.பார்த்தீபன்

நிற்பவர்கள் இரண்டாம் வரிசையில்: எஸ்.சஜீபன், எஸ்.சுதன், எல்.ரகோஜன், எஸ்.சக்தீபன், ஜெ.ஜஸ்மினன், ஜி.சிவந்திரன், ஜே. சஜீகன்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி அணி



இருப்பவர்கள் இ-வ : ஆர்.பிரதீபன் (உதவிப் பயிற்சியாளர்), பி.அதீசன் (விளையாட்டுத்துறை ஆசிரியர்), என்.கார்த்திக் (உப அணித் தலைவர்), ஏ.அகிலதாஸ் (அதிபர்), கே.நிறோஜன் (அணித் தலைவர்), ஆர்.எஸ்.உமாசுதன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்), கோகுலன் (பயிற்சியாளர்),

நிற்பவர்கள் முதல் வரிசை இ-வ : கே.ஜனுதாஸ் வி.ஜன [illegible]தனன், எஸ்.சாம்பவன், பி.பவிராஜ், கே.ராகுலன், எஸ்.சுஜிதரன், பி.பங்குஜன், கே.பிரதீப்

நிற்பவர்கள் இரண்டாம் வரிசையில் இ-வ: கே.திவாகர், கே.சிலோஜன், எல்.ஆதித்தன், எஸ்.உத்தமகுமாரன், கே.பிரதீஸ், ஆர்.பவித்திரன்,

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டி புதிய களத்தில் நடைபெறவுள்ளது

### கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



2008ஆம் ஆண்டு ஆரம்பித்த ' இந்துக்களின் போர்' ஒவ்வொரு வருடமும் வெற்றிகரமாக விளையாடப்பட்டு வருகின்றது- எமது கல்லூரியின் நூற்றாண்டு வருடமாக இந்த ஆண்டு அமைந்திருப்பதால் இந்தக் கிரிக்கெட் போட்டி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வருடம் நடைபெறப்போகும் இந்துக்களின் போர் விஸ்தரிக்கப்பட்ட மைதானத்திலும், புதிய ஆடு களத்திலும் நடைபெறவிருக்கிறது.

இரு பாடசாலை அணிகளும் சிறந்த துடுப்பாட்டக்காரர்கள், பந்து வீச்சாளர்களைக் கொண்டுள்ளதோடு சம பலத்துடனும் காணப்படு கின்றன. இரு அணிகளும் சம பலத்துடன் இருப்பதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், இரு பாடசாலைகளின் வீரர்கள் ஆகியோருக்கு இந்தப் போட்டியை வெற்றிகரமானதாக அமைக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்வதற்கு சம்மதம் தெரிவித்த ஈஸ்.பி.நகரத்தினம் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

ஏ.அகிலதாஸ்,
கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்

## மாணவர்களிடையே புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இந்துக்களின் போர் துணை புரியட்டும்

### யாழ்.இந்துக் கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினை கொண்டாடவிருக்கும் இச் சந்தர்ப்பத்திலே நடைபெறப்போகும் 'இந்துக்களின் போர்' [illegible]வாக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த இரு வருடங்களிலும் நடைபெற்ற இரு வலிமையான அணிகளுக்கு இடையேயான போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இந்த வருடமும் கூட இரு பாடசாலைகளும் சிறந்த பயிற்சியைப் பெற்று வலிமையான நிலையில் உள்ளன.

இந்தப் போட்டியின் மூலம் எமது மாணவர்கள் தமக்கிடையே புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதோடு தமது மகிழ்ச்சியான வாழ்க்கையை நோக்கி நடைபோட வேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

'இந்துக்களின் போர்' பெரும் துடுப்பாட்டம் இப்பணியினை ஆற்றத் துணைபுரியட்டும். இப்பெரும்துடுப்பாட்டத்தில் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.

வி.கணேசராஜா,
யாழ்.இந்துக் கல்லூரி அதிபர்

JAFFNA HINDU COLLEGE Vs KOKUVIL HINDU COLLEGE
BATTLE OF THE HINDUS

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | : கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம் |
| போட்டி நாள்கள் | : 30.04.2010, 01.05.2010 |
| ஆட்ட நேரம் | : 09.00 -12.00 12.45 -4.30 |

KOKUVIL HINDU COLLEGE
KHC VS JHC Battle of the HINDUS
JAFFNA HINDU COLLEGE
Official Media Sponsor உதயன் @Kokuvil Hindu College grounds 30th & 1st of May 2010

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுட்டுக் கொல்வார்கள் என்று தெரிந்தும்...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டுப் பிரதேசமான படு ...ன்கரைக்கு சிவராமும் நானும் ...வது வழக்கமாகும். சில வேளை ... நாங்கள் இராணுவத்தினரிடம் மாட்டிக்கொண்டதும் உண்டு.

1994ஆம் ஆண்டுகளின் பின் மட்டக்களப்பில் ஊடகத்துறையில் ஒரு மாற்றம் ஏற்பட்ட காலம் என்றும் சொல்லலாம். அந்த மாற்றத்திற்கு காரணமானவர்களில் சிவராமும் ஒருவர். ஊடகவியலாளர்களுக்கான ஓர் அமைப்பாக மட்டும் செயற்பட்டு வந்த கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தை மட்டக்களப்பின் அரசியல் சமூக விடயங்கள் பக்கம்திசைதிருப்பியவர்சிவராமாவார்.

ஆயுதப்போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளை மக்களை அரசியல்மயப் படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் அடிக்கடி கூறிவந்தார்.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் தொடர்ச்சியாக அரசியல் கருத்தரங்குகளை நடத்துவதற்கு உற்சாகம் கொடுத்து வந்தார். மட்டக்களப்பில் வாசகர் வட்டம் எவ்வூாறு இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்ததோ அதேபோல சிவராமின் பங்களிப்புடன் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் குறிப்பிட்ட அளவு அரசியல் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதில் முக்கிய பங்குவகித்தது எனலாம்.

1998ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களான மாணிக்கவாசகம், ஸ்ரீகஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டபோது அவர்களின் விடு தலைக்காக சட்ட நடவடிக்கை எடுப்பது உட்பட அவர்களின் விடுதலைக்காக தமிழ் ஊடகவியலாளர்கள் தேசிய மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தன் அவசியம் உணரப்பட்டது. அதனைத்தொடர்ந்து இலங்கை முழுவதிலும் உள்ள தமிழ் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. இந்த உருவாக்கத்தில் கூட சிவராமே முக்கியமாக இருந்தார்.

வடக்குக், கிழக்கில் உள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் பலரை கணனியுகத்திற்குள் கொண்டுவந்த பெருமையும் சிவராமையே சாரும்.

தமிழ் மக்களுக்கு உறுதியான அரசியல் தலைமை ஒன்று இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வந்த சிவராம் 2000ஆம் ஆண்டில் நவக்கிரகங்களாக இருந்த தமிழ்த் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழ் தேசியக்கூட்டமைப்பை உருவாக்குவதில் மூலகர்த்தாவாக இருந்தார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தில் இருந்த நாம் அவருக்கு பக்க பலமாக இருந்து பயணித்தாலும் கடினமான அந்தப் பயணத்தின் சாரதியாக இருந்தவர் அவர்தான்.

சிவராமை பலரும் அரசியல் ஆய்வாளராகத்தான் அறிந்திருக்கிறார்கள்.

அவருக்கு அரசியலை விட தமிழ் இலக்கியத்திலும் ஆழமான பார்வை இருந்து வந்தது. வெளிஇடங்களை விட மட்டக்களப்பு மக்கள் அவரின் இலக்கியப் பேச்சை கேட்பதற்கென்று பெருந்தொகையில் கூடுவதுண்டு. நகைச்சுவையுடன் கூடிய அவரின் இலக்கிய உரைக்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.

வாசகர் வட்டம் நடத்திய இலக்கியக் கருத்தரங்கில் உரையாற்றுவதற்கு சிவராம் அழைக்கப்பட்டிருந்தார். அன்று காலையில்தான் கொழும்பிலிருந்து சிவராம் வந்திருந்தார். வந்தவுடன் வாசகர் வட்ட நண்பர்கள் அவருக்கு ஓர் உத்தரவை பிறப்பித்திருந்தனர். கருத்தரங்கு முடியும் வரை உங்கள் மத்திய முகாமுக்கு போகும் வேலையோ 'கள்ளு' என்ற கதையோ இருக்கக் கூடாது என கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

வாசகர் வட்ட நண்பர்களின் உத்தரவை ஏற்றுக் கொண்டு கருத்தரங்கிற்கு வந்த சிவராம் தன் உரையை ஆரம்பித்தார். இந்தக் கூட்டத்திற்கு பேசுவதற்கு அழைத்த தன்னுடைய நண்பர்கள், இந்தக் கூட்டம் முடியும் வரை கள்ளு என்ற பேச்சே வாயில் வரக்கூடாது என உத்தரவு போட்டிருக்கின்றனர் எனக் கூறி ஔவையார் முதல் தமிழ் புலவர்கள் எல்லாம் பழம் பெரும் இலக்கியங்களில் கள்ளின் பெருமை பற்றி பேசியிருக்கும் விடயங்களை மிக அழகாக இலக்கிய நயத்துடன் பேசினார். அவரின் உரையின் பெரும்பகுதி இலக்கியங்களில் புலவர்கள் கள்ளின் பெருமை பற்றி என்ன சொன்னார்கள் என்பதாகவே இருந்தது.

கள்ளைப் பற்றிய பேச்சே இருக்க கூடாது என உத்தரவு போட்ட வாசகர் வட்ட நண்பர்கள் சிவராமிடம் மாட்டிக்கொண்டு தவித்தனர். சிவராம் எந்த விடயத்தையும் வெளிப்படையாகச் சொல்பவர் செய்பவர் என்பதற்கு இது போன்ற சம்பவங்கள் உதாரணமாகும்.

ஆங்கில ஊடகத்துறையின் மூலமே சிவராம் தன்னை ஊடகவியலாளராக அறிமுகப்படுத்திக்கொண்டு சுமார் பல ஆண்டுகளாக ஆங்கிலப்பத்திரிகையில் எழுதி வந்தாலும் பிற்காலத்தில் ஆங்கிலப்பத்திரிகைகளில் எழுதுவதை நிறுத்திக்கொண்டார்.

எவ்வளவுதான் தமிழ் மக்களின் பக்க நியாயத்தன்மைகளை தென்னிலங்கை சிங்களவர்களுக்குச் சொல்லி வந்தாலும் அவர்கள் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற சலிப்பின் காரணமாகவே தான் ஆங்கிலப்பத்திரிகைகளுக்கு எழுதுவதை நிறுத்தி விட்டுத் தனது மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழ் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கியிருக்கிறார் எனத் தமது இறுதிக் காலத்தில் சிவராம் சொல்லியிருந்தார்.

பகுத்தறிவுக் கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்த சிவராம் எந்த ஓர் இனமும் விடுதலை பெற வேண்டுமாக இருந்தால் அந்த இனம் அரசியல் தெளிவுள்ள சமூகமாக, உறுதியான அரசியல் தலைமையைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையைக் கொண்டவராகத் திகழ்ந்தார்.

ஆயுதப்போராட்டம் அழிக்கப்பட்ட இன்றைய நிலையில் உறுதியான தமிழ் அரசியல் தலைமை ஒன்று அவசியமாகிறது. இந்த வேளையில் தான் மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் சிவராம், ஜோசப் பரராசசிங்கம் போன்ற பல்துறை ஆளுமை கொண்டவர்களின் வெற்றிடத்தை உணர்கிறோம். இந்த வெற்றிடம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதற்காக சிங்கள தேசம் திட்டமிட்டு செயற்பட்டிருக்கிறது.

இந்த ஆபத்தை சிவராம் உணர்ந்திருந்தார்... ''நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்காக எந்த அழிவையும் சந்திக்கத் தயாராகவே இருக்கின்றேன். ஓடிவிடமாட்டேன்......'' என 2004 நவ 5ஆம் திகதி வீரகேசரி வார இதழில் எழுதியிருந்தார்.

எந்த ஆபத்து வந்தாலும் இந்த மண்ணில்தான் மடிவேன் என்ற வைராக்கியத்தில் சிவராம் வென்று விட்டார். ஆனால் அவர் விட்டுச் சென்ற வெற்றிடத்தை யார் நிரப்புவார்கள்?


## நான்கு ஆண்டுகளாய் நாதமாய் என்னுள்




அன்னை மடியில்: 07.04.1944

ஆண்டவன் அடியில்: 14.04.2006

### உயர்திரு சிவக்கொழுந்து இராஜதுரை

திதி: 29.04.2010

என்னுயிரில் கலந்த உறவே
என்னுயிர் தங்கள் உயிருடன்
சங்கமிக்கும் நன்னாள் வரை
உந்தன் நிஜமான நினைவுகள்
வாழும் வளரும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே'

என்றும் தங்கள் ஆருயிர் மனைவி
ஸ்ரீமதி [illegible] இராஜதுரை
(ஆசிரிய ஆலோசகர், கொழும்பு)

குப்பிளான், ஏழாலை.


## உலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் கடவுளைக் காண இயலும்

ஒரு பறவையின் பிறப்பு முறையை ஒருவர் எப்படி விளக்கப்படுத்த முடியும்?

யார் அதை அந்த முட்டைக்குள் வைத்தது? உருவான அந்த சின்னஞ் சிறிய கருவுக்கு முட்டையை உடைத்து வெளிவருவது எப்படி என்று யார் சொல்லிக்கொடுத்தது? ஒரு சிறிய விதைக்குள் ஒரு பெரிய விருட்சம் அதன் வியாபித்த கிளைகளோடு, பழங்களோடு எப்படி இருந்தது? எப்படி ஒருவரால் இதைப்புரிந்து கொள்ள முடியும்? இவைகளெல்லாம் கடவுளின் இருப்பைச் சுட்டிக்காட்டுகின்றன. பிரம்மம் பெரியதின் பெரியது சிறியதின் சிறியது. சனாதனமான என்றும் உள்ள அந்த சாட்சி, படைப்பின் விதை, ஆத்மா என்ற உருவில் முழுப் பிரபஞ்சத்தையும் ஊடுருவி உள்ளது.

ஒரு சிறுதுளி நீர் புனித கங்கை ஆற்றினை ஞாபகப்படுத்திக் கொண்டு வருகிறது. ஒரு சிறுதுளி நீருக்கும் கங்கை ஆற்றுக்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் இருப்பதாக ஒருவர் நினைக்கலாம். ஆனால் அளவில் தான் அங்கு வித்தியாசம் உள்ளது. பல மழைத்துளிகள் சேர்ந்து ஒரு அருவியாக ஓடுகின்றது. பல அருவிகள் சேர்ந்து ஒரு ஆறாகிறது. பல ஆறுகள் கடைசியாகச் சமுத்திரத்தில் சங்கமிக்கின்றன. ஆகவே சமுத்திரம் என்பது பல நீர்த்துளிகளின் கூட்டு என்று ஒருவர் தீர்மானிக்கலாம். பலமுள்ள சமுத்திரத்தில் இருப்பதைப் போல கடவுள் ஒரு அற்பத் துளியிலும் இருக்கிறார். ஒரு சிறிய நெருப்புப் பொறி பெரு நெருப்பாக உருவெடுக்கிறது. அற்பமான ஒரு சிறிய பொருள் அளவற்ற ஆற்றலுள்ள ஒன்றாக மாறுவதைக் கவனிக்கின்றோம். உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு மாற்றத்திலும் கடவுள் இருப்பை நாம் புரிந்து கொள்ளலாம். கடவுளை நீ காண வேண்டுமென்றால் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளிலும் அவரைக் காணலாம். பார்க்கிறான் இருந்தும் அவன் பார்க்கவில்லை. அவன் முட்டாள் அல்லவா. எல்லா நேரத்திலும் நீ கடவுளைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய். இருந்தும் நீ அவரைக் காணவில்லை என்று உணர்கிறாய். அவனிலும் பார்க்க ஒரு பெரிய மடையன் இருக்க முடியுமா? மனிதனின் பிறப்புக்கும் அவன் வளர்ச்சிக்கும் யார் பொறுப்பு. உனதுதான் காரணம் என்று நீ நினைக்கிறாய். உனவை யார் சிருஷ்டித்தது. இப்படியான முறையில் நீ சிந்தித்தால் நீ இறுதியில் அதன் அடிப்படையை உணர்ந்து கொள்வாய்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலைக்கு எதிராக அமிதாப் தமிழருடன் இணைந்து போரிட வேண்டும்

## 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான் கோரிக்கை

சென்னை, ஏப். 29

தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கொழும்பு - இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்வதை மறுபரிசீலனை செய்யும் நடிகர் அமிதாப் பச்சனுக்கு நன்றி தெரிவித்துள்ள நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான், தமிழ் மக்களுடன் இணைந்து இனப் படுகொலைக்கு எதிராக அமிதாப் போராட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையின் கொடூர முகத்தை மறைப்பதற்காக இந்திய அரசின் உதவியுடன் ரப்பட விருது வழங்கும் விழாவை வரும் ஜூன் 2 முதல் 4 ஆம் திகதிவரை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதில் இந்தி நடிகர் அமிதாப் பச்சன் முக்கிய பங்காற்றுகிறார் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் இனப்படுகொலையை மறைப்பதற்காக நடத்தப்படும் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் அமிதாப் கலந்து கொள்வதற்குக் கண்டனம் தெரிவித்து எமது 'நாம் தமிழர்' இயக்கத் தொண்டர்கள் மும்பையில் உள்ள அமிதாப்பின் வீடு முன்பு கடந்த ஞாயிறன்று முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

அமிதாப் பச்சனைச் சந்தித்து 10 கோடித் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் கூடாது என்று கோரிக்கை மனுவையும் அளித்தனர்.

இந்த நிலையில் போராடிய எமக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. அமிதாப் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் -

தமிழர்களின் உணர்வுகளைத்தான் புரிந்துள்ளார் எனவும், அவர்களது உணர்வுக்கு மதிப்பளிக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

விரைவில் இது குறித்து நிகழ்ச்சி நடத்தும் நிறுவனம் உட்பட அனைவரிடமும் பேசி இணக்கமான, நல்ல முடிவைத் தெரிவிக்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

கறுப்புக்கொடி, ஆர்ப்பாட்டம் என்றாலே தமக்கு எதிரான ஒன்று என்று நினைக்கும் தலைவர்கள் மத்தியில், உலகெங்கும் வாழும் 10 கோடி தமிழர்களின் வேதனையான உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளித்து தமிழர்களுக்குச் சாதகமான முடிவை எடுக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ள அமிதாப்பிற்கு நாம் தமிழர், இயக்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமிதாப்பைப் பின்பற்றி ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் உட்பட பிற நடிகர்களும் கலந்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த வெற்றி எமக்கு மட்டுமல்ல உலகெங்கும் வாழும் எம் தமிழ்ச் சொந்தங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

அமிதாப், இதோடு நின்று விடாது ஈழத்தில் சிங்கள வெறியர்களால் நிகழ்த்தப்பட்ட தமிழினப் படுகொலைக்கு எதிராக எம் தமிழ்ச் சொந்தங்களுடன் இணைந்து போராட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

# இந்தியக் கடலில் கைதுசெய்யப்பட்ட 15 இலங்கை மீனவர்கள் விடுதலை

இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தியக் கடற்பகுதியில் கடந்த 23 ஆம் திகதி அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் எனக் கூறி, இலங்கையைச் சேர்ந்த 15 மீனவர்களை கடலோர காவல் படையினர் கைதுசெய்தனர். அவர்கள் பயன்படுத்திய 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இலங்கை மீனவர்களை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, 15 இலங்கை மீனவர்களும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

# மன்னிக்க முடியாத குற்றத்தை செய்திருக்கிறார் நித்தியானந்தா

## ஸ்ரீ ரவிசங்கர் சுவாமி சீற்றம்



பெங்களூர், ஏப். 29

சுவாமி நித்தியானந்தா, 'தந்த்ரா" விதிமுறைகளை மீறிவிட்டார். மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கி விட்டார். மக்கள் பலரை ஏமாற்றி அவர் மன்னிக்க முடியாத குற்றத்தை செய்துள்ளார் - என்று வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீ ரவிசங்கர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் சின்சினாட்டி நகரத்திலிருந்து அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

துறவி என்பது ஆசைக்கிணங்காத வாழ்க்கை. தன் மகிழ்ச்சிக்காக, மக்கள் பலரை ஏமாற்றி, நித்தியானந்தா மன்னிக்க முடியாத குற்றத்தை செய்துள்ளார். தனக்கு என்று ஒரு பெண் துணையை வைத்துக் கொண்டு அப்படி அவர் ஆய்வு செய்து, தந்த்ரா வழி என்று சொல்லியிருக்கலாம்.

ஆனால் அவரது செயல், அவர் நிறுவிய பீடத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைத் தகர்த்ததோடு மட்டுமல்லாமல், பலரையும் பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறது - என்றுள்ளது.



நெஞ்சு வலி எனக் கூறி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நித்தியானந்தாவுக்கு, உடல் நிலையில் எந்தப் பாதிப்பும் இல்லை எனக் டாக்டர்கள் தெரிவித்தனர். இதையடுத்து வைத்தியசாலையிலிருந்து நித்தியானந்தாவை வெளியேற்றியபோது...

## பெண்களின் கற்புக் குறித்துப் பேசிய விவகாரம்:

# குஷ்புவுக்கு எதிரான 22 வழக்குகளையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது நீதிமன்று



புதுடில்லி, ஏப். 29

திருமணத்திற்கு முன்பு 'பாலியல் உறவு' வைத்துக் கொள்வது, சேர்ந்து வாழ்வது ஆகியவை குறித்துத் தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து தமிழகத்தில் நடிகை குஷ்பு மீது தொடரப்பட்ட 22 வழக்குகளையும் தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் அதிர டித் தீர்ப்பை அளித்துள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த நடிகை குஷ்பு, தமிழ் பெண்களின் கற்பு குறித்து தனது கருத்தை தெரிவித்தார். திருமணத்திற்கு முன்பு செக்ஸ் உறவு வைத்துக் கொள்வது தவறல்ல. சேர்ந்து வாழ்வதும் தவறல்ல. பாதுகாப்பான முறையில் செக்ஸ் உறவு வைத்துக் கொள்ள வேண்டும். இன்று தமிழகத்தில் எத்தனை பேர் கற்புடன் உள்ளனர் என்றெல்லாம் கூறியிருந்தார்.

அவரது கருத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. குஷ்புவின் பேச்சைக் கண்டித்து அவரது வீட்டைப் பெண்கள் அமைப்பினர் செருப்பு, துடைப்பம் உள்ளிட்டவற்றுடன் முற்றுகையிட்டனர். இதையடுத்து ரீ.வியில் தோன்றிய குஷ்பு கண்ணீர் விட்டு அழுதபடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து குஷ்பு மீது 22 வழக்குகள் தொடரப்பட்டன. இதில் மேட்டூர் நீதிமன்றில் மட்டும் குஷ்பு ஆஜரானார்.

மேலும் தன் மீதான அனைத்து வழக்குகளையும் ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அது தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து உச்ச நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையிலான ஆயம் விசாரித்து வந்தது. கடந்த மாதம் இறுதி விவாதம் நடந்தது. அப்போது தலைமை நீதிபதி தெரிவித்த கருத்துக்கள் நாடு முழுவதும் இந்து அமைப்புகளின் கடும் கண்டனத்தைப் பெற்றன.

இந்த நிலையில், நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், நீதிபதிகள் தீபக்வர்மா, சௌகான் ஆகியோர் அடங்கிய ஆயம், குஷ்பு மீது தமிழகத்தில் தொடரப்பட்ட 22 கிரிமினல் வழக்குகளையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

தீர்ப்பு குறித்து நடிகை குஷ்பு தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது தான் எனது சட்டத்தரணி தொலைபேசி மூலம் எழுப்பி இந்தச் செய்தியைக் கூறினார். இது எனக்கு மகிழ்ச்சியையும், நிம்மதியையும் அளித்துள்ளது.

ஒரு பெண் வெற்றிகரமாகப் போராடுவது என்பது மிக லேசானதல்ல. நான் வெற்றி பெற்றுள்ளேன். உண்மையில் நான் திருமணத்திற்கு முந்தைய செக்ஸ் உறவு குறித்து கருத்து தெரிவிக்கவே இல்லை - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த இந்தியத் தூதரக அதிகாரி கைது!

புதுடில்லி, ஏப். 29

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகத்தில் செயலராகப் பணியாற்றிவந்த பெண் அதிகாரி ஒருவர் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்புக்கு உளவுபார்த்தார் என புதுடில்லி தனிப்பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக திம்புவில் நடைபெற உள்ள சார்க் உச்சிமாநாடு தொடர்பாக விவாதிக்க வேண்டும் எனக்கூறி நான்கு நாட்களுக்கு முன்பு மாதுரி குப்தா டில்லிக்கு அழைக்கப்பட்டு பின்னர் கைதுசெய்யப்பட்டார் எனத் தகவல்கள் தெரிவித்தன.

இதைத்தொடர்ந்து கடந்த 4 நாள்களாக குப்தாவிடம் தீவிர விசாரணை நடைபெற்றது.

மாதுரி குப்தா பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஊடகம் மற்றும் தகவல் பிரிவில் பணியாற்றி வந்தார் எனவும், கடந்த சில மாதங்களாக அவரின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தன எனவும் தகவல்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் உளவு அமைப்புகளுக்கு தகவல்களை அளித்ததமைக்காக குப்தா கைது செய்யப்பட்டார் என உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை தெரிவித்தார்.

இதேபோன்று குப்தாவுக்குத் தகவல் அளித்த பாகிஸ்தானில் உள்ள 'ரோ' நிலைய அதிகாரி ஷர்மாவின் நடவடிக்கைகளும் ஆராயப்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் தெரிவித்தன.

# இந்தியாவில் தாக்குதல் நடத்த லஷ்கர் - இ - தொய்பா திட்டம்

## உள்துறை இணை அமைச்சர் எச்சரிக்கை

டில்லி, ஏப். 29

இந்தியாவில் தாக்குதல் நடத்த லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

மேலும் தாக்குதலை நடத்த வசதியாக மாலைதீவு போன்ற அண்டை நாடுகளில் ஆதரவை அந்த அமைப்பு திரட்டி வருகிறது எனவும் தெரியவந்துள்ளது.

மக்களவையில் இத்தகவலை மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் மகான் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இந்தியாவில் பல்வேறு பகுதிகள், நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், தொழிற்சாலை கட்டடங்கள், சுற்றுலாத் தலங்கள் மீது தாக்குதல் நடத்த லஷ்கர்-இ-தொய்பா அமைப்புத் திட்டமிட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து மத்திய அரசு விழிப்புடன் பல்வேறு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் முக்கிய பகுதிகள், கட்டடங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்புகளின் திட்டங்களைத் தடுக்கும் விதமாக கண்காணிப்புடன் மத்திய அரசு செயற்பட்டு வருகிறது. புலனாய்வு நிறுவனமான தேசிய விசாரணை அமைப்பை (என்.ஐ.ஏ.) வலுப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் 24 மணி நேரமும் செயற்பட்டு வருகிறது. என்.ஐ.ஏ. தரும் உளவுச் செய்திகள் மற்ற உளவு அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

மேலும் மாலைதீவுகள் போன்ற நாடுகளில் ஆதரவைத் திரட்ட லஷ்கர்-இ-தொய்பா முயன்று வருகிறது என நமது நாட்டு உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதைத் தொடர்ந்து மாலைதீவின் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு தொடர்பான இந்தியாவின் கவலையைத் தெரிவித்துள்ளோம்.

ஏற்கனவே இந்தியாவும், மாலைதீவு நாடும் பாதுகாப்பு விடயத்தில் பேச்சு நடத்தி பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புலனாய்வு அமைப்பை பலப்படுத்துவதற்காக தேசிய புலனாய்வு ஒருங்கிணைப்பாளர் பதவியை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில், MAY 2ம் திகதி BBS இன்
புதிய பாலர்பாடசாலை ஆரம்பம்.

8TH Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years
Pre School 4-5 Years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

விரைவில்.....
நீர்வேலியிலும்,
உடுப்பிட்டியிலும்.

வேறு கிளைகளில்
புதிய தவணைக்கான
மட்டுப்படுத்தப்பட்ட
அனுமதிகள் உள்ளன.

விசேட பாலர் நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா, ஒளிவிழா, பட்டமளிப்பு விழா,
மாணவர் சித்திரம், கைவினை, கண்காட்சி, Sports Meet.

Contact : 021 2225796, 0776646357.

BRITISH BUSINESS SCHOOL

சாவகச்சேரி: 11, தர்மோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகாமையில்)
பிரதான வளாகம்: 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 021-2225796



## அமரர் மகேஸ்வரி முதியோர் பராமரிப்பு இல்லம்

புதிய சித்திரைப் புத்தாண்டில்.....
01.05.2010 முதல் ஆரம்பம்

★ நீங்கள் உங்கள் முதியோர்களைப் பராமரிப்பது எப்படி என்று கவலைப்படுகின்றீர்களா?
★ அமைதியான சூழலில் அவர்கள் பராமரிக்கப்படுவர்
★ கவலை வேண்டாம். முதியோரது சந்தோசத்தினைக் கருத்திற்கொண்டு சகல வசதிகளும் அடங்கிய இந்தப் பராமரிப்பு நிலையத்துடன் தொடர்புகொண்டு மன நிம்மதி அடையுங்கள்.
★ உடனடியாக தொடர்புகொண்டு உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 4922589,021 4922588. தொ.நகல் இல.: 0212226180



## The Princess Of Wales

Nursing Home
132, Kachcheri Nallur Road, Jaffna.
T.P: 021 4922589, Fax No: 0212226180

புதிய சித்திரைப் புத்தாண்டில்..

புதுப்பொலிவுடன் புதிய ஆரம்பம்

ஆரம்பம்: 01.05.2010

அமைதியான சூழலில் மகத்தான வைத்திய சேவை

வெளிநோயாளர்கள் பிரிவும் டாக்டர்கள், தாதிமார்களது சேவைகளும் சகலவிதமான இரத்த பரிசோதனைகளும் சிறுநீர் பரிசோதனையும் ஸ்கானிங் (Scanning), E.C.G. மற்றும் டாக்டர்களின் ஆலோசனைகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிகவும் மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

காலை 6 மணிமுதல் இரவு- 9 மணிவரை திறந்து இருக்கும்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
0214922589,021 4922588

வெற்றிடங்கள் :
வைத்திய நிபுணர்களும் அனுபவம் வாய்ந்த தாதிமார்களும் Pharmacist உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

Medical Director, Princess of Wales Nursing Home
132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். E-mail:princesshosp@gmail.com


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
20.08.1954

உதிர்வு
09.05.2009

அமரர்
### ஐயாத்துரை குமாரகுலசிங்கம்

*வருடமொன்று ஆனதப்பா - நீர்*
*வாரியணைத்து நாளாச்சு*
*விரதமிருந்து காத்திருப்போம் - சேர்ந்திருந்து*
*விருந்துண்ண வாரீரோ.*

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம். (97398) குடும்பத்தினர்.


## German, Swiss, Deutsch
மொழி வகுப்புகள்

மேற்படி வகுப்புகள் எதிர்வரும் வைகாசி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:
Miss. Kajenthini.S
No. 55, Somasundram Lane,
Chundukuly, Jaffna. (யாழ்.கச்சேரிக்கு அருகாமையில்)
தொ.பே. 0771604823
(97396)


## மழை வேண்டிப் பாராயணம்

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்.குடாநாடு மழையின்றி வறட்சியான நீர்வளம், நிலவளம் குன்றி மக்கள் மட்டுமல்லாது பிற உயிரினங்களும் துன்பமடைந்து வெயிலின் கொடுமையால் வாடுவதை கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் சைவ ஆலயங்கள், சைவ இல்லங்களிலும்மழைவேண்டிப் பிரார்த்தித்து தேவாரத் திருப்பதிகங்களை பாரா்யணம்செய்யுமாறுவ மக்களை பணிவுடன் வேண்டுகின்றனர்.

இதற்கு அமைவாக திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த மேகராகக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்த நீலாம்பரி இராகத் திருப்பதிகங்களை தொகுத்து இம் மன்றத்தினர் வெளியிட்டுள்ளனர்.

'மழை வேண்டல் திருப்பதிகங்கள்'என்ற பிரசுரத்தை தமிழ் நாடு திருவாடு துறை ஆதீனத்தால் 'அடியார்களுக்கு அமுதூட்டும்அண்ணல்' என்ற பட்டம் பெற்றவரும்மன்றத்தின்பொருளாளருமான கந்தையாப்பிள்ளை சிவபாலன் ஞானகானமாக அன்பளிப்புச் செய்து வருகிறார்.

இப் பிரசுரத்தை யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, க.குகந்தையாப்பிள்ளை வர்த்தக நிறுவனத்திலும், அகில இலங்கைத் திருமுறை மன்றத்திலும்பெற்று ஆலயங்கள், சைவ இல்லங்கள் தோறும் மழை வேண்டிப் பிரார்த்தித்து இத் திருப்பதிகங்கள் மறைப்பாராயணம் செய்வோமாக என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அடியார்பெருமக்களை அழைக்கின்றார். (ஒ)

## வீதி அபிவிருத்தி

கோப்பாய், ஏப்.29

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியை அகலமாக்கும் நடவடிக்கைகள் துரித மாக நடைபெற்று வருகின்றன.

இதன் போது பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தமது விருப்புரிமை மற்றும் சம்மதத்தை தெரிவித்திருந்தன. தற்போது வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவு கிராம அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் மற்றும்பொது அமைப்புக் களிடம் சம்மதங்களைப் பெற்று வருகின்றனர். (4-72)

# மரண அறிவித்தல்கள்

## செல்வராஜா தனலிங்கம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடா ஒட்டாவாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா தனலிங்கம் (இளைப்பாறிய தொழில் நுட்பஉத்தியோகத்தர் - சீனிக் கூட்டுத் தாபனம், திருகோணமலை) கடந்த (26.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராஜா-அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ் சென்றவர்களான கனகசபை-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணிதேவி (இளைப்பாறிய ஆசிரியை, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் துஸ்யந்தி (லண்டன்), ரிஷாந்தி (கனடா), பிருந்தா (கனடா), தமயந்தி (லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜன் (லண்டன்), கிருபாலிங்கம் (கனடா), பாஸ்கரன் (கனடா), விசாகேசன் (லண்டன்), தர்ஜினி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சிவலிங்கம், ரதிமணிதேவி (லண்டன்), ரஞ்சனாதேவி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலுப்பிள்ளை கனகரட்ணம், சின்னநயினார் (கனடா) மற்றும் சிவபாக்கியம் (மாம்பழம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விதூஷன், ஷாயகி, கேஷிநிசூதன், சாஹித்ரா, ஸப்தவி, பிரமோத், அஸ்வத், ஆதீஸ்வர், சிந்தூரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2010 சனிக்கிழமை மாலை 7.30 மணிக்கு (இலங்கை நேரப்படி) கனடா Eliginmills Cemetery Visitation Centre, 1591 Eliginmills Road, E Richmmdhill on L4sim9 என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வராஜா அவனியூ,
அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (சி/567046)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா முருகையா
(தனியார் பேருந்து உரிமையாளர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முருகையா கடந்த (27.04.2010) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கனகராணியின் அன்புக் கணவரும், சசிகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற காஞ்சனா மற்றும் நிறஞ்சனா (ஜேர்மனி), வசந்தனா (ஜேர்மனி), சதீஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ் (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), வதனி (ஜேர்மனி), அகல்யா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், டினா, உமேஸ், டர்சிகா, நதினா, மெலானி சஜிதன், தனுசா, டெனிசா, கீதன், கவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (97702)

தகவல் :
சி. சந்திரராசா
(மைத்துனர்).

## திருமதி ஆறுமுகம் தையல்நாயகி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் தையல்நாயகி கடந்த (26.04.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் கந்தையா ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் குகதாஸ் (பிரான்ஸ்), குகராணி (கனடா),கமலதாஸ் (அமெரிக்கா), கமலராணி, பாலேந்திரதாஸ் (லண்டன்), குகேந்திரதாஸ் (லண்டன்), இந்திராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னத்துரை(லண்டன்), காலஞ்சென்றவர்களான சதாசிவம், குணவதி, இராஜேஸ்வரி மற்றும் இரத்தினசிங்கம், குணநாயகி, சண்முகநாதன், வரதலச்சுமி, பத்மேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தரஞ்சிதமலர், பரமேஸ்வரன், செல்வறஞ்சினி, இராசேந்திரன், பிரபலதா, நந்தினி, ஸ்ரீதர் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிவேதா, திவாகர், நிரோஷா, ரஞ்சித்குமார், லோகதர்ஷினி, அஷோக்குமார், லோஜன்,காயத்திரி,ஷகிலா, தனுஷா, தனுஷன், வாகீசன், சேயோன், சிந்தியா, சன்ஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தருண்யா, லக்ஷ்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*21, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை.*

தகவல் :
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.ஐ.எஸ் நிறுவனத்தின் பதினான்காவது நிறுவன தினமும் 2010ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவும் நேற்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை:

விருந்தினர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், நிறுவனத்தின் பணிப்பாளர் கே.விக்னேஷ் குத்து விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரை மூன்றாவது படத்திலும், மாணவியொருவர் சான்றிதழ் பெறுவதை இறுதிப் படத்திலும்

# சிறப்பாக நேற்று நடந்தேறிய ஐ.ஐ.எஸ் நிறுவனப் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கணனிக் கற்கைநெறி நிறுவனமான ஐ.ஐ.எஸ் தனது 14ஆவது நிறுவன தின நிகழ்வையும், 2010ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவையும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஜூபிலி மண்டபத்தில் நேற்றுச் சிறப்பாக நடத்தியது.

நேற்றுக்காலை 9மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வுகளில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்ச்சியைத் தொடர்ந்து நிறுவனப் பணிப்பாளர் கே.விக்னேஷ் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வின் போது மாணவ, மாணவியர் பட்டங்கள், சிறப்பு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஒ-க)

# 7வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய யாழ்.கல்வி வலய ஆசிரியர்களுக்கு தனித்தனி இடமாற்றக் கடிதங்கள்

அச்சுவேலி,ஏப்.29

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதங்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு தொகுதிக் கடிதங்கள் கடந்த செவ்வாய்கிழமை அனுப்பிவைக்கப்பட்டன. அவை அனேகமாக இன்று சம்பந்தப்பட்டவர்களின் கைகளில் கிடைக்கும். தொடர்ந்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஓரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்களில் மே முதலாம் திகதியில் இருந்து புதிய பாட சாலைகளில் கடமையேற்கத்தக்க வகையில் அறிவிப்பு விடுக்கப்பட்டுள் ளது.

முதலாவது தொகுதி ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தொடந்து பாடரீதியாகவும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்த வகையில் 500இற்கும் மேற் பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய் யப்படவுள்ளனர்.

வெளிமாவட்ட சேவை மற்றும் கஷ்டப் பிரதேசப்பாடசாலை சேவை இல் லாத 45வயதுக்கு உட்பட்ட ஆசிரி யர்களை உள்வாரி இடமாற்றத்துக்கு உள்ளாக்காமல் தற்பொழுது சேவையில் உள்ள பாடசாலையில் இருந்து நேரடியாக வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள பாடசாலைகளுக்கு விடுவிக்கப்படலாம் என்றும் கூறப்படு கிறது.

யாழ்.மாவட்ட மட்டத்தில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட இருப்பதால் இன்று (வியாழக் கிழமை) இது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப் படலாம் என அறியப்படுகின்றது.

வடக்குமாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணத்தில் உத்தியோக பூர்வமாக வந்து தங்கி நிற்பதால் யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்விப் பணிப்பாளர்களையும் உள்ளடக்கிய கலந்துரையாடலில் இது தொடர்பான இறுதி முடிவுகள் இன்று மேற்கொள்ளப்படலாம் என நம்பப்படுகின்றது. (ஒ-1)

# சர்வதேச அழுத்தங்களை முறியடிக்க பொதுமக்களை அழைக்கிறார் பிரதமர்



கொழும்பு, ஏப்.29

சர்வதேச நாடுகள் இலங்கை மீது பிரயோகிக்கும் தேவை யற்ற அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளை முறியடிப்பதற்குத் தயாராகுமாறு பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாட்டு மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்காக இந்நாட்டு மக்கள் இன, மத, பேதங்களுக்கு அப்பால் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து தமது வரலாறு, அறிவு,பலம், உரிமை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமர் பொறுப்புகளை உத்தியோக பூர்வமாகக் கையேற்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எனக்குக் கிடைத்திருக்கும் பிரதமர் பதவி எனக்குரியதல்ல. இந்த நாட்டு மக்களுக்கு உரியது. இதன் மதிப்பும், கௌரவமும் இந்த நாட்டு மக்களுக்கே செல்கின்றது. 60வருடங்களாக மிகவும் அர்ப்பணிப்புடன் நான் செய்த சேவைக்காகக் கிடைத்ததே இந்தப் பதவி. நான் செய்த அந்தச் சேவையின் பலாபலன்கள் பிரதமர் வடிவில் இப் போது இந்நாட்டு மக்களுக்குக் கிடைத்துள்ளன.

பிரதமர் பதவியின் முழுப் பொறுப்பும் இந்நாட்டு மக்களுக்கே உரியது. நான் என்றைக்கும் டி.எம்.ஜயரட்ணதான்.

நாட்டை முன்னேற்றுவதற்கு ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவக் கூடியவர் நான் தான் என நினைத்துக் கொண்டே அவர் எனக்கு இந்தப் பிரதமர் பதவியை வழங்கியி ருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதன் அடிப்படையில் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு நான் வாழ்நாள் முழுவதும் முழு ஆதரவை வழங்குவேன்.

எமது எதிர்கால சந்ததியினர் நிம்மதியாக வாழக்கூடிய வகையில் நாம் எமது பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும். இதற்காக இந்நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும். அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கவேண்டும்.

சர்வதேச நாடுகள் பல தேவையற்ற முறையில் எமது நாட்டு விடயங்களில் தலையிடுகின்றன. இந்த நாட்டு மக்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்தத் தலையீட்டை எதிர்க்க வேண்டும்.

இதற்காக நாம் எமது பலம், அறிவு, வரலாறு, உரிமை போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டும். சர்வதேச சக்திகளிடமிருந்து எம்மைப் பாதுகாக்க இந்த நட வடிக்கை உதவும். - என்றார். (அ-சி)


English Teachers

Vacancy

Full-time /Part-time English Teachers are wanted to teach Spoken English in a repated institute to students,school-leavers, workes and officers.

**Full-time English Teachers**

Age above 28 years. Salary above Rs. 25 000

**Part-time English Teachers**

Age above 25 years

**Please apply on or before 07-05-2010**

விளம்பர இலக்கம் 4013
உதயன் பணிமனை கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்



### இராசையா செல்வநாயகம்

நீர்வேலி, கரந்தனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்வநாயகம் நேற்று (28.04.2010) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-சிவபாக்கியம் தம்பதியினரின் புதல்வனும், தாமோதரம்பிள்ளை - செல்லம்மா (வரணி) தம்பதியினரின் அருமை மருமகனும், சிவரூபராணியின் அன்புக் கணவரும், லிதாபரன், லிதாவரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), தயாகரன் (யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரத்தினம், தங்கலட்சுமி (கனடா), ராஜேஸ்வரி, செல்வராணி, செல்வமலர் (கனடா), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேந்திரம் (கனடா), பத்மநாதன், ஸ்ரீபாலன், கந்தசாமி (கனடா), ஜெயராஜ் (கனடா), சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக் கிழமை நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்;
நீர்வேலி மேற்கு. (97708)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். கந்தர்மடம் சிவானந்த மகரிஷி யோகா நிலையத்தின் ஏற்பாட்டில் புதிய யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வேதாந்தமட தியான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்து கொள்ள முடியும். நோயாளர்களுக்கு விசேட கவனம் எடுக்கப்பட்டு யோகாப்பயிற்சிகள் வழங்கப்பட்டு நோய்கள் குணப்படுத்தப்படும் என்றும் -

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யோகா நிலையத்துக்கு வந்து பயிற்சியில் இணைய முடியும் என்றும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-10)

## கண்ணீர் அஞ்சலி



### செல்வி வீமராசா மாதுமையாள்

கவிதை எழுதும் உனக்கு
கடைசியாக ஒரு கவிதை
எழுதுகின்றோம்
துர்ப்பாக்கியத்தை
ஏன் எமக்குத் தந்தாயோ?
செல்லுமிடமெல்லாம்
சிரிக்க வைக்கும்
பெண்ணே, மாதுமையே...
மறக்கக்கூடிய மனங்
கொண்டவளா நீ?
நாளை மலர்வாய் என்று
நாமெல்லாம் காத்திருக்க

எங்கிருந்தோ வந்த இடி
எரித்ததுவே ஒரு மொட்டை
கல்வியில் கரைகண்டு
கையிலே பட்டம் கொண்டு
கண்கள் கலங்க வைத்து
காற்றோடு கலந்து
போனாயோ
எடுத்துச் சொல்லித் தேற்ற
எம்மிடத்தில்
வார்த்தையில்லை
அன்னை பூமியிலே
அமைதியாக
உறங்கிக் கொள்வாய்.

என்றும் உன் நினைவில்....
14ஆம், 15ஆம் அணி மாணவர்கள்,
விவசாயபீடம்.

(97707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலிய கடற் கொள்ளையரிடம் சிக்கிய இலங்கையர் விடயத்தில் முன்னேற்றமில்லை

## வெளிவிவகார அமைச்சுக் கவலை

கொழும்பு, ஏப். 29

சோமாலிய கடற்கொள்ளையர்களால் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டிருக்கும் இலங்கைச் சிப்பந்திகள் 36 பேரின் விடுதலை தொடர்பான பேச்சுக்களில் பெரிய முன்னேற்றம் எதுவும் இதுவரை ஏற்படவில்லை என்று இலங்கை வெளிவிவ கார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் முதலாம் திகதி 13 இலங்கையர்களும், அதே மாதம் 23 ஆம் திகதி 23 இலங்கையர்களும் சர்வதேச கடற்பரப்பில் வைத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைது செய்யப்பட்டனர். இவர்களின் விடுதலை குறித்து இவர்கள் பணியாற்றிய கப்பல் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், சோமாலிய கடற்கொள்ளையர்களுக்கும் இடையில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் இப்பேச்சுகளில் இதுவரை பெரிய அளவிலான முன்னேற்றம் இல்லையென வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் நேற்றுக் கவலை தெரிவித்தார்.

# காஸ் விலை அதிகரிக்கப்படுமா?

காஸ் உற்பத்தி நிறுவனங்கள், 12.5 கிலோகிராம் நிறையுள்ள காஸின் விலையை மே மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்குமாறு நுகர்வோர் அதிகார சபையிடம் வேண்டியுள்ளனர்.

இதேவேளை, நுகர்வோர் அதிகார சபையினர் இன்று சந்தித்து காஸின் விலை அதிகரிப்பு சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# திலீபனின் சிலை உடைப்புக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை

யாழ்ப்பாணம், ஏப்.29

நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் சிலை உடைக்கப்பட்ட சம்ப வத்துக்கும் இராணுவத்துக்கும் எந்தவித மான தொடர்பும் இல்லை. அதை இராணு வத்தினர் செய்யவில்லை.

இவ்வாறு குறிப்பிட்டார் 51ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சரத் விஜயசிங்க.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

திலீபனின் தூபி உடைக்கப்பட்ட சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நாம் அவ்வாறு இழிவாக நடந்து கொள்ள மாட்டோம். அதனை உடைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. அதனை ஏன் நாம் செய்யவேண்டும்? அதனால் எமக்கு என்ன லாபம்? அவ்வாறான செயல்களை நாம் ஒருபோதும் செய்யமாட்டோம் - என்றார். (அ-50)

# ஜனாதிபதி - ரொபேர்ட் ஓ பிளேக் பூட்டானில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், அமெரிக்காவின் தென் ஆசிய வலய நாடுகளுக்கான உதவி அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையில் பூட்டானில் பேச்சு நடைபெற்றுள்ளது.

சமீபத்தில் தேர்தல்கள் மற்றும் நாட்டின் ஏனைய விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக எந்த விடயம் குறித்து பேச்சு நடத்தப்பட்டது என்பது குறித்து இதுவரையில் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிடப்படவில்லை.

தேர்தலின் பின்னரான இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைக்கவுள்ள தீர்வுத் திட்டம், இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை மற்றும் இலங்கையின் புதிய வெளியுறவுக் கொள்கை போன்றன தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டிருக்கலாம் என ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# ரணில் - மனோ கணேசன் இன்று இறுதிக்கட்டப் பேச்சு

கொழும்பு,ஏப்.29

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணிலுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்குமிடையில் இன்று இறுதிக்கட்டப் பேச்சு நடைபெறவிருக்கிறது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இருதரப்பினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுகள் தோல்வியடைந்தன.

இதனையடுத்து மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி நாடாளுமன்றத்தில் தனித்து இயங்குவது எனத் தீர்மானித்துள்ளது.

அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் தமது கட்சி நாடாளுமன்றத்தில் தனித்து சுயாதீனமாக இயங்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

தமது தீர்மானம் குறித்து நாடாளுமன்றச் செயலாளருக்கு அறிவிக்கப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-சி)

## கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்களை அண்மைக்காலமாக அகற்றியிருந்தோம். மக்களின் சுதந்திரமான நட மாட்டத்தைக் கருத்தில் கொண்டும், இராணுவம் - மக்களிடையேயான உறவை வலுப்படுத்துவதற் காகவும் நாம் இந்தக் காவலரண்களை அகற்றினோம். யாழ்ப்பாணத்தில் இராணு வத்தினர் இப்போது எந்த விதமான சோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதில்லை. தேர்தல் காலத்தில் மட்டுமே சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஆனால் இப்போது புதிய பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஆள்கடத்தல் , கப்பம் கோரல் ஆகிய சம்பவங்களால் குடாநாட்டு மக்கள் பீதியில் உறைந்துள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது. மக்களின் பாதுகாவலர்கள் என்ற வகையில் அவர்களின் இயல்பு வாழ்வுக்கும், சுதந்திரமான நடமாட்டத்திற்கும் வழி செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்கு உள்ளது. நாம் மக்களுக்காகப் பணியாற்றவே இங்கு கடமையில் அமர்த்தப்பட்டுள்ளோம். எனவே குற்றச் செயல்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடப்பாடும் எமக்குண்டு. அதற்கு பொதுமக்களாகிய நீங்களும் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

### சந்தேகமான நடமாட்டங்கள் குறித்துத் தகவல் தாருங்கள்

வெள்ளை வானில் சிறுவர்கள், பாடசாலை மாணவிகள் கடத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் சிலரைக் கைதுசெய்துள்ளனர். இவ்வாறான கடத்தல் சம்பவங்களின்போது பொது மக்கள் துரிதமாகச் செயற்பட்டு தகவல்களை உடன் எமக்கு வழங்க வேண்டும். இது பற்றி அறிவிப்பதற்கு 021 2222267, 021 2223398 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் பொது மக்கள் 24 மணிநேரமும் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும். அவ்வாறு தெரிவித்தால் நாம் துரிதமாகச் செயற்பட்டு சம்பவ இடங்களுக்கு உடன் சென்று அவற்றைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அத்துடன் சந்தேகத்துக்குரியவர்களின் நடமாட்டத்தை யாராவது அவதானித்தால் அது தொடர்பாகவும் எமக்குத் தகவல் தர முடியும்.

கடந்த வாரம் முதல் சந்தேகத் துக்குரிய வாகனங்கள் அனைத்தும் இராணுவத்தினரால் சோதனையிடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவமும் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் - என்றார். (அ-50)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் தர்மராவ், கே.கே.சசிதரன் ஆகியோர் கொண்ட ஆயம் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு சட்டத்தரணி ஜெயசிங் ஆஜராகி வாதாடியபோது -

இந்த வழக்கில் மத்திய அரசையும், மாநில அரசையும் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார்கள். பார்வதியம்மாளைத் திருப்பி அனுப்பியதில் மாநில அரசுக்கு எந்தப் பங்கும் கிடையாது. வெளிநாட்டவர்கள் வருகையும், அனுமதி வழங்குவதும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். எனவே மாநில அரசை இந்த வழக்கில் சேர்க்கக் கூடாது என்று கூறினார்.

இதை நீதிபதிகள் ஏற்று கொண்டு வழக்கிலிருந்து தமிழக அரசை நீக்க உத்தரவிட்டனர். பின்னர் நடந்த வாதத்தில் மத்திய அரசு சட்டத்தரணி கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் ஆஜராகி இன்று பதில் அளிக்கிறார் எனத் தெரிவித்தார். (அ-சி)

## யாழ்.கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் சென்று பார்வையிடலாம். மக்கள் தமது பொழுதை இன்பமாகக் கழிப் பதற்கு இப்போது கோட்டைப்பகுதியை நாடி வருகின்றார்கள். மக்களின் இயல்பு நிலையைக் கருத்தில் கொண்டு நாம் இதனைச் செய்திருக்கின்றோம்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தவிர்ந்த எந்தப் பகுதிக்கும் பொது மக்கள் இப்போது சென்று வரமுடியும். அதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. யாழ். கரையோரப் பகுதிகளில் சில இடங்கள் மிதிவெடி அபாயம் உள்ளமையால் அவை பொதுமக்கள் நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. மிதி வெடிகள் அகற்றப்பட்டதும் மக்கள் பாவனைக்கு அவை அனுமதிக்கப்படும் - என்றார். (அ-50)

## இலங்கையின் அரசியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து உரையாடியுள்ளனர் என இந்திய வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சகல இன மக்களின் பங்குபற்றுதலுடனும், அம்மக்களின் சம உரிமைகளை அங்கீகரிக்கும் வகையிலும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென இந்தியத் தரப்பு இச்சந்திப்பின் போது வலியுறுத்தி உள்ளது.

அத்துடன் இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் மிகவும் கௌரவமான முறையில் விரைவாக மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் இச்சந்திப்பின்போது இந்தியா வலியுறுத்தியது. (சி)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்கள்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் சர்வதேச நிபுணர்கள் குழு ஒன்றை நியமிக்கத் திட்டமிட்டுள்ளார். ஆனால், இப்படியொரு நிபுணர்கள் குழுவை அமைக்கவேண்டிய தேவை கிடையாது என்றும் அரசுத் தரப்பினரால் போர்க்குற்றங்கள் எவையும் புரியப்படவே இல்லை என்றும் இலங்கை அரசு வலிறுத்தி வருகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான போர்க் குற்றங்களைத் திரட்டும் ஆஸ்திரேலிய இளம் சட்டத்தரணிகளின் நடவடிக்கை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சர்வதேச யூரிகள் ஆணைக்குழுவின் ஆஸ்திரேலியாவுக்கான தலைவர் ஜோன் டோவ்ட், ஆஸ்திரேலிய இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைத் தலைவர் ஆன் மேரி டியூஹீய் ஆகியோர் இந்த அதிரடி நடவடிக்கை குறித்து சர்வதேச ஊடகங்களுக்குப் பேட்டி வழங்கியுள்ளனர். (அ-சி)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமை குறித்து மகிழ்ச்சி

இலங்கை பயங்கரவாதத்தை தோற்கடித்தமை குறித்து பாகிஸ்தான் மகிழ்ச்சியடைந்துள்ளது. பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு இரு நாடுகளும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன.

பாகிஸ்தான் பொருளாதார ரீதியாகக் கடும் சவால்களை எதிர்கொள்கின்ற போதிலும் இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்தும் பங்களிப்புச் செய்யும்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் கடந்த நான்கு வருடங்களில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த் தகத்தின் அளவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

எனினும், எமது வர்த்தக உறவுகளை மேலும் விஸ்தரிப்பதற்கு இணைந்து பாடுபடவேண்டும்.

பாகிஸ்தான் இலங்கைக்குத் தொடர்ந்தும் இராணுவப் பயிற்சிகளை வழங்கும் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்.

இலங்கை விமானப்படைக்கான விமானங்களின் இயந்திரங்கள், உபகரணங்களையும் வழங்கும் - என்றார். (அ-சி)

## மேற்குலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்காசிய வலய நாடுகள் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ள போதிலும், சில வேளையில் பிராந்தியத்தின் பலம் குறைத்து மதிப்பீடு செய்யப்படுகிறது. பிராந்திய வலய நாடுகளுக்கு இடையிலான கூட்டுறவு பல்வேறு வெற்றிகளுக்கு வழிகோலும்.

பிராந்தியத்திற்கு வெளியேயான சக்திகளுடன் உறவுகளைப் பேணுவதில் காட்டும் முனைப்பு, பிராந்திய நாடுகளுக்கு இடையில் காட்டப்படுவதில்லை.

தெற்காசிய வலய நாடுகளுக்கு இடையிலான பிணைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேவை ஏற்படின் தற்போதைய கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடத் தயங்கக் கூடாது.

உலக விவகாரங்களில் தெற்காசிய வலய நாடுகளின் கூட்டுறவு மிகவும் அவசியமானது. சர்வதேச அரங்களில் தெற்காசிய வலய நாடுகளின் குரல் ஒருமித்த தொனியில் ஒலிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கியே எமது நடவடிக்கைகள் நகர வேண்டும்.

குறிப்பாக ஐக்கிய நாடுகளின் விவகாரங்களில் பிராந்திய நாடுகளுக்கு இடையில் அதிக பிணைப்பு அவசியம். உலகின் ஏனைய வலய நாடுகளுக்கு இடையில் காணப்படும் சில வலுவான அமைப்புக்களை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் செயற்பட வேண்டும் - என்றார். (அ-சி)

8ம் திகதி நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான தொடர் வகுப்புக்கள்
நுண்ணறிவு, மொழித்திறன்
ஆரம்பம்: 29.04.2010 (இன்று) Thur, 3.30pm
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி - 2010
விசேட கையேடு
P.கமல்தாசன்
கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், அன்னை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2012
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்: May 01 Sat 8pm
NEC
Clock Tower Road, Jaffna

முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி நூல்கள்
08.05.2010இல் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான நூல்கள்.
01. P.உமாசங்கர் - 300.00
02. த.தவசேகர் - 250.00
03. P.கமலதாஸ் - 250.00
(கடந்த கால வினா விடைகளுடன், எதிர்பார்க்கை வினாக்கள்)
(C/567054)
பூபாலசிங்கம் புத்தகசாலை
212, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொ.பே. 0212221637
இல 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212226693

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org